# மக்கத்து மலரே மதீனத்து மணியே



ஏ.என்.எம். ஷாஜஹான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவற்ற அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திரு நாமத்தால் ஆரம்பிக்கின்றேன்

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO 07.
.........2013

# மக்கத்து மலரே மதீனத்து மணமே

வள்ளல் நபி (ஸல்) அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

## கவிச்சரம்

கவிஞர் – "தாஜுல் அதீப்"
(இலக்கிய வேந்தர்)

அல்ஹாஜ் ஏ. என். எம். ஷாஜஹான்

ஆதவன் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAKKATHTHU MALARAY-
# MADHEENATHTHU MANAMAY

Poems

Life History In Brief of Prophet Muhammadh Sallallaahu Alaihivasallam


Author's Name :- "Thajul Atheeb"
Alhaj A.N.M. Shajahan

Address :- 20/3, Cassim Lane,
Puttalam.
Sri Lanka.


297.63
34979


Publishers :- ATHAVAN PUBLISHERS
30/3 , Dam Street,
Colombo-12.

Printers :- MEIHANDAN PRESS LTD.

Type Setting :- SUMATHY PRINTERS

Distributor :- LANKA BOOK DEPOT
GL,1-2, Dias Place,
Goonasingapura,
Colombo - 12.

First Edition :- 1996 November.

Price :- Rs. 90/-


25121

29/1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமாக வை வும்
அடையாளங்கள் த்த
வேண்டாம்



## சமர்ப்பணம்

அகிலங்கள் அனைத்திற்கும் அருட்கொடையாக, அல்லாஹ்வின் ஆலாவின் திருத்தூதராக வந்த எம் இதயங்களின் மாமன்னர் எம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும்; அவர்களின் குடும்பத்தினர், இறவாப் புகழடைந்த அன்புத் தோழர்கள், அவர்களைப் பின்பற்றிய இறை நேசர்கள், உம்மத்தினர் அனைவர்க்கும் இந்நூலை நெஞ்சம் நிறைந்த பாசத்தோடு சமர்ப்பணம் செய்கின்றேன்.

ஆசிரியர்.

## அர்ப்பணம்

என்னை ஈன்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய எனது அருமைப் பெற்றார்களான
தந்தையார் முஹம்மது அபூபக்கர் அசன் நெய்னா மரைக்காயர் அவர்களுக்கும்
தாயார் முஹம்மது இபுறாகிம் ஜொஹறா பீவி அவர்களுக்கும்,
இந்நூல் அர்ப்பணம்

– ஆசிரியர்.

".....என் இறைவனே! நான் குழந்தையாக இருந்த போது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்துப் போஷித்த பிரகாரமே, நீ அவ்விருவர் மீதும் அன்பும் அருளும் புரிவாயாக......" (அல்குர்ஆன்–17: 24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலா பூஷணம்" – கவிஞர்
ஜனாப் எம்.ஏ.எம். ஜவாத் மரைக்கார்
அவர்கள் தரும்

அணிந்துரை.

கவிதைக்கும் செய்யுளுக்குமிடையே வித்தியாசமுண்டு. செய்யுள் வேறு. கவிதை வேறு, புனைகதைக்கும், உரை நடைக்குமிடையில் தொடர்பு எப்படியோ,கவிதைக்கும் செய்யுளுக்குமிடையிலான தொடர்பும் அப்படியே. கவிதையும், புனைகதையும் இலக்கியங்கள், செய்யுளும் உரை நடையும் அவற்றைக் காவிச் செல்லும் ஊர்திகள். உரைநடையைப் போலவே செய்யுள் நடையிலும் இலக்கியம், இலக்கணம், கடிதம், வைத்தியக் குறிப்புகள்.... எதனையும் ஆக்கலாம். உரை நடை வளர்ச்சி பெறுவதற்கு முன்பு, சகலதும் செய்யுள் மயமாகவே இருந்தன. செய்யுள் இலக்கணக் கட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் ஏரி. கவிதையோ கட்டுடைத்துப் பாயும் நதிப் பிரவாகம்.

கவிதை எழுதுவதற்கு செய்யுள்தான் வேண்டுமென்றில்லை. பலர். கவிதை ஆக்குவார்கள், அதில் செய்யுள் இருக்காது. வேறு பலர் செய்யுள் ஆக்குவார்கள் அதில் கவிதை இருக்காது. செய்யுளிலேயே நல்ல கதைகளை ஆக்குவோர் சிலரே. கவிதை என்ற பெயரில், செய்யுளுமில்லாமல் கவிதையுமில்லாமல் சில வசனக் கோப்புகளை எழுதி வைப்பவர்களை இங்கு நாம் கருத்திற் கொள்ளத் தேவையில்லை. மொத்தத்தில், கவிதைக்குரிய லட்சணங்கள் இல்லாத எதுவும் கவிதையன்று . அது செய்யுளில் அமைந்தாலென்ன? அமையாவிட்டாலென்ன? பாத்திரம் கண்ணாடியாயிருந்தாலென்ன? களிமண்ணாயிருந்தாலென்ன? அது ஏந்தியிருப்பது பழரசமாக இருக்க வேண்டும்.

புதுக்கவிதையின் மரபுக்குப் பின்னர், செய்யுள் வடிவில் கவிதை படைக்க முன்வருவோர் தொகை கணிசமாகக் குறைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் யாப்பிலக்கணத்தை நன்கு அறிந்திருந்தும், அந்த மரபின் அடித்தளத்திலிருந்து, புதுமைக் கோபுரத்தைக் கட்டியெழுப்ப விரும்புவோர் ஒரு புறமும் யாப்பிலக்கணத்தின் அரிச்சுவடி கூட அறியாதவர்களாய், இந்தப் பழம் புளிக்கும் என்ற தோரணையில் எழுதுவோர் இன்னொரு புறமும் கவிதை எழுதவேண்டுமென்ற ஆர்வத்தை முதலீடாகக் கொண்டோர் வேறொரு புறமுமாக, புதுக்கவிதை எழுதுவோர் தொகை புற்றீசலாகப் பெருகியிருக்கிறது. இவர்களுக்கு மத்தியிலே செய்யுள் இலக்கியம் மாண்டு விடாதிருக்க மரபு தழுவி எழுதிக் கொண்டிருக்கும் கவிஞர்களில், அல்ஹாஜ் ஏ.என்.எம். ஷாஜஹான் அவர்களும் ஒருவராகி ஆழத் தடம் பதித்து நிற்கின்றார். நாம் இப்போது நுகர்ந்து ஆரோக்கியமான சுகானுபவத்தைப் பெற அவர் அளித்திருப்பது, மக்கத்து மலரின் மதீனத்துச் சுகந்தத்தை. இஸ்லாமிய பக்தியையும், இஸ்லாமிய வரலாற்றையும் கவிதையில் வெளிப்படுத்துவது ஆழ்கடலினுள் மூழ்கி முத்தெடுத்து வருவதற்கு ஒப்பானது. முத்தெடுக்கும் ஆர்வமேலீட்டால் மூழ்குவதற்குத் துணிச்சல் வரும். முத்தெடுத்துக் கரையேறிய பின் எய்தும் இன்பத்திற்கு அளவிருக்காது. ஆனால் மூழ்கி எழுவதற்குள் எதிர் நோக்கும் ஆபத்துக்கள் அநந்தம். சில வேளை அந்தக் கடலே எமக்கு கபுராகி விடலாம். கவிஞனின் நிலைப்பாடும் இது தான்.

அவதானப் பிசகினாலோ, மார்க்க அறிவின்மையாலோ இஸ்லாத்தின் கோட்பாடுகளுக்கும் சட்ட வரம்புகளுக்கும் அப்பால் கவிஞன் ஆகர்ஷிக்கப்படும் ஆபத்து நேர வாய்ப்புண்டு கவிதையில் இழையோடும் அதீத கற்பனைகள், சொன்னயம், அணி நயம் போன்றவற்றால் மார்க்கத்தின் அத்திவாரத்தையே தகர்க்கக் கூடியதாகவும் வரலாற்றுத் திரிபுகள் நிறைந்ததாகவும் ஆக்கம் அமைந்து விடலாம். நம் முன்னோர் அளித்துள்ள இஸ்லாமிய இலக்கிய முதுசங்கள் பலவற்றிலே இக்குறைபாட்டை நாம் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான தவறுகள் தனது ஆக்கத்தில் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் அல்ஹாஜ் ஷாஜஹான் சற்று அதிகமாகவே சிரத்தை எடுத்துள்ளார் என்பதை, இந்நூலை வாசிப்போர் புரிந்து கொள்ளலாம். இந்த விடயத்தில் அவர் கொண்ட அச்ச உணர்வை தனது முன்னுரையிலும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். நபிகள் கோமானின் வரலாற்றை செய்யுள் நடையில் கவியாக்கம் செய்யும் ஆர்வம் அவரை உந்திய போதும், அச் செய்யுள்கள் செயற்கைச் சாந்துகளால் அளவு கடந்து சோடிக்கப்பட்டு உண்மை வரலாற்றைக் கறைப்படுத்திவிடாமல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காப்புக்கான வியூகமொன்றை அமைத்துக் கொண்டுள்ளார். இது சரியானதே. இதன் காரணமாகவோ தெரியவில்லை கவிதைகளில் கவித்துவம் சற்றுக் குன்றி செய்யுள் தன்மை மேலோங்கி நிற்கின்றது. இதற்காக, இந்நூலில் கவித்துவம் வரண்டு போய் விட்டதாக யாரும் கூறிவிட முடியாது. தேசியமட்டத்திலே பல்வேறு கவிதைப் போட்டிகளில் வெற்றிகளை ஈட்டிக்கொண்டுள்ள அவரது கவிதா விலாசத்தை இந்நூலில் பல்வேறு இடங்களிலே நாம் காண முடியும். வாசிப்பவர் தம் நாவைக் கடித்துக் கொள்ளும் சொற்களையோ பல்லுடைக்கும் பதங்களையோ அவர் பாடல்களில் காண்பது அரிது பொருள் தேடி அகராதியைப் புரட்டத் தேவையில்லை. எளிய சந்தம். எளிய பதங்கள், சலசலக்கும் அருவியென தங்குதடையின்றிச் செல்லும் மொழிநடை, செய்யுள் நடை கைவந்த வல்லாளராக நின்று இவர் படைத்த பாக்கள் பரவசமூட்டுவன.

முஹம்மது நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை அவர்கள் தம் போதனைகள் யாவும் முஸ்லிம்களால் மாத்திரமன்றி, பிற மதத்தவராலும் போற்றப்படுவன. அவர்கள் கொண்ட, கொடுத்த வழிமுறைகள் உலக மாந்தருக்குப் பொதுவானவை. இலக்கியமும், அனைவருக்கும் பொதுவானதே.

எனவே எந்த வழியில் பார்த்தாலும் இந்நூல் இன மத பேதமின்றி அனைவரும் வாசித்துப் பயன் பெற வேண்டியதொன்று. முஸ்லிம்களால் ஆக்கப்படும் இலக்கியங்களில் குறிப்பாக இஸ்லாமிய இலக்கியங்களில் அறபிச் சொற்கள் விரவி வருவது தவிர்க்க முடியாதது. எனினும் இவ்வாறான சொற்களுக்கு ஆங்காங்கே பொருளும் விளக்கமும் அளித்துள்ளார் நூலாசிரியர். இது முஸ்லிம் அல்லாத வாசக நெஞ்சங்களுக்கு பேருதவியாகவிருக்கும்.

கவிஞர் அல்ஹாஜ் ஏ.என்.எம். ஷாஜஹான் பழைமை இலக்கியங்களைக் கற்றவர், கற்பித்தவர், இப்போது இலக்கியங்களைப் படைப்பதில் உற்சாகமாக ஈடுபட்டுவருபவர். அவரது அறிவும் ஆற்றல்களும் அனுபவங்களும் தலை சிறந்த கவிதைகளை—காப்பியங்களைத் தொடர்ந்து ஆக்கி சமூகத்துக்கு அளிக்க வேண்டுமென்பதே எமது அவா.
இறைவன் அதற்கு அருள்பாலிப்பானாக.

—ஜவாத் மரைக்கார்

பெரிய பள்ளி வாசல் வீதி
புத்தளம்

23. 10.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் விவகார முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான

அல்ஹாஜ் ஏ.எச். எம். அஸ்வர் அவர்களின்

## வாழ்த்துரை

புத்தளப் பிரதேசத்தின் வரலாற்றினை ஆய்ந்தறிந்து வரலாற்றுத் துறைக்கு ஒரு சிறப்பான நூலை பங்களிப்புச் செய்தவர் அல்ஹாஜ் ஏ.என்.எம். ஷாஜஹான் அவர்கள். கல்வித்துறையில் பல்வேறு படிகளில் தமது சேவையைத் தொடர்ந்து ஒரு கல்வி அதிகாரியாக உயர்வு பெற்ற நிலையில் இன்றுஅவர் ஓய்வு பெற்றுள்ளார்.

அவர்தம் சிறப்பான இலக்கியப் பணியின் மற்றொரு மைல்கல்லாக இப்போது நம் கரங்களுக்கு ஒரு மகத்தான கவிதைப் பொக்கிஷத்தைத் தந்துள்ளார். அன்னாரின் உயர்வான இஸ்லாமிய, இலக்கியச் சேவைகளைப் பாராட்டி 1993ஆம் ஆண்டில், நான் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சராக இருந்த போது, எமது மூன்றாவது "வாழ்வோரை வாழ்த்துவோம்" பாராட்டு விழாவில் அவருக்கு "தாஜுல் அதீப்" (இலக்கிய வேந்தர்) என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கக் கிடைத்தமை எமது பாக்கியமே.

வரிக்குவரி சுவை குன்றாது முக்கிய நிகழ்வுகளை ஓசைக்கு உவப்பாகக் கவிதைகளாக யாத்துள்ளார். படிக்கும் பாமரனும் அவற்றைப் புரிந்து கொள்ளக் கூடியதாய் இலகுவான வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டிருப்பது அவரது கவிதையின் சிறப்பெனப் பாராட்டத்தக்கதாகும்.

பெருமானாரின் வாழ்வையும் வரலாற்றுப் பின்னணிகளையும் முற்றாக ஒரு நூலில் தந்து விட முடியும் என்பது இயலாத ஒரு பெரும் முயற்சியாகும். ஆயினும் பெருமானாரின் பிறப்பிலிருந்து 'வபாத்து' வரையிலும் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளைத் தொட்டுக்காட்டிக் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான கவிதைகளுக்குத் தரப்பட்டிருக்கும் அடிக்குறிப்புகளும், சொல் விளக்கங்களும் கவிதையின் பொருளைத் தெளிவுபடுத்துவதோடு, நடைபெற்ற நிகழ்வுகளுக்கு ஆதாரபூர்வமான சான்றுகளையும் தருகின்றன.

திருமறையின் வசனங்களும் பெருமானாரின் பொன்மொழிகளும் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தப்பட்டுச் சிறப்புச் சேர்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகன் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற கவிஞரின் ஆதங்கம் ஈங்கு புலப்படுவதோடு வெற்றியுங்காண்கின்றது.

அறபுப் பதங்களையும் இஸ்லாமியப் பெயர்களையும் அவ்வப்போது கவிதைகளில் தமிழோடு தமிழாகக் கலந்து கவிதையின் ஓசைக்குப் பங்கமுறாது கையாளப்பட்டிருப்பது கவிஞரின் இலக்கண ஆளுமையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது என்பது எனது அறிவுக்குட்பட்ட மதிப்பீடாகும்.

தமிழில் கவிதை என்ற உருவில் இன்று வெளிவருகின்ற மொழியை இழிவுசெய்யும் கொச்சைத் தனத்திலிருந்து தம்மை வேறுபடுத்தி, கடுமையான இலக்கண யாப்பு விதிகளிலிருந்தும் குற்றமற்றவாறு சற்று விலகி மொழிக்கு அழகு சேர்க்கும் ஓர் உன்னத இலக்கியமாக இந்நூலை அல்ஹாஜ் ஷாஜஹான் அவர்கள் யாத்திருப்பது தமிழ் மொழிக்குச் செய்துள்ள ஒரு சிறப்பான பணியாகும்.

பெருமானாரின் வாழ்வும் அவர்கள் தம் வாழ்வில் அவ்வப்போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளும் வெவ்வேறு மகுடங்களில் தலைப்புக்கொரு கவிதையாக, இருநூற்றைம்பது கவிதை முத்துக்கள் சரமாகத் தொடுக்கப்பட்டு "மக்கத்து மலரே மதீனத்து மணமே" என்னும் அழகிய தொகுப்பாக அமைந்துள்ள இந்நூல் இஸ்லாமிய சமுதாயத்திற்குக் கிடைக்கப் பெற்ற ஓர் அழியாச் செல்வமாகும்.

பெருமானாரைப்பற்றி பன்னூறு நூல்களும் கவிதைப் படைப்புகளும் வெளிவந்துள்ள போதும் சமுதாயத்தின் அடிமட்ட வாசகன் வரை கற்றுத் தெளிவு பெறும் வகையில் அமைந்தவை மிகக் குறைவே.

பெருமானார் அவர்களைப்பற்றி முன்னர் பேராசிரியர் கா.அப்துல் கபூர் அவர்கள் யாத்தளித்த "நாயகமே" கவிதை நூலின் பின்னர் நான் படித்துச் சுவைத்த மிகச் சிறந்த ஒரு கவிதை நூலாக இதனைக் கருதுகின்றேன்.

அல்ஹாஜ் ஷாஜஹான் அவர்கள் எல்லாம் வல்ல இறைவன் அருளால் இன்னும் பல்லாண்டு தேக நலத்தோடு வாழ்ந்து, இவ்வாறான அறிவுக் கருவூலங்களை இஸ்லாத்திற்கும் தாய்மொழிக்கும் யாத்துத் தந்து உலகுள்ள வரை பெயர் நிலைக்க வாழ வேண்டுமென ஏகனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர்
பாராளுமன்ற உறுப்பினர், முஸ்லிம் விவகார முன்னாள் இராஜாங்க அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நஜ்முல் உலூம்" - (அறிவுத்தாரகை)
கவிஞர் எம்.எச்.எம். ஷம்ஸ் அவர்கள்
உவந்து சூட்டிய

கவியாரம்

## "இங்கேயும் ஒரு தாஜ்மஹால்"

மக்கத்து மலரை
மதீனத்து மா மணத்தை
ஆரமாய்த் தொடுத்துள்ளார்
அறிஞர் ஷாஜஹான்.

புத்தளத்து வரலாற்றை
பண்பாட்டை
ஆய்வு செய்து
அறிஞர் என மகுடம்
சூடியவர் ஷாஜஹான்.
இந்த அறிஞனுக்குள்
இன்னுமொருகலைஞரா?
இரட்டைக் கீரீடம்
ஏந்திக் கொள்வோர்
ஆயிரத்துள் ஒருவர்
அவர்களுள் - இந்த
ஷாஜஹான் ஒருவர்

மக்கத்து மலரே
மதீனத்து மணமே
உவமை சார்ந்த
மகுடம்
மா நபி என்ற
மாமலர் அன்று
மக்கத்தில் பூத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதீனத்தில் கமழ்ந்தது
இதுவே—
தலைப்பின் ரகசியம்
இசைப்பாடல்
கவியாரம்
இயற்றிய ஷாஜஹான்
முதுமை நினைவுகளை
முத்திரை குத்தவில்லை
கற்பனைத் தென்றலுக்கு
கதவடைத்து விடவில்லை
பூங்கொடிதான் முதிர்ந்தது
பூத்துளதோ புது மலர்

நபிகளையும் பாடாத
நாவுகள் அரிது
நபி புகழ் எழுதாத
பேனாக்கள் இலது
சீறாவை தந்த
உமறு தொட்டு
நபி காவியம் தந்த
மேத்தா வரை
ஆயிரம் ஆயிரம்
அருங்கவிச் செம்மல்கள்
அணிவித்த நகைகளால்
தமிழன்னை
தலை நிமிர்ந்தாள்
அந்த வரிசையில்
சின்னஞ் சிறு இலங்கையிலும்
இராமர் அணைக்கு
பங்களித்த
சிற்றணில்கள்
இருக்கின்றன.
இந்நூல்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கோர் ஆதர்ஷம்
ஆயிரம் கிலோவில்
காவியம் பாடிய
காலம் ஒன்றிருந்தது
மானிட வாழ்க்கை
கடிகார முள்ளில்
தொங்கித்தவிக்கும்
இன்றைய–
கணனி யுகத்துக்காய்
வள்ளல் நபி
வாழ்க்கையை
வாமன வடிவத்தில்
வலம் வரச் செய்துள்ளார்
கவிஞர் ஷாஜஹான்

அறுசீர் விருத்தத்தில்
அணி நூல் தவறாமல்
இரு நூற்றைம்பது
இலகு செய்யுளில்
பெருமான் வாழ்வுப்
பெருமையைக் கடுகாக
தருவதே சிரமம்
தந்துள்ளார் நம் கவிஞர்

ஆற்றொழுக்குப் போல்
அழகுத் தமிழ் நடையும்
இதயத்தை ஈர்க்கும்
எளிமையும்
செயற்கைத் தனம் காட்டா
யாப்புக் கட்டும்
கற்பனை வளமும்
கவித்துவச் சிறப்புக்கு
கட்டியம் கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகளார் வாழ்வு நெறி
இறைக்க இறைக்க
ஊறும் ஊருணி
சந்திர சூரியர்
உலவும் காலமெல்லாம்
ஊருணி குவித்த
சுகானுபவங்கள்
சிருஷ்டித்ததாய்
பரிமாறி பரிமாறி
பாரெல்லாம் பரவும்

உப்பிட்டவரை
உள்ளளவும் நினை என்றார்
உப்பிட்ட மீனே
ஊழி வரை இருக்கும்
உப்பு நுரைத்திடும்
கடற்கழி ஓரம் வாழ்
ஒப்பற்ற கலைஞர்
ஷாஜஹான் தந்த கவி
உப்புள்ள சுவை
உண்டியாகட்டும்.

ஆக்ரா நதிக் கரை
அழகுத் தாஜ்மஹால்
ஷாஜஹான் புகழை
செகமெல்லாம் பறை சாற்றும்
இயற்கை சீறினால்
தாஜ்மஹால் அழியும்
சீற்றம் எதற்கும்
ஈடு கொடுக்கின்ற
தாஜ்மஹால்களை—இந்த
ஷாஜஹான் தரட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்பணிப்பாளரும்,கல்வித் துறை வல்லுனரும் அறிஞருமான அல்ஹாஜ் எம்.எச்.எம். மகுரூப் மரைக்காயர் அவர்கள் அளித்த

## மதிப்புரை.

மக்கத்து மலரே மதீனத்து மணமே என்ற இம்மலரை முகர்ந்து நுகர்ந்தேன். பரிமளமான சுகந்த மணம் வசந்தமாக வீசுகின்றது

அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாக வந்த அண்ணல் முஹம்மத் (ஸல்) அவர்களின் அற்புத வாழ்வின் அழகிய நிகழ்வுகளை முழுமையாக எழுதி நூலாக வெளியிட எவராலும் முடியாது

எனினும் கவிஞர் ஷாஜஹான் அவர்கள், தனித்தனித் தலையங்கங்களின் கீழ் இரு நூற்றைம்பது பாக்களில் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்று நிகழ்வுகளை ஆற்றொழுக்குப் போல இலகுவான தமிழில் சுருக்கமாக வடித்துள்ளமையைப் பாராட்டுகின்றேன்.

அல்ஹாஜ் ஷாஜஹான் அவர்கள் தொழில் ரீதியில் என்னுடன் நெடுங்காலமாகத் தொடர்புடையவர்கள். ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரியாக நீண்டகால சேவையாற்றி ஓய்வு பெற்றிருக்கின்றார்கள். அவர் எழுத்தாளர், கவிஞர், பாடகருங்கூட. தொழிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர்களின் பேனா ஓயவில்லை

முதிய வயதிலும் இத்தகைய நல்ல நூல்களை யாத்து வெளியிடும் அவரது முயற்சிக்கு அல்லாஹ்த ஆலா துணைபுரிகின்றான். அவனுக்கே புகழ் அனைத்தும் சேரும் அவர்களின் முயற்சிக்கு அனைவரும் ஆதரவளிப்பது கடமையாகும்.

வரலாற்றுத் துறையிலே இவர்களின் ஆக்க பூர்வமான,புத்தளம் வரலாறும், மரபுகளும் என்ற நூல், 1994 ஆம் ஆண்டில் அரசு சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றமை குறிப்பிடத் தக்கது

வரலாற்றுத் துறையுடன் நின்று விடாது கவிதைத் துறையிலும் இவர்தம் பங்களிப்பைச் செய்துள்ளமை இவர்களின் திறமைக்குச் சான்றாகும்.

இவரின் சேவைக் காலத்திலேயே சகல துறையிலும், குறிப்பாக கல்வி முகாமைத்துவ துறையில் சிறந்து விளங்கியமையை நான் அறிவேன்.

NP 34979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை வாசித்து புரிய பெரிய பண்டிதத் தன்மை தேவையன்று. வாசிக்கத் தெரிந்த மேற்றர மாணவர்களும் படித்து விளங்கிப் பயன் பெற முடியும். மேற்றர மாணவர்க்கு இலக்கியத் துறையில் உப பாட நூலாகவும் பாவிக்கத் தகுதி வாய்ந்தது இக்கவிதைச் சரம்.

இந்நூலை யாவரும் படித்துப் பயன் பெற வேண்டுமென விரும்புவதுடன் குறிப்பாக ஆசிரியர்களும், மாணவர்களும் இந்நூலின் மூலம் பிரயோசனத்தை அடைவார்கள் என நம்புகின்றேன்.

தாஜுல் அதீப் அல்ஹாஜ் ஏ.என்.எம். ஷாஜஹான் அவர்களுக்கு அல்லாஹ்த ஆலா நல்ல உள, உடல்ஆரோக்கியத்தையும்,நலமான வாழ்வையும் நல்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

எம். எச்.எம்.எம்.மகுரூப் மரைக்காயர்

நெடுங்குளம் வீதி,
புத்தளம்
23.10.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜின்னாஹ்

Dr.A. JINNAH SHERIFUDEEN
16,School Avenue,
Off Station Road, Dehiwela
Sri Lanka T. P. 730378

14.06.96

என்றும் என் அன்புக்கும் மரியாதைக்குமுரிய அல்ஹாஜ் ஷாஜஹான் அவர்கட்கு, அஸ்ஸலாமு அலைக்கும்,

எதிர்பாராத எனது கடிதம் உங்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியிருக்கும் என எண்ணுகின்றேன். ஒரு மன நிறைவின் பிரதிபலிப்பாகவே இதனை எழுதுகிறேன்.

'மக்கத்து மலரே மதீனத்து மணமே' படித்தேன். இப்போது இன்னும் உங்கள் ஆச்சரியம் அதிகரித்திருக்கலாம், எப்படி அது என் கைக்குக் கிடைத்திருக்குமென

. அல்ஹாஜ் அஸ்வர் எம்பி. யவர்கள் தான் படித்துச் சுவைத்த இன்பத்தை நானும் பெற வேண்டுமென அந்தக் கவிதைச் சுளையை எனக்கும் தந்தார்கள்.

அன்பான சோதர, மிக அற்புதமான ஒரு சிருஷ்டியை இஸ்லாத்திற்கும், தமிழுக்கும் தந்துள்ளீர்கள். மிகக் கூடிய விரைவில் அது உலகறியப்பட வேண்டும் என்ற என் அடங்காத ஆசையே இதனை எழுதத் தூண்டியது.

ஒவ்வொரு பாடலும் தேனாக இனிக்கின்றன. ஒரே மூச்சில் படித்து விட வேண்டும் என்னும் ஆசையைத் தூண்டுவதாக பாடல்களை யாத்துள்ளீர்கள்.

உண்மைச் சம்பவங்களை வைத்து நயமான இலகுவான சொற்களைக் கொண்டு கவிதைகளை யாத்துள்ளீர்கள். அறுசீர் விருத்தங்கள் மெல்லெனப்பாயும் நல்லதோர் நீரோடை போல மனதுக்கு இதமளிக்கின்றன. இது கால வரை நீங்கள் கவிதை உலகிற்கு எவ்வளவோ செய்திருக்கலாம். கவிதை உங்களுக்குக் கைவந்துள்ள மேன்மை கண்டு பூரிக்கின்றேன். கூடிய விரைவில் இதனை நூலுருவாக்கி விடுங்கள். இலக்கிய உலகில் உங்களுக்கோர் நிலையான இடத்தை 'மக்கத்து மலரே மதீனத்து மணமே' தந்து விடும்.

. . . மனதில் ஏற்பட்ட, அல்ல உங்கள் கவிதைகள் ஏற்படுத்தி விட்ட உவகையை வெளிப்படுத்தாது என்னால் இருக்கவியலவில்லை எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நீடித்த ஆயுளையும் தேக நலத்தையும் அருளப் பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

*வஸ்ஸலாம்*
*இவ்வண்ணம்*
*அன்பொடு*

ஜின்னாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

"பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்"
"நஹ்மதுஹு வநுஸல்லி அலா றசூலிஹில் கரீம்"

மக்கத்தின் இருட்பாலையிலே பூத்த ஒரு மலர் மதீனத்துப் பசுஞ் சோலையில் மலர்ந்து பாரெங்கும் மணம் பரப்பியது.

அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாக அல்லாஹ்தஆலா அனுப்பிய அருமைத்தூதர் அண்ணல் நாயகம் நபி முஹம்மத் (ஸல்) அவர்களே அப்பெருமலர்.

அன்னாரின் வாழ்வின் வரலாற்றை முழுமையாக எழுதி முடியாது. எனினும், நெஞ்சம் நிறைந்த அவர்களின் மேல் வைத்த பேரன்பினால் அவர்களின் வரலாறெனும் மா பெருங்கடலிலிருந்து சில துளிகளைப் பெற்று அவைகளைக் கவிதை வடிவிலே உங்கள் முன் வைத்துள்ளேன்.

தமிழ்த் தேன் கலந்த கவிதைப் பூக்களை நுகர்ந்து, சுவைத்து அனுபவிப்பது உங்களைச் சார்ந்தது. வாடாத பூக்களாக இக்கவிதைப் பூக்கள் மணம் வீச ஏக வல்ல இறைவன் அருள்புரிவானாக.

இக்கவிதையை சாதாரண வாசிப்பறிவைக் கொண்டவரும் விளங்கிப் படிக்க வேண்டுமென்பதே எனது நோக்கமாகும். அதீத கற்பனைகள், புகழ்ச்சிகள், வர்ணிப்புகள் இவைகளை இயன்ற வரை மிகக் குறைவாகவே கையாண்டுள்ளேன். இலகுவான தமிழ்ச் சொற்களே பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன. கவிதைகளிலே இடையிடை கலந்துள்ள அறபுச் சொற்களுக்கு மேற்கோள் குறிகளிட்டு ஆங்காங்கே விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. ஆதலின் முஸ்லிமல்லாத பெருமக்களும் பொருளறிந்து வாசித்து விளக்கம் பெறுவார்கள்.

ஒவ்வொரு கவிதைக்கும் தலைப்புகள் தரப்பட்டுள்ளன தேவையானபோது கவிதைகளின் கீழ் விளக்கங்களும் உள்ளன. ஆழமான யாப்பிலக்கணக் கட்டுப்பாட்டிலிருந்து சிறிது விலகி சந்த நயங்களுக்கு கவிதைகளில் முன்னிடம் அளிக்கப்பட்டுள்ளமையைத் தெரிவிக்கின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரைஅணிவித்த 'கலாபூஷணம்'கவிஞர் புத்தளம் ஜனாப் எம்.ஏ.எம்.ஜவாத் மரைக்காயர் அவர்களுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை வழங்கிய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய என் மதிப்புக்குரியஅல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களுக்கும், நூலுக்குக் கவியாரம் சூட்டிய கவிஞரும் பல்கலைச் செல்வருமான "தாஜுல் உலூம்(அறிவுத் தாரகை) ஜனாப் எம்.எச்.எம்.ஷம்ஸ் அவர்களுக்கும், மதிப்புரை தந்த கல்வி இயக்குநர் அறிஞர் அல்ஹாஜ் எம்.எச்.எம்.எம்.மகுரூப் மரைக்காயர் அவர்களுக்கும் இந்நூலின் கையெழுத்துப்பிரதி கைக் கெட்டியதும் வாசித்துப் பார்த்து எனக்கு கடிதம் எழுதி என்னை ஆச்சரியத்துள்ளாக்கிய அருமை நண்பர்– கவிஞர்– எழுத்தாளர் டொக்டர் ஏ.ஜின்னாஹ் ஷெரிபுதீன் அவர்களுக்கும் எனது உளம் உவகை பூத்த நன்றிகளை நவில்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு எனது தோளோடு தோள் நின்று பல வகையிலும் ஒத்துழைப்பும், உற்சாகமும், தந்து அச்சுப் பிரதிகளை சரிபார்த்து உதவி புரிந்த பிரபல நாவலாசிரியர் 'கதைவாணன்' ஜனாப் எஸ்.எப்.எல். மொஹிடீன் ரஜா அவர்கட்கு எனது விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

என்னை அறிமுகப்படுத்தி குறிப்புரையொன்றை வழங்கிய எனது மாணாக்கரும், பிரதி பொலிஸ் அதிபதியுமான அல்ஹாஜ் எம். எஸ். எம். நிஸாம் அவர்கள் பெரு நன்றிக்குரித்தவராவார்.

நூலை ஆக்கும் போதும், அதை அச்சிடத் தயங்கிய போதும் எனக்கு என்றும் அருகிருந்து உற்சாகமூட்டிய எனது அருமை மனைவி ஹாஜியானி சித்தி அதீபா ஷாஜஹான் அவர்கட்கு நன்றி நவில்கின்றேன்.

இந்நூலை குறுகிய காலத்துள் அழகுற அச்சிட்டுத் தந்த கொழும்பு மெய்கண்டான் அச்சக உரிமையாளர் திரு. அருணகிரிநாதன் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட சக உரிமையாளர்கள், ஊழியர்கள் அனைவர்க்கும் நன்றிகள் உரித்தாகும்.

இந்நூல் ஸ்கொலர் பதிப்பகத்தின் வெளியீடாக வருவதில் பெருமகிழ்வடைகிறேன். இந்நூலை உருவாக்குவதில் சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் இறைவன் நல்லருள் புரிவானாக ஆமீன்.

இறைவா! எம் பிழைகளை பொறுத்தருள்வாயாக.

*அல்ஹம்துலில்லாஹ்*

ஏ.என்.எம். ஷாஜஹான்
20/3, காஸிம் ஒழுங்கை
புத்தளம், இலங்கை
23. 10. 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் உள்ளே

இதழ்கள் வண்ணம்.

இதழ் இல.

1. அல்லாஹ்வை வேண்டுவோம்.
2. கடல் நீரைப் பருக எண்ணும் சிட்டு
3. குரு நபி பெருமையைக் கூறிமுடிக்கலாமா?
4. ஆசி பெற்ற நிலம்
5. அறபியர் சிறப்பு.
6. அந்தகார வாழ்வு.
7. அருளொளி அரும்பியது
8. குறைஷியரின் குலக் கொழுந்து
9. அனைத்துலகங்கட்கும் அருட்கொடை
10. கண்ணிய நபிகளின்றி படைப்பினமில்லை
11. அருட்கொடை நபி பிறந்தார்.
12. செவிலித்தாயிடம் வளர்ந்தார்.
13. ஆடு மேய்த்த அகிலத்தவர்க்கிடையர்
14. அனாதை மதலை.
15. குறையின்றி வளர்ந்த குழந்தை.
16. பாட்டனாருக்குப் பகரமாய் பாதுகாவலர்.
17. பொருத்தமானவர் யார்?
18. அருட் பரிசு அபுத்தாலிபுக்கு.
19. வாச மென் மலர்.
20. விளையாட வந்தோமில்லை
21. நூற்கலை பயிலா நுண்ணறிவாளர்.
22. கல்லாத ஞானக் கருவுரு
23. அறிவுக் களஞ்சியத்திற்கு ஆசிரியரும் தேவையா?
24. கற்றவர்க்காசான் காத்தமுந்நபி
25. இளமையிலே இறை நெருக்கப்
26. பாம்பின் காலை பாம்பறியும்.
27. காரணப் பெயர்கள் பெற்ற கண்ணியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. கர்த்தா இன்றி காரியமில்லை
29. கூடிப் பேசு, குரோதம் அகலும்.
30. ஏழ்மைக்கிரங்குவீர்.
31. வணிகப்பண்புக்கிலக்கு.
32. வனிதை மனம் வென்ற வணிகர்.
33. தூது சென்றார் தோழி
34. இணையில்லா இல்லறம்.
35. கருத்தொருமித்த இன்பம்
36. இல்லறம் தந்த ஏழு பிள்ளை.
37. நுண்ணறிவாளர்
38. அடம் பிடித்தார் அமைதியானார்
39. மனிதரைமனிதர் அடிமை கொள்ளும் மடமையை நீக்கியமாநபி
40. இருட்குகைக்குள் பேரொளி
41. கறைமிருள் அகற்றும் கதிரவன் உதித்தான்.
42. இகமதினுயிர்.
43. இஸ்லாமிய பிரவாகத்தின் முதற்றுளி.
44. நீரே தீர்க்கதரிசி.
45. பாக்கியம் பெற்ற பாலகர்.
46. இருசுடர் இருகை தரினும் என் பணி தவறேன்.
47. முதியவருக்கும் முறுக்கு
48. மூவாசை வேண்டாம்! முதல்வன் பணி பெரிது!
49. நபியின் "மு.:.ஜிஸாத்" "புர்க்கான்"
50. சூழ்ச்சி செய்த துரோகி
51. உயிர்ந்த உத்தமர்.
52. உயிர் கொடுக்கத் துணிந்த உண்மையாளர்
53. ஏழைகளின் இதயமே இறைவன் ஆலயம் .
54. பிளவுண்ட முழு மதி.
55. திருமதி பிளந்த திகைப்பு
56. நல்ல மனங் கொண்ட 'நஜ்ஜாஷ்'
57. கோள் மூட்டிகள்.
58. சூதுரைக்குச் சூடு.
59. பாதகங்கள் பல புரிந்த—துண்மை.
65. சூழுரைத்து வாளெடுத்தவர் தாள் பணிந்தார்.
66. பாசடைத்திருந்த வைரம் பளிச்சிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. குடிபெயர்ந்த குலம்
68. இடம் பெயர்ந்தோர் இருப்பிடம் வந்தனர்.
89. அன்பும், ஆதரவும் அணைந்தன
70. உருகினர் பாத்திமா.
71. வன்னெஞ்சருக்கு வாய்ப்பு
72. சிந்திய செங்குருதி.
73. பொறுமையின் எல்லை.
74. 'சிறை காக்கும் காப்பெவன் செய்யும்?
75. சஞ்சலம் தீர்த்த சஞ்சீவிகள்.
76. திக்கற்றவர் துணைவியானார்.
77. மெல்லத் திறந்தது நபி நகர் வாசல்.
78. மறை மணங் கமழும் மா நகர்.
79. வியப்பூட்டும் விண்ணேற்றம்.
80. தூரித மின்னேணி.
81. பரமனின் பரிசு.
82. அல்லாஹ்வும் அமரரும் வாழ்த்தினர்.
83. உண்மையாளர் 'சித்தீக்'.
84. ஈந்துவந்த நாயகர்...
85. வீட்டைச் சூழ்ந்து விரோதிகள்.
86. துணைக்கொரு 'சித்தீக்'
87. கண் மறைத்த மண்
88. தங்கமும் சிங்கமும்.
89. ஏமாறிகள் தடுமாறினர்.
90. பரிசிலுக்காசை வைத்தார் பரிதவித்தார்
91. கன்மனங்கரைந்தது.
92. 'தவ்ரின்' அதிர்ஷ்டம்.
93. குகையுள் மூவர்
94. இறைவன் அருள்.
95. அகம் எழுந்த இறை இல்லம்.
96. 'ஜும்ஆ' மலர்ந்தது
97. இஸ்லாத்தின் முதற் கொடி
98. கானம் பொழிந்தது—தங்கும் தானம் கிடைத்தது.
99. பாரின் பதக்கம்.
100. நாடி வந்தோர் நம் பிறவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. ஒன்றே மறை, ஒன்றே குலம்
102. ஏழ்மையின் சின்னம்.
103. திண்ணைத் தோழர்.
104. தொழுகைக்கழைப்பு
105. பகைவர் சூழ்ச்சி பறந்தது.
106. மறை வழி ஜிஹாத்
107. கழுத்துக் கருகில் கத்தி
108. போரினால் பரந்ததல்ல இஸ்லாம்
109. உங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.
110. விரலசையக் காத்திருந்த வீரத் தியாகிகள்.
111. சிலிர்த்தெழுந்தது சிங்க வீரம்.
112. பிராத்தனைக்கீடுண்டோ?
113. கரந்திடும் இறைவன் வாக்கு.
114. முடுகினர் மூவாயிரம் வானவர்
115. அல்லாஹ்வின் உதவியே பலம்.
116. அல்லாஹ்வின் நாமத்தை அதிகமாகக் கூறு.
117. வல்லவன் ஏவிய வானோர்.
118. ஆதியின் உதவி அஞ்சியோர்க்கே.
119. மங்களச் செய்தி.
120. வெற்றித் திருநாள் வெஞ்சமர் 'பத்ர்'.
121. ஓ! "பத்ரே!"
122. ஈமானே உறுதி தரும்.
123. சாவின்றி வாழும் சான்றோர்.
124. தீயவர் மமதை தீய்ந்தது.
125. தொடை நடுங்கி.
126. கண்மணியின் கல்யாணம்.
127. முதல் நிகழ்ச்சி.
128. பழிவாங்கும் மறு படலம்.
129. 'உஹதினிலே' உணர்ச்சித் தீபம்
130. இலட்சிய நாதம்
131. வீர யுத்தம்.
132. திட்டம் பட்டதம்மா
133. கறைபடு பொருளின் கவர்ச்சி..
134. ஆணை மீற அவலம் நேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

135. மடிந்தது மக்கள் கூட்டம்.
136. பொய் வதந்தி.
137. நபிகள் வாழ்வு நம் வாழ்வு.
138. நபியைக் காக்க மனித அரண்.
139. திருநபி திருப்தி கண்ட தியாக சீலர்
140. துயரமே வாட்டுதம்மா.
141. வெற்றியா? தோல்வியா?
142. இதயம் மென்றுமிழ்ந்த இதயமற்றவள்.
143. அல்லாஹ் போதுமானவன்.
144. அன்புக்குமுண்டோ அளவு
145. வஞ்சகரை விஞ்ச வழி.
146. யூதரின் தந்திரம், நாதரின் மந்திரம்.
147. கெட்டொழிந்த கேடர்கள்
148. முக்கூட்டு முயற்சி
149. மக்கத்தவரை மடக்க மந்திராலோசனை.
150. ஊர் காக்கும் உத்தி.
151. அகழமைப்பில் தடை.
152. பொறி பறந்தது.
153. கல்லும் கதை சொல்லும்
154. செருக்களம் சென்ற ஜெயசீலர்.
155. கைவிட்ட கயவர்கள்
156. ஏகனுக்காக எதையும் செய்வேன்.
157. விழி பிதுங்கியோர்.
158. சோதனையில் தோல்வி.
159. உறவைப் பிளத்தல் யுத்த யுக்தி.
160. போர் மேகங்கள் கலைந்தன.
161. பிறந்தவூர் தாகம்.
162. வருகையை வழி மறித்த வம்பர்.
163. உயிர் கொடுக்க உறுதி
164 உடன்பாடு உதித்தது.
165. விட்டுக் கொடுத்தல் வெற்றிக்கு வழி.
166 தெளிவான வெற்றி
167 பகை குறைய மறை வளர்ந்தது.
168 தூது விடு தூதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

169. அரசர்க்கு அரு மறை அழைப்புகள்.
170. 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு'.
171. 'வரும் விதி வழியில் தங்காது'
172. மமதை மாண்டது.
173. சிறை பிடிக்க வந்தோரை மறை பிடித்தது.
174. 'கைபர்' யூதர் 'சைபர்' ஆனார்.
175. 'உம்றாவை நாடி உத்தமர்.
176. உடன்பாட்டில் உறுதி.
177. தண்டமே வழி.
178. நல்வழியில் நாயகர்
179. சிலைகள் குலைந்தன
180. 'கஃபா'வில் கூவிய கருங்குயில்
181. 'குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும்
182. கூண்டில் குற்றவாளிகள்.
183. மன்னிப்பின் சிகரம்.
184. பயந்தோடினோர் நயந்துருகினர்.
185. வினை விதைத்த 'ஹுனைனர்.
186. பரமன் துணையின்றேல் படை வலியால் யாது பயன்?
187. பாகப் பிரிவினையில் பாகுபாடா?
188. நபி வேண்டுமா? பொருள் வேண்டுமா?
189. கற்கண்டாகியது 'கல் (பு)'.
190. வளர்த்த அன்னைக்காக.
191. ஆறாயிரம் பேர் அடைந்தனர் விடுதலை.
192. பேரரசின் பேராசை.
193. போருக்காகப் பொருள் தாரீர்.
194. சொத்தளித்த சொர்க்கவாளர்.
195. குடும்பத்தார்க்குடைமை குரு நாதரே.
196. வாகை சூடிய வள்ளல்.
197. சிலையகன்றும் செயலிலே புனிதமில்லை.
198. 'சித்தீக்கின்' தலைமையில் சீராளர்.
199. தடையுத்தரவு
200. தூது ஆண்டு
201. கண்டித்த கவியை கண்டதும் தண்டிக்குக.
202. வசை படப் பாடியவர்– இசை படப் பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

203. மத சுதந்திரம்
204. எத்தர்களின் பள்ளி எரியுண்டது
205. தீமைக்கு நன்மை.
206. இருபத்து மூன்றாண்டு இறைசேவை
207. வள்ளல் நபிக்கு வரவேற்பு
208. அருள் மலை சொரிந்த 'தீனின்' சத்து.
209. வெள்ளி நாளன்று வெண்ணுடைதரித்தோர்.
210. பரிதி போல நபி வந்தார்.
211. இதுவே என் இறுதி ஹஜ்.
212. பாதகங்கள் புரியாதீர்.
213. பெண்ணுரிமை
214.. அடிமைகளை அரவணைப்பீர்.
215. சமத்துவ சமூகம்.
216. சிறப்புறுமிரு பொருள்.
217. இதயத் தூய்மைக்கு இணையில்லா மூன்று.
218. அஞ்சல் செய்வீர்
219. அகிலம் வியக்கும் அறபாப் பிரகடனம்.
220. மறையொளி மலர்க.
221. உழைப்பும் களைப்பும்.
222. தொழுகை என் கண் குளிர்ச்சி.
223. நிறையுறுமின்பம் வணக்கமே
224. அணையா விளக்கு
225. நித்திய வாழ்வடைந்தார்
226. இடியேறுண்ட நாகங்கள்
227. இறைவன் நியதி
228. கருகிய நெஞ்சங்கள்
229. இகத்தின் சக்தி இஸ்லாம்.
230. உலகின் இதயமும் அதில் பாயும் குருதியும்
231. திண்ணமாய்த் தரிசிப் போர்க்குத் திருவருள் கிட்டுமுண்மை..
232. நித்தியன்றனை வணங்கி முக்தியைப் பெறுவீர்.
233. நபிமுறை பற்றியோர்க்கு நற்சிறப்புண்டு
234. தூய நந்நபியின் வாழ்வில் துலங்குக
235. சாதனை மூலம் நீதனை வணங்குக.
236. ஒருவனே தேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

237. வள்ளல் வாக்கில் வழியும் கல்வியூற்று.
238. கருத்திழந்த வேளை கருதுக நபிகள் சொல்லை.
239. தூயவன் நினைவே துணை.
240. நன்னயக் குர் ஆனாக நாயகம் வாழ்க்கை.
241. மாநபி வாழ்வால் மனிதம் வாழும்.
242. நபியை நாடு- நல் வாழ்வு தேடு.
243. முத்து மா முஹம்மதுக்கு முற்றிலும் தஞ்சம்
244. குர் ஆனைக் கையில் ஏந்துக.
245. உத்தம நபியை நாடில் உலகம் போற்றும்.
246. பிளவதில் வால் புகுந்த பிங்கலமாகாதே
247. போற்றி
248. போற்றி, போற்றி!
249. போற்றி, போற்றி, போற்றி!
250. மக்கத்து மலரே போற்றி/ மதீனத்து மணமே போற்றி/.

## பெயர் சுட்டும் இதழ் இலக்கம்

அகழி 150, 151, 154, 157
அபிஸீனியா 56
அபூசுபியான் 125, 178
அபூத்தாலிபு 18, 25, 28, 45. 47, 69
அபூபக்கர் சித்தீக் 52, 75, 83, 84,
86, 88, 92, 113
195, 198, 222, 227
அபூஐயூப் 98
அபூலஹப் 17
அபூஜஹில் 63, 64, 68, 125
அப்துல்லாஹ் 8
அப்துல்லாஹ் இப்னுஉபை 205
அப்துல் முத்தலிப் 15, 67
அப்பாஸ் 17
அருட்கொடை 9
அருள் மலை 208
அலி 45, 88, 95, 126, 198, 199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் அமீன் 27
அல்குர்ஆன் 42, 216, 240, 244
அறபா 219
அறபியர் 5, 215
அன்ஸாரீன்கள் 100, 187, 189
அஸ்லம் 97
ஆதம் 10
ஆமினா 8
ஆயிஷா 75, 224, 240
இபுறாஹிம் நபி 199
ஈதுல் பித்ர் 127
ஈமான் 43, 155, 173, 234
உத்பா 125
உமர் 64, 65, 66, 104, 226, 228
உம்மு குல்தூம் 36
உம்மி 21
உம்றா 175, 176, 230
உஹத் 129, 133
எகிப்து 169
எமன் 151
கஃபா 37, 51, 175, 179, 180, 197, 207, 230
கஃபு 201, 202
கத்பான் 159
காஸிம் 36
கிறிஸ்தவர்கள் 196
குத்பா 127
குபா 95
குறைஷியர் 29, 31, 47, 67, 106, 148, 157, 164, 176, 188.
குஸ்ரு 169, 170, 171
கைபர் 174
கைஸ் குலத்தார் 29
கெய்ஸர் 169
சல்மான் 150
சுன்னத் 216
சுராக்கா 90, 91
சுலைமான் நபி 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஹைஸ் 164
தபூக் 196
தவ்ர் 92
தாயிப் 71, 72
தாஹிர் 36
தாவூத் நபி 55
திண்ணைத் தோழர் 103
துபைலிப்னு அம்ர் 74
தூதாண்டு 200
தையூப் 36
நடு கிழக்கு 4
நபவி 99, 230
நபீஸா 33
நஜ்ரான் 203
நஜ்ஜாஸ் 56, 57, 58, 167
பத்ர் 111, 115, 120, 121, 124
பத்ரின் தோழர் 120
பாங்கு 104, 180
பாத்திமா 36, 70, 75, 126
பார்ஸிநாடு 150, 153, 169, 172
பானத் சுஆதா 202
பிலால் 180
புறாக் 79
புறுக்கான் 49
பை அத்துர் றிழ்வான் 163
மக்கா 25, 73, 162, 177, 178, 185, 211, 221, 250
மதீனா 45, 111, 125, 185, 211, 221, 250
மின்னேனி 79, 80
மிஹ்றாஜ் 79
மு∴ஜிஸாத் 49
முகௌகிசு 169
முனாபிக்கீன்கள் 145, 148, 155, 204
முஹாஜிரீன்கள் 100
முஸ்அப் 78
மூஸா நபி 80
மைமூனா 176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்ரிப் 77, 78, 97, 99
யூசுப் நபி 55
யூதர் 101, 105, 145, 146, 147, 148, 155, 174,
ரோமர் 50, 169, 192
ருக்கியா 36
வரக்கா 44
வஹி 41
றமழான் நோன்பு 127
றவ்ழா ஷரீப் 231
ஹதீஜா 32, 33, 34, 35, 43, 69
ஹபஸா 76, 169
ஹம்ஸா 63, 142
ஹலீமா 12, 190
ஹஜ் 77, 199, 207, 209, 211, 219, 221, 230
ஹஜ்ருல் அஸ்வத் 37
ஹாரித் 51
ஹாஷிம் 68
ஹிரா 40
ஹஜிாஸ் 50
ஹிஜ்ரத் 56, 92
ஹுதைபியா 165
ஹுவைரிஸ் 50
ஹுனைன் 185, 186
ஜஃபர் 62
ஜப்ரீல் 41, 79
ஜவாதை 96
ஜிஹாத் 106
ஜும்ஆ 95, 96
ஜைனப் 36, 39
ஸவீக் 125
ஸலவாத் 232
ஸாதிக் 27
ஸைத் 39
ஸௌதா 76
ஷாம் 28, 153, 192

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன்*

# மக்கத்து மலரே
# மதீனத்து மணமே

1. அல்லாஹ்வை வேண்டுவோம்.
எங்கும் நிறைந்தவனே
ஏகப் பரம் பொருளே
தங்கும் உனதருளை
தந்திடுவாய் றஹ்மானே
பொங்கும் தமிழ் தந்து
பொருள் தந்து நபிமணியின்
தங்கச் சரிதை தர
தந்திடுவாய் உன் உதவி.
(றஹ்மான்—அருளாளன்)

2. கடல் நீரைப் பருக எண்ணும் சிட்டு
ஆர்க்கும் கடல் நீரை
அள்ளிப் பருகுதற்கே
பார்க்கும் சிட்டினுக்குப்
பகரமாய் முனைகின்றேன்
யார்க்குமே நிகரில்லா
யாஅல்லாஹ்! உன்றுணையே
சேர்க்கும் என் முயற்சி
செவ்வனே நிறைவு பெற

3. குருநபி மகிமையைக் கூறி முடிக்கலாமா?
கணக்கிலா அறிஞர் கூடி
கடல் நீரை மைபோலாக்கி
கணத்தையும் வீணாக்காது
கடிதினில் எழுதினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணத்தினால் குன்றாமெங்கள்
குருநபி மகிமை தன்னை
இணக்கமாய் வடிப்பதற்கு
இயலுமோ முடியாதம்மா

4. ஆசி பெற்ற நிலம்
இறையருள் பெற்ற தூதர்
இவ்வுலகுதித்து மக்கள்
மறை வழிநின்று வாழ
மகத்துவப் பணிசெய்தற்கு
உறைவிடம் நடு கிழக்கு
உசிதமாய்த் தேர்ந்திறைவன்
நிறைந்திடும் ஆசி பெற்ற
நிலமதாய்க் கூறலாமே

5. அறபியர் சிறப்பு.
அங்குதான் நாகரிகம்
அருங்கலைச் செல்வமெல்லாம்
பொங்கியதாகத் தொன்மைப்
பொருளியல் சான்று கூறும்
தங்கிடும் மக்களுள்ளே
தலை சிறப்புற்றோராக
மங்கிடாதறபு தேச
மக்களே விளங்கினார்கள்

6 அந்தகார வாழ்வு
திறம்பல கொண்டு பாரில்
திகழ்ந்த சமுதாயமன்று
அறம் மடிந்திழிவு பெற்று
அந்தகாரத்தில் மூழ்கி
மறம் மலிந்துழன்று புத்தி
மயங்கியே நிலையும் கெட்டு
புறம் பெயர்ந்திருந்த தன்மை
புகன்றிடல் முடியுமாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரேபியாவில் நிலைமை:*

*அரேபியாவில் அரசியல், பொருளாதார, சமய, சமூக கலாசார துறைகளைக் கணித்து வரலாற்று ஆசிரியர்கள் கி.பி. 5ம், 6ம். நூற்றாண்டுகளை அறியாமைக்காலம் ('அய்யாமுல் ஜாஹிலிய்யா') என வர்ணித்துள்ளனர். அரசொன்றில்லை, பல கோத்திரங்கள், அவைகளுக்கிடையே சண்டை சச்சரவுகள், அறபிகளிலும், யூதர்களிலும் பணம் படைத்தவர்கள் தண்டக்காரர்கள், அடிமை வியாபாரம் சாதாரண நிகழ்ச்சி, பெண்களின் நிலை பரிதாபம், பஞ்சமா பாதகங்கள் சர்வ சகஜம், பன்னூறு தெய்வ வணக்கம், என்றாலும் புலமையும், விருந்தோம்பலும் வாக்குகளை நிறைவேற்றலும், வீரமும் இவர்களிடம் இருந்தன. இந்நிலைமையில் அவர்களை நல்வழிப்படுத்த நபியொருவர் அவசியமாகத் தேவைப்பட்டார்.*

7. அருளொளி அரும்பியது.

நல்லற மழிந்து தீமை
நானிலம் மிகுந்த வேளை
வல்லவனல்லாஹ் நாடி
வழங்கினான் தனது தூதை
சொல்லரும் அருட் பிழம்பாய்
சோபித 'றசூலாய்' முஹம்மத்
ஸல்லல்லாஹ் அலைஹிவஸல்லம்
சகத்தினில் தோன்றினார்கள்.

*உலகோரை நல்வழிப்படுத்துவதற்காகக் காலத்துக்குக் காலம் நபிமார்களை அல்லாஹ்தஆலா உலகத்துக்கு அனுப்பியுள்ளான். அவ்வாறு வந்துள்ள நபிமார்கள் ஒரு இலட்சத்து நாற்பதினாயிரம் பேரில் இறுதி நபியாக றசூல் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். (றசூல்–தூதர்)*

8. குறைஷியரின் குலக்கொழுந்து.

கற்பெலாந் திரண்டிலங்கும்
கன்னிகை ஆமினாவும்
நற்றவப் பேறாய் வந்த
நாயகர் அப்துல்லாஹ்வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதம் தோன்ற விண்மண்
ஆசிகள் கூற அன்புக்
கொற்றவர் 'குறைஷ்' குலத்தின்
கொழுந்ததை மலர வைத்தார்

*அண்ணல் நபியின் அன்புத் தந்தை அப்துல்லாஹ்; ஆசை அன்னை ஆமினா. குறைஷிக் குலத்தார் மக்காவில் மிகவும் பிரபலமானவர்கள்.*

9. அனைத்துலகங்கட்கும் அருட்கொடை
அனைத்துல கங்களுக்கும்
அருட் கொடையாகவன்றி
நினைத்துமை அனுப்பவில்லை
நிச்சயமாகவென்று
முனைப்புடன் அல்லாஹ் கூறும்
முந்திய நபிகளாரின்
வினையுறு பெருமை தன்னை
விளம்பிட முடியுமாமோ!

*"(நபியே,) நாம் உம்மை உலகத்தார் யாவர்க்கும் ஓர் அருளாகவே அனுப்பியிருக்கின்றோம்" (அல்குர்ஆன்: 22:107)*

10. கண்ணிய நபிகளின்றி படைப்பினமில்லை.
மண்ணினாலான ஆதம்
மனிதராய் ஆகுமுன்பே
புண்ணிய நபியாய் நாயன்
புனிதமாயாக்கி வைத்தான்
எண்ணிலா படைப்பினங்கள்
எவையுமே நபிகளின்றி
கண்ணிய இறைவன் ஆக்கக்
கருதியே இருக்க மாட்டான்.

11. அருட்கொடை நபி பிறந்தார்
'பகில்' தனமாகப் பஞ்ச
பாதகம் புரிந்து உள்ளத்
திகிலினில் வாழ்ந்த மக்கள்
தீமைகளகற்றி மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகிலினைத் துவைத்ததன்ன
தூய்மையின் ஒளியே ஏந்தி
அகிலமே உய்யும் வண்ணம்
அருட்கொடை நபி பிறந்தார்.
*'பகில்' - (Bahil) - ஈரமற்ற நெஞ்சம*

12. செவிலித்தாயிடம் வளர்ந்தார்
குலமுறைக்கேற்ப அன்புக்
குழந்தையும் ஹலீமாவென்னும்
நலமுடை செவிலித்தாயின்
நயமுறு பாலருந்தி
உலகெலாம் புகழும் பிள்ளை
உயர்ந்திட ஐந்தாமாண்டு
குலத்துடன் வாழ் வதற்காய்
குறுகினர் அன்னை இல்லம்.

13. ஆடுமேய்த்த அகிலத்தவர்க்கிடையா
முந்திய நபிகள் செய்த
முயற்சியாம் ஆடுமேய்ப்பை
பிந்திய நபிகளான
பிள்ளையும் செய்ததன்றே
அந்திய காலம் மட்டும்
அறிவிலாதிருந்த மாக்கள்
மந்தையை மக்களாக்கி
மாண்புறச் செய்தாரன்றோ!

*நாயகமவர்கள் ,ஹஸ்ரத் ஹலீமா அவர்களிடம் பால்குடித்து வளர்ந்த போது, ஹலீமாவின் பிள்ளைகள் ஆடு மேய்க்க செல்வதைக் கண்டு தானும் விரும்பி அவ்வேலையைச் செய்தார்கள், முன்னைய நபிமார்களிடமிருந்த அம்சம் பெருமானாரிடத்தும் அமைந்தமை அல்லாஹ்வின் நாட்டமாகும்.*

14. அனாதை மதலை
அண்ணலார் தோன்றுமுன்பே
அவர் பிதா காலமானார்
கண்ணெனக் கலங்கிடாது
காத்த தன் அன்புத்தாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுலகெய்தக் கண்டார்
விளம்பிடும் வயது ஆறில்
மண்ணுலகில் அனாதை
மதலையாய் மன்னர் நின்றார்.

15. குறையின்றி வளர்ந்த குழந்தை.
தந்தை தாயிழந்து நாதர்
தனிமையிலான போது
தந்தையாய் தாயாய் அன்பைத்
தந்திடும் பாட்டனாரும்
முந்திய குறைஷி வம்ச
முதல்வராய்த் திகழும் அப்துல்
முத்தலிப் வளர்த்து வந்தார்
முகம்மது நபியை ஆங்கே

*அப்துல்லாஹ்வின் தந்தை அப்துல் முத்தலிப் அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் பாட்டனாராவர்.*

16. பாட்டனாருக்குப் பகரமாய் பாதுகாவலர்
வயதினால் முதுமையுற்ற
வாஞ்சை கொள் பாட்டனாரும்
நயமுடை பேரனாரை
நயமுடன் வளர்ப்பதற்கு
இயல்புடையொருவர் தம்மை
இணக்கமாய்த் தேர்ந்தெடுத்து
நியமனம் செய்வதற்கே
நினைந்தவர் செயற்பட்டாரே.

17. பொருத்தமானவர் யார்?
தன்னுடைய புதல்வருள்ளே
தனமிகு "அபூலஹப்பு
வன் மனம் படைத்ததாலே
வளர்த்திட முடியாதென்றார்
பின்னவர் "அப்பாஸுக்குப்"
பிள்ளைகள் அதிகமுள்ளார்
அன்னவர் மேலும் பிள்ளை
ஆதரிப்பதியலாதென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூலஹப், அப்பாஸ், அபூத்தாலிபு ஆகியோர் அப்துல் முத்தலிபின் புதல்வர்களாவார். அபூலஹப் பற்றி அல்குர்ஆன் :– "அழியட்டும் அபூலஹபின் இருகரங்கள், அவனுமே அழியட்டும். . . . . விறகு சுமக்கும் அவனுடைய மனைவியோர் அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங்கயிறுதான். (அதனால் சுருக்கிடப்பட்டு அவளும் அழிந்து விடுவாள்)" (அல்குர்ஆன் : 111: 1–5)

18\. அருட்பரிசு அபூத்தாலிபுக்கு.

வளர்த்திடும் பொறுப்பைக் கேட்டு
வந்தனர் அபூத்தாலிபும்
உளத்தினில் திருப்தி கொண்ட
உத்தமர் முத்தலிபும்
களங்கமில் குழந்தை தன்னின்
கருத்தையே நாடி நிற்க
அளவிலா அருள் சேர் முஹம்மத்
அவர் மடி சென்றமர்ந்தார்.

19\. வாச மென்மலர்.

பாசமாய் வந்து சேர்ந்த
பாலரைக் கண்ணே போல
நேசமாய் அரவணைத்து
நெருக்கமாய் வளர்த்த போது
வாச மென் மலரைப் போன்று
வள்ளலும் ஊரார் முன்னே
தாசராய் வளர்ந்திட்டாலும்
தனித்துவப் பெருமை பெற்றார்.

20\. விளையாட வந்தோமில்லை.

உயர்ந்த நற்கருமமாற்ற
உலகினில் உதித்தோமன்றி
மயக்குறு விளையாட்டெல்லாம்
மனதிலும் நினைக்கவில்லை
தயக்கமாய் அழைத்தவர்க்கு
தக்க மென் பதிலைச் சொன்ன
வியப்புறு பாலர் மேன்மை
விளம்பிட முடியுமாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்கள் விளையாட அழைத்த போது, நாயகம் (ஸல்) அவர்கள், தோழர்களுக்குக் கூறிய பதில்.

21. நூற்கலை பயிலா நுண்ணறிவாளர்.

நாற்பதில் காணும் பேறின்
நற்குறி பலவும் தோன்ற
நூற்கலை எதுவுமின்றி
நுண்ணறிவாளரானார்
ஊற்று நீர் போல ஞானம்
ஊறிட 'உம்மி' என்று
சாற்றிடும் நாமம் பெற்று
சகத்தினுக் காசானானார்

*நாற்பது வயதில் நபிகள் கண்ட பேறு நபித்துவமாகும். அவர்கள் எவரிடத்திலும் கல்வி பயிலவில்லை. எழுதப் படிக்கத் தெரியாதவரை "உம்மி" என்றழைப்பர்.*

*. . . . . . ஆகவே, அந்த அல்லாஹ்வையும், எழுத்தாற்றல் அற்ற நபியாகிய அவனுடைய தூதரையும் நீங்கள் விசுவாசிப்பீர்களாக! (அல்குர்ஆன்– 7:158)*

*"(நபியே!) நீர் இதற்கு முன்னர் எந்த வேதத்தையும் ஓதியவரல்ல, உம்முடைய வலக்கையால் நீர் அதனை எழுதி (ப்பழகி) யவருமல்ல".....*

*(அல்குர்ஆன்–29:48)*

22. கல்லாத ஞானக் கருவுரு.

கல்வி கல்லாத ஞானக்
கருவுருவாகப் பாரில்
நல்லரசாட்சி செய்த
நாயகராகப் போரின்
வல்ல நற்றளபதியாக
வரும் பொருளுரைப்போராக
எல்லவர் ஏற்று நாடும்
ஏந்தலாய் நபியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. அறிவுக்களஞ்சியத்துக் ஆசிரியரும் தேவையா?

கலையொடு ஞானமெல்லாம்
கரையிலா கடல் போல்கர்த்தன்
நிலைபெறும் குருவாய் நின்று
நிரப்பமாய்க் கொடுத்திருக்க
நிலையிலா உலகில் யாரும்
நித்திய நபிகளார்க்கு
கலை புகல் குருவாய் ஆகக்
கனவிலும் தகுதியுண்டோ?

24. கற்றவர்க்காசான் "காத்தமுன்னபி"

பெற்றவரன்பு காணா
பெருமை சேர் தனயராக
உற்றவர் பேணுமில்லம்
உவந்திடும் தலைவராக
நற்றவக் குரவராக
நலந்தரும் வணிகராக
கற்றவர்க்காசானாக
"காத்தமுன்னபி" யிருந்தார்

*("காத்தமுன்னபி" – இறுதித்தூதர்)*

25. இளமையிலே இறை நெருக்கம்.

மக்கமா நகரில் அன்று
மாபெரும் பஞ்சம் தோன்றி
மக்களெல்லாரும் துன்பம்
மல்கிட வருத்தமுற்றார்.
இக்கதி கண்ட தாலிட்
இணையிலா முஹம்மதாரை
'ஹக்கனை' இரக்கச் செய்தே
கடுமழை பொழியச் செய்தார்

*பெருமானாரின் வயது பத்தில் இது நிகழ்ந்தது.*
*(தாலிப் – பெரிய தந்தை அபூத்தாலிப்). (ஹக்கன் – அல்லாஹ்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. "பாம்பின் காலை பாம்பறியும்"
இறைவனின் தூதராகும்
இயல்புகள் உள்ளதென்று
மறைகளின் குறிப்பை மற்ற
மதங்களினறிஞர் கூறி
முறையுடன் நபியைப் பேண
முன்னறிவிப்பு செய்தார்
குறைகளில்லாதவாறு
குமரரும் வளர்ந்து வந்தார்

*வயது பன்னிரண்டில் வள்ளல் நபி பெரிய தகப்பனார் அபூத்தாலிபுடன் வியாபார நோக்கமாக ஷாம் தேசம் சென்றார்கள். அங்கே "பஸ்ரா" நகரிலிருந்த "பஹீரா" என்னும் கிறிஸ்தவத் துறவி, பெருமானாரின் தோற்றம், அறிவுக் கூர்மை, கனிந்த சொற்கள் ஆகியவற்றைக் கண்டு, வேதங்களில் முன்னறிவிப்பு செய்யப்பட்ட தீர்க்கதரிசி இவரே எனவும், கவனத்துடன் கவனித்து வரும்படியும் கருத்துரை வழங்கினார்.*

27. காரணப் பெயர்கள் பெற்ற கண்ணியா
உண்மையே பேசி மக்கள்
உளங்களைக் கவர்ந்ததாலே
கண்ணிய 'ஸாதிக்' என்னும்
காரணப் பெயரும் பெற்றார்
திண்ணியராக நம்ப
தினசரி வாழ்ந்ததாலே
புண்ணிய 'அல் அமீனாய்'
புகழுடன் வளர்ந்தார் நாதர்

*விளையும் பயிர் முளையிலே தெரிந்தது. "அஸ்ஸாதிக்" என்பது உண்மை உரைப்பவர் என்றும். 'அல். அமீன்' என்பது நம்பிக்கைக்குரியவர் என்றும் பொருள்படும்.*

28. கர்த்தா இன்றி காரியமில்லை
தலைவரபுதாலிபோடு
தனையராம் நபிகளாரும்
தொலைவிலேயுள்ள "ஷாமைத்
தொடர்ந்தவர் செல்லுங்காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை கடலாறு காடு
மற்றமுள வளங்கள் கண்டு
நிலையுற இவை படைத்த
நித்தியனுளன் என்றார்கள்
*(ஷாம்- சிரியா)*

29. கூடிப் பேசு குரோதம் அகலும்.
குலத்தவிருவரான
குறைஷியரோடு கைஸும்
தலத்திலே வன்மை கோரி
தமக்கிடை செய்த போரை
விலக்கிட சபையமைத்து
விதித்திடும் சட்டம் செய்து
நலந்தரும் சேவை தன்னில்
நடுவராய் இருந்தார் நாதர்
*நிறுவிய சபையின் பெயர் ஹில்புல் புளுல்;*
*போரின் பெயர் ஹர்புல் பிஜார்.*
*கைஸ் - ஒரு குலப் பெயர்*

30. ஏழ்மைக் கிரங்குவீர்!
எளியவர்க்கிரங்கும் பண்பு
ஏந்தலார்க் கிளமை தன்னில்
துளிர்விடக் கண்டு உள்ளத்
தூய்மையை மதித்தார் மக்கள்
களிப்புடன் இயலாதோர்க்கு
கடைகளில் பொருட்கள் வாங்கி
அளிப்பதிலின்பங் கண்டார்
ஆண்டவனருளால் தூதர்

31. வணிகப் பண்புக்கிலக்கு
குலத்தொழில் வணிகமாக
குறைஷியர் கொண்டதாலே
நலமுடன் அதையே தொழிலாய்
நபிகளும் நடத்தினார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகிடா வாக்கும் நம்பும்
விதமுடன் நடப்பும் குணமும்
பலமுடன் சேர வணிகப்
பண்பினுக் கிலக்காய் வாழ்ந்தார்

32.
வனிதை மனம் வென்ற வணிகர்
வழிமுறைத் தொழிலாய் வாய்த்த
வாணிபம் செய்து வந்த
எழில் நபியாரதற்கு
இலக்கணமாயமைந்தார்
பழியிலா ஹதீஜாவென்னும்
பாவையின் வணிகமேற்று
தொழிலிலே சித்தி பெற்று
தோகையின் மனமும் வென்றார்

*பழியிலா ஹதீஜா நாயகி அவர்கள் பரிசுத்தமானவர் எனும் பொருள்படும் 'தாஹிறா' என்னும் காரணப் பெயரால் அழைக்கப்பட்டார்.*

33.
தூது சென்றார் தோழி
தனவதி ஹதீஜா அன்புத்
தாதியாம் நபீஸாமூலம்
மனமுடன் முஹம்மதாரை
மணஞ்செய விருப்பங் கேட்டு
வினயமாய்த் தூதனுப்ப
வித்தகர் அண்ணலாரும்
கனஞ் செயும் பெரிய தந்தை
கருத்துடன் ஒப்புத்தந்தார்.

34.
இணையில்லா இல்லறம்.
உன்னத நபிகளாரின்
உயரிய பண்பு கண்டு
அன்னையர் 'ஹதீஜா' நெஞ்சம்
அவரையே நாடி நிற்க
பொன்னிகர் நபிகளாரும்
பொருந்திட மணமுஞ் செய்து
தன்னிகரின்றி இந்தத்
தரணியே மெச்ச வாழ்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. கருத்தொருமித்த இன்பம்.

காதலிருவர் தங்கள்
கருத்தொருமித்து வாழ்ந்தார்
நாதரின் விருப்பை நாடி
நடந்தனர் ஹதீஜா அன்னை
ஆதனம்பாவும் கண்ணாம்
அன்பருக்கர்ப்பணித்தார்
பேதகமில்லாதுற்றார்
பேணியே இன்பங்கண்டார்

36. இல்லறம் தந்த ஏழு பிள்ளை

இல்லறப் பயனாய் ஏகன்
ஈந்தனன் ஏழு பிள்ளை
நல்ல பேர் ஸைனப் ருக்கி
யாவொடு உம்மு குல்தூம்
சொல்லரும் காசிம் தையிப்
சோபித தாஹிரோடு
செல்லமாம் சொர்க்கப் பெண்ணாள்
செல்வியார் பாத்திமாவாம்

37. நுண்ணறிவாளர்.

புண்ணிய கஃபா தன்னை
புதியதாய் செய்த போது
கண்ணிய 'ஹஜ்ருல் அஸ்வத்'
கல்லினை மீள வைக்க
எண்ணிய போது சண்டை
ஏற்படும் தீமை தன்னை
நண்ணிய நபிகள் தீர்வு
நன்மையைத் தந்ததன்றே

*("ஹஜ்ருல் அஸ்வத்"—கஃபா பள்ளி வாசலின் சுவரில் வைத்துக் கட்டப்பட்டுள்ள சுவர்க்கத்தின் புனித கல்)*

38. அடம் பிடித்தார் அமைதியானார்.

தடம் புயத்திருந்த போர்வை
தரையினில் விரித்ததன் மேல்
இடம் பெயர்ந்திருந்த கல்லை
இணைகரமேந்தி வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடம் பிடித்தவர்கள் நால்வர்
அதன் முனைகளைப் பிடித்து
வடதிசை மேற்கில் வைக்க
வள்ளலார் உதவினார்கள்

39. மனிதரை மனிதர் அடிமைகொள்ளும் மடைமையை நீக்கிய மாநபி.

மனிதரை அடிமை கொள்ளும்
மடைமையை அகற்றுதற்காய்
இனியதன் மனைவியாரின்
இளைஞராம் "ஸைதை" மீட்டு
வனிதையாம் "ஜைனப்" தன்னை
வதுவை செய்தீந்து தங்கள்
கனிந்திடும் மகனாய்க் கண்ட
காரண நபியைக் காணீர்

*"ஸைத் இப்னு ஹாரிதாவை" சந்தையில் விலைக்கு வாங்கி ஹக்கீம் இபுனு ஹஸ்ஸாம்" என்பவர் தமது மாமி ஹதீஜா (றழி) அவர்கட்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். அவரை அன்னையார் அண்ணலார் அவர்கட்கு அன்பளிக்க, அருமை நபி அவரை சுதந்திரப் பறவையாக்கினார். ஸைத் 'பறந்துவிடவில்லை.'நபிகளார் மேலே வைத்த பிரியத்தால் அவர்களுடனேயே தங்கி விட்டார்கள். அடிமையாயிருந்த அவருக்குத் தன் அருமை மாமி மகள் "ஸைனப்" நாச்சியாரைத் திருமணம் செய்வித்து பாரிய புரட்சி செய்தார் அருள் நபி.*

40. இருட்குகைக்குள் பேரொளி.

ஒருவனே இறைவனென்று
ஓர்ந்திடாதெண்ணும் தெய்வ
உருவெலாம் வணங்கிவீணில்
உழன்றிடும் நிலை கண்டுள்ளம்
வருந்தியே தனிமையாக
வல்லவன் தியான மீதில்
இருந்துமே ஒளி கண்டுய்ய
இருட்குகை 'ஹிரா' சென்றாரே

*மக்காவிற்கு மூன்று மைல் தொலைவிலுள்ளது 'ஹிரா' என்ற மலைக்குகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. கறையிருள் அகற்றும் கதிரவன் உதித்தான்.

இறைவனின் ஆணையேற்று
இறங்கிய 'ஜிப்ரீல்' மேலாம்
மறைமொழி 'வஹியைக்' கூற
மனப் பயத்துடனே ஏற்று
குறைவிலா புனிதராக
குவலய நபிகளானார்
கறையிருள் விலகியோடும்
கதிரவன் உதயமானான்

*அல்லாஹ்தஆலா தனது வானவத் தூதர் ஜிப்ரீல் (அலை) மூலமாக முதன்முதலில் திருக்குர்ஆனிலுள்ள 'அலக்' என்னும் அத்தியாயத்தின் முதல் ஐந்து வசனத்தை தெய்வச் செய்தியாக (வஹியாக) அறிவித்தான். திருக்குர்ஆன் முழுதும் இவ்வாறே நபி பெருமானார் (ஸல்) அவர்கட்கு, ஜிப்ரீல் (அலை) மூலம் அல்லாஹ்தஆலாவின் சமுகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 'வஹீகளாகும்.*

*(வஹீ, -தெய்வச் செய்தி)*

42. இகமதின் உயிர்

இறைவனின் தூதராக
இகமதின் உயிருமாக
கறையிருள் நீக்கும் தங்கக்
கதிரவன் போல வந்து
மறை புகல் குர் ஆன் என்னும்
மாண்புறு நூலும் தந்து
முறையொடு வாழும் மார்க்கம்
முழுமையாய்த் தந்தார் நாதர்.

43. இஸ்லாமிய பிரவாகத்தின் முதற்றுளி

திகைப்புடன் வந்த நாதர்
திருமுகங் கண்டயர்ந்து
தகையுடை ஹதீஜா அன்னை
தைரியமூட்டி வேண்ட
குகையிலே நடந்த சேதி
குறைவறக் கூறக் கேட்டு
இசைபட 'ஈமான்' கொண்டு
இணையிலா பேறும் பெற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் 'வஹி' இறங்கிய போது அதிர்ச்சியுற்ற நபி பெருமான் (ஸல்) அவர்கட்கு ஆறுதலூட்டி முன்னைய வேதங்களின் விற்பன்னரும், தமது சிறிய தந்தையின் மகனுமாகிய "வரக்கா இப்னு நவ்பல்" என்பவரிடம் இச்சம்பவத்தைத் தெரிவித்து 'முஹம்மத்' இறைவனின் தூதரே' என்ற உறுதிப்பாட்டையும் அன்னையார் ஹதீஜா (றழி) அவர்கள் பெற்றார்கள். முதன்முதலில் இஸ்லாத்தைத் தழுவியவர்களும் இவர்களேயாவார் ("ஈமான்" -நம்பிக்கை)

44. நீரே தீர்க்கதரிசி.

எனதுயிர் பொறுப்பினோடு
எவன் கையிலுளதோ அவன் மேல்
மனமறிந்துண்மையாக
மாநபியாகத் தேர்ந்தீர்
இனத்தினர் ஊறு செய்வார்
இருப்பிடம் அகலச் செய்வார்
தினமதில் எனது உதவி
திடமென 'வரக்கா' சொன்னார்

45. பாக்கியம் பெற்ற பாலகர்.

சீரிய சிந்தையாளர்
சிறுவராம் அலி அவர்கள்
நேரிய "தீனில்" சேர்ந்து
நேமமாய் உழைக்க வந்தார்
பேரிறை நாட்டமில்லா
பெரியவர் அபூத்தாலிபோ
பாரிய 'தீனில்' சேரும்
பாக்கியமிழந்து போனார்

பத்து வயதுச் சிறுவராக இருந்தஅலீ அவர்கள் நாயகத்தின் பெரிய தந்தை அபூத்தாலிபின் மகனாவார். இஸ்லாத்தில் இணைந்த இரண்டாவது நபர் இவராகும். பெரிய தந்தையை நாயகம் அவர்கள் சன்மார்க்கத்திலழைத்த போது, மூதாதையர் பின்பற்றி வந்த மார்க்கத்தை விடப் பிரியமில்லை எனக் கூறிவிட்டார், ஆயினும் நபிகளாரை ஆதரிப்பதில் தீவிரமாக இருந்தார்.

("தீன்" **Dheen**) :-இஸ்லாம் மார்க்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46 இருசுடர் இரு கை தரினும் என் பணி தவறேன்.

நன்மறை பரப்புதற்கு
நபிகளார் முயன்ற போது
துன்மதி படை த்தவர்கள்
துன்பமே செய்யலுற்றார்
என் கரம் இரு சுடர்கள்
எடுத்திட தந்திட்டாலும்
என்பணி தவறேன், என்று
எம் பிரான் முழங்கினார்கள்

*குறைஷியர் கோபாவேசத்துடன் அபூத்தாலிப் அவர்களிடம் வந்து நாயகம் உயிருடன் வாழவேண்டுமாயின் அவர்களின் பிரச்சாரத்தைத் தடுத்து நிறுத்துமாறு கேட்க, அபூத்தாலிப் நபியவர்களிடம் அவ்விடயத்தைக் கூறி கோரிக்கை விட, நபி பெருமானார், அபூத்தாலிப அவர்கட்கு கூறிய விடையே மேலுள்ள செய்யுள்.*
*இருசுடர்- சூரியன், சந்திரன்*

47. முதியவர்க்கும் முறுக்கு.

நபி தரும் மார்க்க மேற்க
நாட்டமேயில்லையேனும்
"குபிருடைக்" குறைஷியோரின்
குறைவிலா துன்பந்தன்னை
நபியுடன் இணைந்து நின்று
நாளெலாம் தடுத்துக் காக்க
அபூத்தாலிப் எதிரணிக்கு
அறுதியாய்க் கூறி நின்றார்

*அபூத்தாலிப் அவர்களின் திடசங்கல்பம் திரு நபிகளின் பகிரங்கப் பிரச்சாரத்திற்கு உரமூட்டியது.*
*(குபீர் : இறை நிராகரிப்பு)*

48. மூவாசை வேண்டாம்-முதல்வன் பணி பெரிது

அரபுலகாட்சி ஈவோம்
ஆதனம் அனைத்தும் ஈவோம்
அரம்பையர் நிகர்த்த பெண்கள்
அழகுடன் தேர்ந்து ஈவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரனுளன் என்னும் கொள்கை
பரத்துதல் விடுக என்றார்
முரண் எனக்கவைகள் வேண்டாம்
முயன்று "தீன்" வளர்ப்பேனென்றார்

49. நபியின் 'மு:ஜிஸாத்' 'புறுக்கான்'
குன்றிலே தீபம் போல
குவலய மாந்தர்க் கெல்லாம்
நன்னொளி விளக்கமாக
நவின்றனர் 'புறுக்கான்' தன்னை
என்றுமே பொருந்துமாறு
ஏற்றமாய்த் தந்ததொன்றே
நின்றுமே 'மு:ஜிஸாத்தாய்'
நிறை நபி பெருமை கூறும்
*("புறுக்கான்–இஸ்லாம் மார்க்கம்)*
*(மு:ஜிஸாத்"–அற்புதம்)*

50. சூழ்ச்சி செய்த துரோகி
பிறந்தவூர் ஹிஜாஸை நபிகள்
பிடியிருந்தகற்றி ரோமர்
புறங்கவர்ந்தளித்து ஆட்சிப்
பொறுப்பினைப் பெறுவதற்காய்
மறமுடை மார்க்கம் புக்கு
மயக்கிய 'ஹுவைரிஸ் சூழ்ச்சி
திறமுடன் நபி அழித்தார்
தீயனும் கொலையுண்டானே

51. உயிர் நீத்த உத்தமர்
திருநபி உறுதி கண்டு
திகைத்தது தீயோர் கூட்டம்
கருவிலே 'தீனைக்' கொல்ல
கருதியே 'க:பா' வந்த
திரு நிறை நாயகத்தைத்
தீர்த்திட முயன்ற போது
அருளுடை 'ஹாரித்' நண்ணி
ஆருயிர்ந்து காத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாரித் இப்னு அபீஹாலா. ஹதீஜா (றழி) அவர்களின் முன்னைய கணவரின் மகனாவார் இஸ்லாத்திற்காக இன்னுயிர் தியாகம் செய்த உத்தமர்.

52. உயிர் கொடுக்கத் துணிந்த உண்மையாளா
துணிகொண்டு கழுத்திறுக்கி
தூயவரைக் கொல்லுதற்கு
அணிதிரண்டு முயன்ற பெரும்
அக்கிரமக் காரர்களை
துணிவுடனே எதிர்த்துயிரை
துறந்திடவும் துணிந்த அரும்
பணிவன்பு கொண்ட அபூ
பக்கர் புகழ் என்னென்போம்

நாயகம் (ஸல்)அவர்களின் நெருங்கிய இணை பிரியாத தோழர் ஹஸ்ரத் அபூபக்கர் (றழி) அவர்கள். சித்தீக் –உண்மையாளர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். முதல் கலீபா. நாயகத்துடன் ஹிஜ்ரத் சென்றவர். நபிகளாருக்குத் தனது அன்பு மகள் ஆயிஷாவை மணமுடித்து வைத்து மகிழ்ந்த மாமனார். அப்துல் கஃபா என்பது இவரின் முன்னைய பெயர்.

53. ஏழைகளின் இதயமே இறைவன் ஆலயம்.
எத்தனை தீங்கு நேர்ந்தும்
ஏகனின் தூதர் தங்கள்
சித்தமே உறுதி பூண்டு
சிறிதுமே தளர்ந்தாரில்லை
இத்தரை மீதுதித்த
இறைதூதர் யாவரையும்
ஒத்த முறையாக ஏழ்மை
உற்றவரே மறை தொடர்ந்தார்

பொருமானார் (ஸல்) அவர்கட்கு முன் தோன்றிய நபிமார்களை முதலில் விசுவாசித்தவர் ஏழைகளே. உதாரணம்: நபி ஈஸா (அலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவர்களை மீனவர்களே முதலில் விசுவாசித்தனர். நபி நூஹ் (அலை) அவர்களை ஏழைகளே விசுவாசித்தனர்.*

54. பிளவுண்ட முழுமதி
அத்தாட்சி வேண்டுமென்று
அறைந்திட்ட 'காபிர்கள்
பித்தான பேச்சுக்கும்
பின்வாங்கவில்லை நபி
முத்தாக ஜொலித்திலங்கும்
முழுமதியைப் பிளவுசெய்தார்
சத்தான காட்சி கண்டும்
சளக்கர்கள் வித்தை என்றார்

*'மறுமை நெருங்கி விட்டது (அதற்கு அறிகுறியாக) சந்திரனும் பிளந்து விட்டது: எனினும் அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்ட போதிலும் (அதனைப்) புறக்கணித்து, "இது தொடர்ந்த சூனியந்தான்" என்று கூறுகின்றனர்."*

*(அல்குர்ஆன்–54: 1–2.) ("காபிர்–நிராகரிப்போர்)*

55. திருமதி பிளந்த திகைப்பு.
திருவேனும் அழகில் பாதி
திரு நபி யூசுப் பெற்றார்
அரும் பெரும் வனப்பையெல்லாம்
அண்ணலார்க்கிறையளித்தான்
இரும்பினை இளகச் செய்யும்
இயல்பினை தாவூத் பெற்றார்
திருமதி தனைப் பிளக்கும்
திகைப்பினை நபி புரிந்தார்

56. நல்மனங் கொண்ட நஜ்ஜாஷ்.
வஞ்சகர் தீங்கு நாளும்
வரம்பிலா நிகழ்ந்த போது
துஞ்சிய தீனோர் 'ஹிஜ்ரத்'
தூர அபீசீனியாவில்
தஞ்சமாய் சென்றார் அங்கும்
தறுகணர் தொடர்ந்து சென்றார்
அஞ்சிடாதிருப்பீர் என்று
அடைக்கலம் தந்தார் நஜ்ஜாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முஸ்லிம்களின் முதல் 'ஹிஜ்ரத்' இது. பதினைந்து பேரைக் கொண்ட கோஷ்டியொன்று ஹஸ்ரத் ஜவ்பர் இப்னு அபூத்தாலிப் (றழி) அவர்களின் தலைமையில் அபீசீனியாவிற்கு (எத்தியோப்பியா) நபிகளாரின் கட்டளைப்படி சென்றது. அபீசீனிய மன்னர் நஜ்ஜாஷி என்பவராகும். "தாங்கள் இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டதன் பின்னால் அல்லாஹ்வினி மித்தம் வீட்டைத் துறந்து வெளியேறுபவர்கள் அவர்களுக்கு நிச்சயமாகவே நாம் இவ்வுலகில் அழகான இருப்பிடத்தை அளித்தருள்வோம் ("ஹிஜ்ரத்" - இறைக்காக இடம் பெயர்தல்)*

*(அல்குர்ஆன் - 16 :41)*

57. கோள் மூட்டிகள்.

மன்னர் நஜ்ஜாஷின் நல்ல
மனதினில் விஷத்தைத் தூவி
அன்னவர் நாட்டில் வந்து
அடைக்கலம் புகுந்தோர் தம்மை
முன்னவர் வாழ்ந்த நாடு
மூர்க்கமாய்க் கடத்துதற்கே
ஒன்னலர் தூது வந்தார்
ஓதினார் கோள்கள் மூட்டி

58. சூதுரைக்கு சூடு.

தூதுவர் சொன்னவைகள்
தூய நஜ்ஜாசும் கேட்டார்
ஈதுரை தவறென்றோத
இசைந்தரசவைக்கு வந்து
வாதுரை செய்தார் முன்னே
வழங்கினர் விளக்கம் ஜஃபர்
சூதுரை செய்தார் வாலைச்
சுருட்டியே நாணிப்போனார்

59. பாதகங்கள் புரிந்ததுண்மை

உயர்வுடை அரசே நாங்கள்
உத்தம குணங்களின்றி
துயர்தரும் பெண் கொலைகள்
துணை வரா சிலை வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவிலா பாதகங்கள்
தலை விரித்தாட வாழ்ந்தோம்
பயமிலாத நீதி யெங்கள்
பழக்காமாயிருந்ததுண்மை

60. வல்லவன் தூதர் வந்தெமை உயர்த்தினார்
நல்லியல்பின்றி மூட
நடத்தையிலுழன்ற போது
மெல்லியல் புள்ள நேர்மை
மேவிடும் நடத்தை போன்று
சொல்லிலே தூய்மை சேர
சொர்ணமாய் முஹம்மதென்பார்
வல்லவன் தூதராக
வந்தெமை உயர்த்தினாரே.

61. தேறுதல் சொல்வீர் மன்னா.
நாயனின் தூதர் நீழல்
நயம்பட வாழ்ந்த போது
தீயவர் தாங்கொணாத
தீமைகள் செய்ததாலே
நேயராம் தூதர் ஆணை
நெஞ்சமே ஏற்று உங்கள்
தேயமே வந்தடைந்தோம்
தேறுதல் சொல்வீர் மன்னா

62. சாதகமான சூழலில் சத்திய தீனோர்
சோதரர் ஜஃபர் பண்பாய்
சொன்ன நன்மொழிகள் மொத்த
நீதமாயிருக்கக் கண்டு
நீசர் தம்தூயர்களைந்து
ஆதரவளிப்பேனென்று
அரசரும் விடைபகர்ந்தார்
சாதகமான சூழல்
சத்திய தீனோர் வாழ்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. கொடியவனைத் தண்டித்தார்:
கோமான் அணி சேர்ந்தார்.
கல்லால் அடித்து தலைக்
காயத்தை நபிக்களித்த
பொல்லான பூஜஹ்லை
பொங்கியெழு ஹம்ஸாவும்
வில்லாலடித்து பழி
விதித்து மகன் நபிமுன்னே
அல்லாஹ்வின் சன்மார்க்கம்
அகமுவந்து ஏற்றனரே

*அபூத்தாலிப் அவர்களின் சகோதரர் ஹஸ்ரத் ஹம்ஸா (றழி) அவர்கள் நபிகளாரின் சிறிய தந்தை, பெரும் வீரர்.*

64. வெடியென விரைந்தார் உமர்
கொடியவனபூஜஹ்லும்
கொடுத்திடும் பரிசுக்காகத்
துடிப்புடன் தூதர் சிரசைத்
துணித்திடும் உறுதி பூண்டு
வெடியெனக் குமுறி கோப
வெறியோடு உமர் விரைந்த
இடியெனும் செய்தி கேட்டு
இருந்தனர் விழிப்பாய் தீனோர்

65. சூழுரைத்து வாளெடுத்தவர் தாள் பணிந்தார்.
நாதரைக் கொல்லுதற்காய்
நாடி "உமர்" செல்லுங்கால்
சோதரி இஸ்லாம் ஆன
சொல் கேட்டு அங்கே செல்ல
வேதவாக்கொலி கேட்டுள்ள
வெந்தணல் நீங்கி உண்மைத்
தூதரே முஹம்மத் என்று
தூயராய் இஸ்லாமானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஹஸ்ரத் உமர் (றழி) அவர்கள் பெரும் வீரர். துணிவுள்ளவர். இரண்டாவது கலீபாவானவர். இவரின் ஆட்சிச் சிறப்பை வரலாறு போற்றும். நாயகத்தைக் கொல்லச் சென்றவர் தன் சகோதரியும், மைத்துனரும் இஸ்லாமான செய்தி கேட்டு அவர்களை அழிக்க அங்கே செல்ல, அவர்களிருவரும் ஓதிய மறை வசனங்களை மறைந்திருந்து கேட்டு மனந்திருந்தி மறை புகுந்தார். இந்நிகழ்வு இஸ்லாத்தின் திருப்பு முனையாகும்.*

66. பாசடைந்திருந்த வைரம் பளிச்சிட்டது.

பாசடைந்திருந்த வைரம்
பட்டை தீட்டியதைப் போல
நேசராய் உமரே பாரூக்
நேர்மையிலிணைந்திலங்கி
தாசராய் நபிகளாரின்
தனித்துவ மதிப்பைப் பெற்று
பேசரும் தலைவராகப்
பெரும் புகழ் படைத்து நின்றார்

67. குடிபெயர்ந்த குலம்.

குறைஷியர் நபியைத் தீயோர்
குழுவிடம் ஒப்படைக்க
முறையுடனிணங்கா தப்துல்
முத்தலிப் குலத்தாரோடு
குறையுடை வேறிடத்தில்
குடிபெயர்ந் திருந்தாரங்கு
நிறையுடை உணவுமின்றி
நீண்ட மூன்றாண்டு வாழ்ந்தார்

68 இடம் பெயர்ந்தோர் இருப்பிடம் வந்தனர்.

தங்களின் மக்களாங்கே
தவித்திடும் நிலை பொறாதோர்
பொங்கிடும் கோபங் கொண்டு
போக்கிரி அபூஜஹ்லை
சங்கை செய்யாதெதிர்த்து
சபதமோடங்கு சென்று
மங்களமாக ஹாஷிம்
மக்களை மீள வைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. அன்பும், ஆதரவும் அணைந்தன.

துக்க ஆண்டெனவே கூறும்
துயருறு காலந் தன்னில்
தக்க காவலராம் பெரிய
தந்தையாம் அபூத்தாலிபும்
பக்கமே துணையாய் நின்ற
பத்தினி ஹதீஜாவும் நம்
ஹக்கனின் ஏவலாலே
காலமாய்ப் போனாரந்தோ!

*அன்பளித்தவர் அன்னை ஹதீஜா (றழி) அவர்கள், ஆதரவளித்தவர் அபூத்தாலிப் அவர்கள், இருவரும் காலமான நபித்துவத்தின் பத்தாம் ஆண்டை 'ஆமுல் ஹுஸ்ன்' துக்க ஆண்டு என வரலாறுரைக்கும்.*

*(ஹக்கன்- அல்லாஹ்)*

70. உருகினர் பாத்திமா.

இருகரமிழந்த தன்ன
இருந்த நந்நபிகளாரை
கருகிய நஞ்சின் தீயோர்
கடினமாய்த் தீங்கிழைத்தார்
தெரு மணல் நபி தலை மேல்
தேடியே இறைத்த போது
உருகிய பாத்திமாவை
உடன் நபி தேற்றினார்கள்

71. வன்னெஞ்சருக்கு வாய்ப்பு

இருவரின் பிரிவினாலே
இருந்திடும் பலமும் குன்றி
இருப்பதால் நபிக்கு மேலும்
இன்னல்கள் செய்வதற்கு
தருணமே இது தானென்று
தாங்கொணா கொடுமை செய்தார்
திருமறை போதஞ் செய்ய
திரு நபி தாயிப் சென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. சிந்திய செங்குருதி.
நாயகம் தாயிப் சென்று
நல்லுபதேசம் செய்ய
பேயராய்க் கிளர்ந்தெழுந்தார்
பெருமானார்க்கடாது செய்தார்
தீய வெஞ் சொற்களாலே
திட்டி வெங்குருதி வீதி
பாயவே கற்கள் வீசி
பழித்துமே விரட்டி விட்டார்

73. பொறுமையின் எல்லை.
அறிந்திடாதவர்கள் செய்த
அனைத்தையும் பொறுக்குமாறு
அறிந்திடும் இறையை வேண்டி
அமைதியாய் மக்கா மீள
நெறியிலார் நபிகளாரை
நெருங்கிட வேண்டாமென்றார்
சிறிதுமே அஞ்சாதல்லாஹ்
சித்தமே யாவுமென்றார்

*தாயிபிலிருந்து திரும்பிய நபியை மக்காவுக்குள் வரவிடாமல் தடுத்த போது, "முத்யிம் இப்னு அதி" என்னும் தலைவரொருவர் ஆயுதபாணிகளுடன் சென்று அண்ணலைக் கூட்டி வந்தார். அண்ணலுக்கு தீங்கு வராதவாறு செல்லுமிடமெல்லாம் கூடவே சென்றார். அவருக்கு சிரமம் அளிக்க விரும்பாது, இறைவன் உதவியே பெரிதெனக் கூறி அவரை நாயகம் (ஸல்) அவர்கள் கூடவராமல் நிறுத்தி விட்டார்கள்.*

74. "சிறை காக்கும்காப்பெவன் செய்யும்"
தூதருக்கெதிராய்க் கூறி
துபைலுப்னு அம்ரென்பாரை
நாதரை அணுகா வண்ணம்
நஞ்சினர் வைத்த போதும்
தீதறு நபிகளாரின்
திருமறை வசனங் கேட்டு
நீதமாய் இஸ்லாமான
நிகழ்வொரு திருப்பமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. சஞ்சலம் தீர்த்த சஞ்சீவிகள்.

நனிமையில் அடையும் துன்பம்
 தன்மகள் பாத்திமாவின்
இனிய நல் வதனங்கண்டு
 இதம் பெறும் நபிகளார்க்கு
கனிந்திடும் துணைவி சேர்க்க
 கருதிய அபூபக்கர் தம்
நனி சிறப்பாயிஷாவை
 "நந்நிக்காஹ்" செய்து வைத்தார்

76. திக்கற்றவர் துணைவியானார்.

காதகர் தீங்கை விட்டும்
 கடந்திட 'ஹபஷா' சென்ற
கோதறு 'ஸௌதா' அன்னை
 கொண்டவர் இறந்ததாலே
ஆதரவேதுமில்லா
 அவதியைக் கருத்தில் கொண்டு
தூாதர் தன் துணைவியாக்கி
 துயரினைத் துடைத்தாரன்றே

*திக்கற்ற நிலையிலிருந்த "ஸௌதா பின்த் ஸம்ஆ" என்பவரை நபிகளார் திருமணம் செய்தார்கள். 'ஆயிஷா' நாயகி சிறு வயதினர். எனவே வீட்டுக் கருமங்களைப் புரியவும், குழந்தைகளைப் பாதுகாக்கவும் ஸௌதா அன்னை மிகவும் உதவினார்கள். விதவைகளை மறுமணம் செய்து ஆதரிப்பது தீர்க்கதரிசிகளின் வழக்கமாகும்.*

*(ஹபஷா—அபிஸீனியா)*

77 மெல்லத் திறந்தது நபி நகர் வாசல்

கடமையாய் ஹஜ்ஜு செய்ய
 கருதியே வந்தவர்கள்
இடத்திலே சென்று தூாதர்
 இறைமறை கூறுவார்கள்
திடமுடை அறுவர் யத்ரிப்
 திரு நகரிலிருந்து வந்தோர்
உடன் விசுவாசங் கொண்டு
 உறுதி பூண்டிஸ்லாமானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பின்பு மதீனாவென்று அழைக்கப்பட்ட ஊர் யத்ரிப். அங்கிருந்து ஹஜ்ஜுக்கு வந்தவர்களில் அறுவர் முதன்முதலில் இஸ்லாமாகினர். அவ்வூரில் 'தீன்' பயிர் முதலில் முளை விட்டது.*

78. மறை மணங்கமழும் மாநகர்.

முதன்முறை ஈமான் கொண்ட
மூவிரண்டோடு மேலும்
இதமுடன் இரு மடங்காய்
இணைந்தனர் அடுத்த ஆண்டில்
மதத்தினைப் பரப்புதற்கு
மாநகர் யத்ரிப் சென்று
நிதம் பிரச்சாரஞ் செய்ய
நியமனமானார் "முஸ்அப்"

*யத்ரிபிலிருந்து வந்த இரண்டாம் குழுவினர் இஸ்லாமாகினார். பிரசித்தமான 'அகபா' உடன்பாடு ஏற்பட்டது. பிரசாரகராக "முஸ்அப் இப்னு உஹைமர்" என்பவரை யத்ரிபுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அங்கே இஸ்லாம் விரைவாகப் பரவியது.*

79. வியப்பூட்டும் விண்ணேற்றம்.

நடு நிசியான நேரம்
நவின்றிடும் 'மிஹ்றாஜென்னும்'
வடுவிலா பயணம் ஏக
வானவர் 'ஜிப்ரீல்' கோர
கடுகதி 'புறாக்கில் சென்று
ககன மின்னேணி மூலம்
முடுகினார் வானலோகம்
முஹம்மது நபிகள் நாதர்

*நபிகளாரின் வாழ்வில் நடந்த மிக அற்புதமான அருள் நிறை நிகழ்ச்சி 'மிஃறாஜ்' ஆகும் கஃபாவிலிருந்து மிகத் தொலைவிலுள்ள "பைத்துல் முகத்தஸுக்கு" 'புறாக்' என்னும் ஏறு வாகனத்தில் சென்று, அங்கிருந்து மின்னேணி மூலம் வானங்களைக் கடந்து இறைவனின் சன்னிதானத்தையடைந்து, அவனுடன் சம்பாஷித்தார்கள். 'அல் இஸ்றாஃ' என்றும் இதைக் கூறுவர்.*

*('புறாக்'–'Buraak'- ஏறு வாகனம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"... .. . . . . . அவன் தன் அடியாரை (க் க.:.பாவாகிய) சிறப்புற்ற பள்ளியிலிருந்து(வெகு தூரத்திலிருக்கும் பைத்துல் முகத்தஸிலிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். . . . .. . . . "

(அல்குர்ஆன் : 17: 1)

80. துரித மின்னேணி.

நாயன் தன் நபி மூஸாவை
நலமிகு மலைக்கழைத்தான்
நேயராம் நபி கோமானை
நெருக்கமாயருகழைத்தான்
நாயகர் சுலைமான் செல்ல
நல்லதோர் காற்றைத் தந்தான்
தூய நந்நபியழைக்க
துரித மின்னேணியீந்தான்

81. பரமனின் பரிசு

வல்லவன் அன்புத் தூதர்
வானுலகேழும் தாண்டி
எல்லையில்லாத சோதி
ஏகனின் சமுகம் சென்று
சொல்லரும் காட்சியோடு
சொர்க்கமும் நரகும் கண்டு
நல்ல ஐவேளைத் தொழுகை
நாயனின் பரிசாய்ப் பெற்றார்

வானுலகில் முன்னைய நபிமார்களைக் கண்டு அளவளாவி, சுவர்க்கம், நரகம் ஆகியவற்றையும், பிற காட்சிகளையும் கண்டார்கள். இஸ்லாத்தின் ஆணிவேராகிய ஐங்காலத் தொழுகையை அல்லாஹ் தன் தோழருக்குப் பரிசாகக் கொடுத்தான். .இஸ்லாமிய இயக்கப் பணிகளுக்கான மனப் பக்குவத்தையும், வலிமையையும் இறைவன் நபிகளாருக்களித்தான். இப் பயணம் மிகமிகக் குறுகிய நேரத்தில் நடந்து முடிந்தது.

82. அல்லாஹ்வும் அமரரும் வாழ்த்தினர்

வணங்குதற்குரிய ஏகன்
வல்லவன் அல்லாஹ்வோடு
இணங்கிடும் அமரரெல்லாம்
இணையிலா வாழ்த்திசைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமுடன் மாந்தரெல்லாம்
கூறுவர் ஸலவாத் எங்கும்
மணங்கமழ் முஹம்மத் கண்ணின்
மணியவர் மகிமை கேளீர்
*(ஸலவாத் - வாழ்த்து)*

83. உண்மையாளர் சித்தீக்.
விண்ணகம் சென்றிறைவன்
விந்தைகள் கண்டுவந்த
கண்ணிகர் நபிகள் சொல்லை
கயவர்கள் பிதற்றலென்றார்
அண்ணலார் சொன்னவைகள்
அனைத்தையும் அபூபக்கர்
உண்மை கொண்டுயர்வாம் 'சித்தீக்'
உன்னத பேரும் பெற்றார்
("சித்தீக்" - உண்மையாளர்)

84. ஈந்துவந்த 'சித்தீக்'.
உலகிலே வந்துதித்த
உயர்வுறு நபிகளுள்ளே
திலகமாயத் திகழ்பவர்கள்
திருநபி முஹம்மதென்போம்
பலமுறு உடலும் உயிரும்
பணம் பொருள் யாவும் இஸ்லாம்
நலம் பெற ஈந்துவந்த
நாயகர் சித்தீக் என்போம்.

*"நபிமார்களுக்கு அடுத்த ஸ்தானம் வகிக்கும் நாயகர், ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்கள்."* *(இது அறிஞர் முடிவு)*

85. வீட்டைச் சூழ்ந்து விரோதிகள்
தினந்தினம் இஸ்லாமங்கே
திசை தொறும் பரவக் கண்டு
சினமுறு குறைஷியர்கள்
சீலராம் நபியைக் கொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தவர் பலரைத் தேர்ந்து
இணைக்கமாய் சதியும் செய்தார்
வனப்புறு நபியின் வீட்டு
வாசலில் காத்து நின்றார்

*கொலையில் எல்லாக் குடும்பத்தவரும் சம்பந்தப்பட வேண்டுமென்பதற்காக பலர் கலந்து கொண்டனர். இதன் சூத்திர தாரி அபூஜஹில்.*

86. துணைக்கொரு சித்தீக்.

மக்கமா நகரினின்று
மதீனமே செல்வதற்கு
"ஹக்கனின்" ஆணை வந்த
கன மிகு செய்தி கேட்டு.
பக்கமே தானுஞ் சேர்ந்து
பயணமே செல்வதற்கு
மிக்க நல் விருப்பை நபியால்
மித்திரர் சித்தீக் பெற்றார்

87 கண் மறைத்த மண்

அண்ணலார் வெளியேறட்டும்
அவர்களைக் கொல்வோமென்று
எண்ணமே கொண்டு தீயோர்
ஏந்தலின் வீட்டைச் சூழ்ந்தார்
மண்ணொரு பிடியிலோதி
மாநபி எறிந்தார் தீயோர்
கண்களும் மறைந்து போக
கடிதினில் தூதர் சென்றார்

*"(நபியே) உம்மை சிறைப்படுத்தவோ அல்லது உம்மை (ஊரை விட்டு) வெளியேற்றி விடவோ உமக்கு விரோதமாக, நிராகரிப்போர் சூழ்ச்சி செய்து கொண்டிருந்த (நேரத்) தை நினைத்துப்பாரும். அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர் (அவர்களுக்கெதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். ஆனால் சூழ்ச்சி செய்வோரிரெல்லாம் அல்லாஹ் மிக்க மேலானவன்".*

*(அல்குர்ஆன்–8 :30)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"(நபியே) நிச்சயமாக எவன் (இறைவன் கட்டளைகள் பொதிந்த) இந்த குர்ஆனை உம்மீது விதித்து இருக்கிறானோ அவன். நிச்யமாக உம்மை (மக்காவாகிய உம்முடைய) இல்லத்தில் திரும்பச் சேர்த்து வைப்பான். . . . (அல்குர்ஆன் – 28:85)

88. தங்கமும், சிங்கமும்.
அங்கிருந்தேகுமென்று
அரு நபிக்கிறைவன் சொன்ன
சங்கதி கேட்ட சித்தீக்
சகலதும் விட்டு நாதர்
தங்களோடிணைந்து சென்றார்
தனிமையாய் நபியின் வீட்டில்
சிங்கமாய் அலியார் தியாக
சிகரமாய் அங்கிருந்தார்

அல்லாஹ்த ஆலாவின் ஆணைப்படி மக்காவிலிருந்து மதினாவுக்குப் புறப்பட்டுச் சென்ற சம்பவம் 'ஹிஜ்ரத்' எனப்படும். வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சி இது. தங்கத் தோழர் அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்கள் நபிகளாருடன் கூடச் செல்ல, வீர சிங்கம் அலீ (றழி) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் படுக்கையில் அவர்களைப்போல படுத்துக் கொண்டார்கள். நபிகளாரின் வெளியேற்றத்தை எதிரிகளிலிருந்து இறைவன் மறைத்தான்.

89. ஏமாறிகள் தடுமாறினர்.
அண்ணலும் சென்றதாலே
அவமதிப்பான தீயோர்
எண்ணி நூறொட்டகைகள்
எம்மிடம் முஹம்மதை நேர்
கொண்டு வந்தோர்க்களிக்க
கொடியவர் முன் வந்தாரே
கண்ணிய இருவர் தம்மை
கர்த்தன் காத்தருளினானே

கொலை புரியக் காத்திருந்தோர் ஏமாறினர். பரிசுக்கு ஆசைப் பட்டோர் பல திக்குகளிலும் பறந்தோடினர். அப்படிச் சென்றோரில் 'சுராக்கா' என்பவருக்கு நடந்த சம்பவம் நாயகத்தின் அற்புதங்களிலொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. பரிசினுக்காசை வைத்தார் பரிதவித்தார்.
பரிசினுக்காசை கொண்டு
பறந்தனர் சுராக்கா என்பார்
பிரிந்திடாதிருவர் பார்த்தார்
பின் தொடர் பகைவர் தன்னை
பரியினின்கால்கள் மண்ணில்
பதிந்திட நபிகள் நாட
துரிதமாய் வீழ்ந்தார் நெஞ்சத்
துணிவெலாம் பயத்தாலோட

91. கன்மனம் கரைந்தது.
தன்னிலை கண்டு உள்ளம்
தளர்ந்ததால் நபிகளாரின்
பொன் முகம் பார்த்து தன்னை
பொறுத்திட சுராக்கா வேண்ட
நன்னயமாகத் துன்பம்
நலம் பெற நபிகள் செய்தார்
கன்மனங்கரைந்து வீரர்
கடிதினிலீமான் கொண்டார்

92. தவ்ரின் அதிர்ஷ்டம்.
புனிதமாய் ஹிஜ்ரத் சென்ற
புண்ணிய நபிகளும் தன்
இனியரபுபக்கரோடு
இடைவழி தன்னிலிலுள்ள
தனிக் குகையான 'தவ்ரில்'
தங்கிட தனியவன் தன்
கனிந்திடும் அருளினாலே
காத்தமை புதுமையன்றோ

*மக்காவுக்கு மூன்று மைல் தொலைவிலுள்ளது 'தவ்ர்' குகை: இறை நேசர்களை மறைத்து வைத்த பாக்கியத்தை பெற்றது. குகை வாசலையடைந்த விரோதிகளையும் திசை மாறவைத்த அடையாளங்கள் அல்லாஹ் தஆலாவின் வலிமைக்கு உதாரணங்களாம். ("தவ்ர்"-Dhour)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. குகைக்குள் மூவர்

மனிதரின் நடமாற்றம்மம்
மலைக்குகையருகில் கேட்க
தனித்திருக்கின்ற நாங்கள்
தப்பிட முடியாதென்ற
பனித்திடும் தோழருக்கு
பயகம்பர் பகருகின்றார்
தனியவனெம்மோடுள்ளான்
தயங்கிடேல் அவனே போதும்

*'நாமிருவர் மட்டும் இருக்கிறோம். பகைவரோ பலருள்' என்ற அபூபக்கர் (றழி) பகர 'நாமிருவர் மட்டுமல்ல;நம்மோடு இறைவனுமிருக்கின்றான்' என்று நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். " " " " " " (விரோதிகள் சூழ்ந்து கொண்ட) சமயத்தில், தன்னுடன் (குகையில்) இருந்த தோழ(ராகிய அபூபக்க)ரை நோக்கி, 'நீர் கவலைப்படாதீர்: நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்' என்று (ஆறுதல்) கூறிய போதும்.. ... .. (குர்ஆன்:9:40)*

94. இறைவன் அருள்.

குகையினின் வாசலண்டை
குறுகினர் பகைவர் தேடி
மிகைத்திடும் இறைவன் அருளும்
மிளிர்ந்தது சிலந்தி வீடாய்
தகையுடை புறாவின் கூடும்
தனியவன் படைத்தானங்கே
பகைவர்கள் உள்ளே பார்த்தல்
பயனிலை என்றே சென்றார்

95. இகம் எழுந்த இறை இல்லம்.

மலைக்குகை விட்டு நாதர்
மதீனமா நகரின் மக்கள்
நிலைத்திடு 'குபாவில்' தங்க
நீதராம் அலியும் சேர்ந்தார்
தலைமையாய் மஸ்ஜித் அங்கே
தாபிதம் செய்து அயலில்
உலைவிலா முதலாம் ஜும்ஆ
உத்தமர் நடத்தி வைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குபா என்னுமிடத்தில் முதலாவது மஸ்ஜித் ஒன்றை நபி (ஸல்) அவர்கள் கட்டினார்கள்.

........... ஆரம்ப தினத்திலேயே (அல்லாஹ்வின்) பயபக்தியின் மீது (பரிசுத்தமான எண்ணத்துடன்) அமைக்கப்பட்ட பள்ளிதான்,நீர் நின்று (தொழவும்,தொழவைக்கவும்) மிகத் தகுதியுடையது. பரிசுத்தவான்களாக இருப்பதையே விரும்பும் மனிதர்கள் அதில் இருக்கிறனர். அல்லாஹ்வும் (இத்தகைய) பரிசுத்தவான்களையே விரும்புகின்றான்.

(அல்குர் ஆன் –9:108)

96. ஜும்ஆ மலர்ந்தது
கூடியே தொழுவதற்கு
குறித்திடும் 'ஜும்ஆ' தன்னை
தேடியே இறையுவந்தான்
தேர்ந்திடும் மக்கமேனும்
நாடியே முதலாம்'ஜும்ஆ'
நடந்தது 'ஜவாதை' ஊரில்
ஈடிணையற்ற நாயன்
இயம்பினன் "ஜும்ஆ சூறா"

(சூறா–அத்தியாயம்)

ஜும்ஆ் தொழுகை ஹிஜ்ரத்துக்கு முன் மக்காவில் கடமையாக்கப்பட்டது. அன்று இஸ்லாத்தைத் தழுவியவர்களின் தொகை குறைவாக இருந்தமையும், காபிர்களுக்குப் பயந்து கடமைகளை மறைமுகமாக செய்து வந்தமையும் மக்காவில் ஜும்ஆ நடைபெறாமைக்குக் காரணங்களாகும். எனவே மதீனாவுக்கு ஒரு மைல் தொலைவில் உள்ள "ஜவாதை" என்னும் சிற்றூரில் முதலாம் ஜும்ஆ நடந்தேறியது. (மஙானி) "விசுவாசிகளே ஜும்ஆ தினத்தன்று தொழுகைக்காக அழைக்கப்பட்டால், வர்த்தகத்தை விட்டு விட்டு அல்லாஹ்வை தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள். . .. . "

(அல்குர்ஆன் –62:9)

97. இஸ்லாத்தின் முதற்கொடி
இறைவனின் ஆணையேற்று
இருந்தவூர் நீங்கிக் கனிகள்
நிறைந்திடு 'யத்ரிப்' புகவே
நினைத்திடும் போதில் 'அஸ்லம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையுடன் கொடியொன்றேந்தி
முடுகுதல் நல மென்றாரே
கறைமிலா பாகை தன்வாள்
கட்டியே ஏந்தச் சொன்னார்.
*("அஸ்லம்"-நபித் தோழருளொருவர்)*

98. கானம் பொழிந்தது - தங்கும் - தானம் கிடைத்தது
கானமா மழை பொழிந்து
'காத்தமுல் அன்பியாவை'
ஆனந்த வெள்ளம் பொங்க
அனைவரும் வரவேற்றார்கள்
போன தன் ஒட்டகை சேர்
பொலிவுறு அபூஅய்யூபின்
தானமாம் வீட்டின் கண்ணே
தங்கினார் நபிகள் கோமான்

*'யத்ரிப் மக்கள்' - அன்சார்கள் மகிழ்வுடன் வரவேற்றார்கள். பலரும் தங்களுடன் தங்கும்படி நபிகளாரை வேண்டினார்கள். தமது ஒட்டகத்தைத் தன்னிச்சையில் விட்டு தங்கிய இடமான அபூஅய்யூப் அவர்களின் இல்லத்தில் பெருமான் (ஸல்) அவர்கள் தங்கினார்கள்.*
*("காத்தமுல் அன்பியா"-நபிமார்களுள் இறுதியானவர்)*

99. பாரின் பதக்கம்
துதித்திடும் "நபவி" என்னும்
தூயவனில்லம் அவ்வூர்
பதித்தனர் நபிகள் இந்தப்
பாரினில் பதக்கமாக
மதித்திடும் நபி பேராலே
மதீனத்துன்னபியாய் யத்ரிப்
உதித்திசுலாமியத்தை
உலகினுக்கிறைத்ததம்மா

*ஒட்டகம் நின்ற இடத்தில் "மஸ்ஜிதுன்னபவியை" அமைத்தார்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்கள். யத்ரிப் என்ற ஊர் 'மதீனத்துன் நபி' (நபியின் நகர்) யாக மாறி மதீனா என வழங்கியது. அந்த மஸ்ஜிதையொட்டியே நபிகளாரின் இல்லமும் அமைந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. நாடி வந்தோர் நம் பிறவிகள்
மக்கமா நகரில் நீங்கு
மாண்புடை 'முஹாஜிரீன்கள்'
தக்கமா மதிப்பு வைத்து
தம் பிறப்பாகக் கொண்டு
பக்கம் வைத்தாதரித்தார்
பண்புடை 'அன்ஸாரீன்கள்
இக்கதை தீயோர் நெஞ்சில்
ஈட்டியாய்த் தைத்ததந்தோ

*('முஹாஜிரீன்'-மக்காவிலிருந்து மதீனாவுக்கு இடம் பெயர்ந்ததோர். 'அன்ஸாரீன்-மதீனா வாசிகள்.)*

101. ஒன்றே மறை: ஒன்றே குலம்.
என்றுமே குலம் பிரிந்து
எதிரெதிராயிருந்தோர்
ஒன்றுபட்டொரு சமூக
ஒழுக்கமே அமைந்ததாலே
தொன்றுதொட்டங்கு யூதர்
தொடரதிகாரம் நீடு
நின்றதை "தீனின் பாதை
நீக்கிய முறையே விந்தை

*மதீனாவில் 'அவுஸ்' 'கஸ்ரஜ்' என்ற இரு குலத்தவர் நீண்ட காலமாக தமக்குள் சண்டை செய்து வந்தனர்.இஸ்லாம் இவர்களை இணைக்கவே, செல்வாக்கோடு இருந்த யூதர் ஆதிக்கம் மங்கத்தொடங்கியது.*

102. ஏழ்மையின் சின்னம
ஏழ்மையை அணியாய்க் கொண்டு
எளிமையின் சின்னமாக
வாழ்ந்திடும் நபியின் பண்பை
வழுத்திடல் முடியாதன்றோ
சூழ்ந்திடும் தேவையாவும்
சுயமுடன் தாமேசெய்து
கூழினையாயின் நீரைக்
குடித்துயிர் வாழ்ந்தார் தூதர்
(கூழ்–உணவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103. திண்ணைத் தோழர்

எண்ணெய்யும் எள்ளுமாக
ஏந்தல் நந்நபியோடொன்றி
திண்ணையின் தோழரென்று
திகழ்ந்தனர் பல்லோரங்கே
எண்ணமும் உயிரும் வாக்கும்
ஏகனுக்கும் நபிக்கும்
திண்ணமாய் அர்ப்பணித்து
தியாகிகளாயிருந்தார்.

104. தொழுகைக் கழைப்பு

தொழுகையே இஸ்லாமென்ற
தோணியின் துடுப்புமாகும்
வழுவிலாததை நடாத்த
வாருமென்றழைப்பதற்கு
பழுதிலா வழிகள் பல்லோர்
பகன்றனரெனினும் உமரின்
அழுத்தமாம் இன்றை 'பாங்கை'
அண்ணலும் உவந்து ஏற்றார்.
("பாங்கு"(Baanku) –தொழுகைக்கழைத்தல்)

105. பகைவர்கள் சூழ்ச்சி பறந்தது

யூதரின் வலிமை மங்கும்
யுகமது உதயமாக
தூதருக்கெதிரானோரைத்
தூண்டவே காத்திருந்தார்
நீதமாய் யாரும் வாழும்
நிபந்தனையொன்றை ஆக்கி
பாதகர் சூழ்ச்சியெல்லாம்
பறந்திடச் செய்தார் கோமான்

*நபிகளாரின் செல்வாக்கை அழிக்க யூதர்கள் எதிரணியை உருவாக்க முயன்றனர். மிக்க தீர்க்கதரிசனத்துடன், மதீனாவில் உள்ள எல்லாப் பிரிவினரையும் உடன்படிக்கையொன்றின் மூலம் கட்டுப்படுத்தினார்கள் காருண்ய நபி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. மறை வழி ஜிஹாத்
இறை வழி தன்னில் மக்கள்
இணைவதை சகித்திடாது
குறைஷியர் இஸ்லாம் "தீனின்"
குலத்தையே துடைத் தொழிக்க
முறையெலாம் செய்தல் கண்டு
முஹம்மது நபியவர்கள்
மறைவழி "ஜிஹாது" செய்ய
மனதிலே உறுதிபூண்டார்.

(ஜிஹாத்- (jihaadh –அல்லாஹ்வுக்காகப் போராடுதல்)

107. கழுத்தினுக்கருகில் கத்தி
கழுத்தினுக் கருகில் கூராம்
கத்தி வந்துற்ற வேளை
எழுந்தெதிர் கொண்டு காத்தல்
எவர்க்குமே ஏற்புடைத்தாம்
அழுந்திடும் 'குபுரின்' மக்கள்
அழித்திட வரவே நபிகள்
பழுதிலா போரும் செய்ய
படைத்தவனிணக்கம் கண்டார்.
('குபுர்–இறை நிராகரிப்பு)

108. போரினால் பரந்ததல்ல இஸ்லாம்.
போர் புரிந்திஸ்லாம் மார்க்கம்
போற்றியே பரப்புதற்காய்
பார் வந்த வீரரல்ல
பயகம்பர் எங்கள் பிரான்
சீர் அடைந்த மனம் நிறுவி
சிந்தனைக்கு விருந்தூட்டி
நேர்வழிக்கே வித்திட்ட
நேசரெங்கள் சாந்தி நபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

109. உங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்
உங்களின் ஆணை கேட்பின்
உயிரையும் மதித்திடாமல்
பொங்கிடும் கடலில் கூட
போய் விழுந்திடுவோம் நாங்கள்
தங்களைச் சுற்றி நின்று
தருக்கரை வெல்வோமென்ற
மங்களத் தோழர் கூற்றால்
மாநபி பூரித்தார்கள்

110. விரலசையக் காத்திருந்த வீரத் தியாகிகள்
வரலாற்று நிகழ்வுகளை
வகைவகையாயுணர்ச்சி பொங்க
குரலெழுப்பிக் கூறிடினும்
குவலயத்தில் குருநாதர்
விரலசையக் காத்திருந்த
வீரத்தியாகிகளின்
நிரலகலா நெறியினுக்கு
நிகருண்டோ கூறிடுவீர்.

111. சிலிர்த்தெழுந்தது சிங்க வீரம்
படையொடு பகைவர் கூட்டம்
'பத்ரிடை' வந்த சேதி
கிடைத்ததும் மதீன மக்கள்
கிளர்ந்தெழுந்தார் சிலிர்த்து
நடை பயில் சிறுவர் தொட்டு
நங்கையர் கூட நாதர்
விடையினுக்கேங்கி நின்றார்
விறலுடன் களத்தில் பாய

*மதீனாவிலிருந்து எண்பது மைல் தூரத்தில் உள்ளது 'பத்ர்' என்னும் இடம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. பிரார்த்தனைக் கீடுண்டோ?
தொகையினில் குறைந்த எம்மை
தோற்றிடச் செய்வாயாயின்
பகையிலா நெஞ்சோடுன்னை
பணிவதற்கெவரிருப்பார்
வகையொடு நீயளித்த
வாக்கினைக் காப்பாய் என்று
மிகைத்தவனிறையை நாதர்
மிகப் பணிவுடனிரந்தார்

*"பத்ரில் (நடந்த யுத்தத்தில்) நீங்கள் (எதிரிகளை விட ஆயுதத்திலும், தொகையிலும்) குறைந்தவர்களாக இருந்த சமயத்தில் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தான். . . . . . . . .*
*(அல்குர்ஆன் :3 : 123)*

*". . . . . . . . . அதி சீக்கிரத்தில் நீங்கள் (விசுவாசிகளால்) வெற்றி கொள்ளப்படுவீர்கள். . . . . ." (அல்குர்ஆன் :3 :12)*

*"(பத்ர் யுத்தக் களத்தில்) சந்தித்த இரு சேனைகளில் மெய்யாகவே உங்களுக்கோர் அத்தாட்சி இருந்தது. . . . . " (அல்குர்ஆன்3:130)*

113. சுரந்திடும் இறைவன் வாக்கு
புரந்திடும் இறைவன் வாக்கும்
புனிதமாய் முடியுமென்று
இரந்திடும் நபிகளார்க்கு
இயம்பினார் ஆபூபக்கர்
பரந்திடும் பகைவர் சேனை
பயந்து பின்வாங்கு மென்ற
சுரந்திடும் இறைவன் சொல்லை
சுந்தர நபியும் சொன்னார்

114. முடுகினர் மூவாயிரம் வானவர்
படுகளம் வந்த எம்மை
பாதுகாத்திடுவாய் என்று
நெடுங்கரமேந்தி நாதர்
நெகிழ்வுடனிறையை வேண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடுவிலா தீனோர் பக்கம்
வலிமையே சுரக்குமாறு
முடுகினர் அணியாய் வானோர்
முத்தரம் ஆயிரம் பேர்

*"(நபியே இப்பொழுது) நீர் விசுவாசிகளை நோக்கி (வானத்திலிருந்து) அனுப்பப்பட்ட மூவாயிரம் மலக்குகளைக் கொண்டு உங்கள் இறைவன் உங்களுக்கு உதவி செய்வது உங்களுக்குப் போதாதா? என்று கூறியதையும் நினைத்துப் பாரும்".*

(அல்குர்ஆன் – 3:124)

115. அல்லாஹ்வின் உதவியே பலம்
பலங்குறைந்தன்று நீவிர்
பத்ரினில் இருந்த போது
நலந்தரும் உதவியாவும்
நல்கினான் அல்லாஹ்வேதான்
விலகிடா நன்றியோடு
விளிப்புடன் கடமை செய்வீர்
உலக மாமறையின் கூற்றை
உளமதில் உண்டுவாழ்வீர்

(அல்குர்ஆன் – 3:123)

116. அல்லாஹ்வின் நாமத்தை அதிகமாகக் கூறுங்கள்
எதிரிகள் கூட்டமாக
எதிர்த்து வந்திடுங்கால் நீங்கள்
அதிர்வுறாதுறுதியோடு
அல்லாஹு அக்பரென்ற
துதியுடன் சப்தமிட்டு
தூய்மையாய்க் கூவிநின்றால்
விதிர்ப்புறா வெற்றி சேரும்
விளம்பிடும் வேத நூலும்

*"விசுவாசிகளே நீங்கள் (யுத்தத்தின் போது எதிரியின்) கூட்டத்தை சந்தித்தால் (கலக்கமுறாது) உறுதியுடன் (எதிர்த்து) நின்று (அல்லாஹு அக்பரென்று) அல்லாஹ்வின் திருநாமத்தை நீங்கள் அதிகமாக (உரக்க சப்தமிட்டு)க் கூறுங்கள். (அதனால்) நீங்கள் வெற்றியடைவீர்கள் " – (அல்குர்ஆன் – 8:45)"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117. வல்லவன் ஏவிய வானவர்.
நல்வழி நின்றோர்க் கென்றும்
நாயனும் உதவி செய்வான்
சொல்லரும் முறையின் அருளும்
சொரிந்திடுமுண்மை காண்பீர்
புல்லரும் வியக்குமாறு
புனித போர்க்களத்தில் ஏக
வல்லவன் ஏவ வானோர்
வந்து "தீனோரைக்" காத்தார்.

118. ஆதியின் உதவி அஞ்சியோர்க்கே
ஆதியை அஞ்சி நீங்கள்
அடக்கமாயிருந்தீராயின்
மோதிடும் பகைவர் கூட்டம்
மொய்த்திட வந்த போதும்
தூதிடும் விருது பெற்ற
தூய வானோரை மேலும்
நீதியாளன் அனுப்பி
நிச்சயம் உதவி செய்வான்

*"ஆம்: நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயந்து பொறுமையுடனிருந்தால் இதே சமயத்தில் (எதிரிகள்) உங்கள் மீது அடர்ந்தேறிய போதிலும் (மூவாயிரமென்ன) விருது பெற்ற ஐயாயிரம் மலக்குகளைக் கொண்டு உங்கள் இறைவன் உங்களுக்கு உதவி செய்வான்",*

*(அல்குர்ஆன்—3:125)*

119. மங்களச் செய்தி
பங்கமாய் வந்த தீயோர்
பகுதியைக் குறைப்பதற்கோ
தங்களை சிறுமையாக்கி
தம் வழி திருப்புதற்கோ
உங்களின் உள்ளமெல்லாம்
உவகையால் திருப்தி கொள்ள
மங்களச் செய்தியாக
மறையவன் இதனைச் செய்தான்

*"இதைக் கொண்டு உங்களுடைய இருதயங்கள் திருப்தியடையவும் உங்களுக்கொரு நன்மாராயமாகவுமே அல்லாஹ் இதைச் செய்தான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாவரையும்) மிகைத்தோனும் ஞானமுடையவனுமாகிய அல்லாஹ்விடமிருந்தேயன்றி இவ்வுதவி (உங்களுக்குக் கிடைக்க) இல்லை. (அவன் உங்களுக்கு இவ்வுதவி புரிந்ததெல்லாம்) நிராகரிப்போரில் ஒரு பகுதியினரைக் குறைக்கவோ அல்லது அவர்கள் சிறுமைப் பட்டு (தோல்வியடைந்தவர்களாக) ஏமாந்து திரும்பிச் சென்று விடுவதற்கோ தான்"

(அல்குர்ஆன் – 3:126,127)

120.
வெற்றித் திருநாள் வெஞ்சமர் 'பத்ர்'
பெற்றிடாப் பயனைப் பெற்ற
பெருமை சேர் "பத்ரின்" தோழர்
முற்றிலா சொர்க்க வாழ்வை
முடுகியே பெறுவதற்காய்
பற்றியே பிடித்திருந்தார்
பரமனின் நினைவை மட்டும்
வெற்றியின் திருநாளாக
வெஞ்சமர் "பத்ரைச்" சொல்வோம்.

121.
ஓ! பத்ரே!
இம்மையே வியந்து போற்றும்
இணையிலா 'பத்ரின்' பேரால்
தம்மையே பாதுகாக்கத்
தருணமாய் வந்த போரே!
செம்மையாய் நோக்கில் 'தீனின்'
செழுமையின் திருப்பமானாய்
நம்மை நல் 'உம்மத்தாக'
நலமுடன் வாழச் செய்தாய்!
('உம்மத் – பின்பற்றியோர்)

122.
ஈமானே உறுதி தரும்.
குறைவுடை குழுவார் தம்மின்
கூடிய தொகையைக் கண்டு
கறைபட சித்தம் நொந்து
கலங்குதல் மடமை காண்பீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவழி "தீனோர்" கொஞ்சம்
ஈசல் போல் எதிர் கொண்டோரை
மறை நபி உறுதியாலே
மாய்த்தனர் அதுவே ஈமான்,

123. சாவின்றி வாழும் சான்றோர்
மூன்று நூற்றோடு பத்தும்
மூவர் முன் ஆயிரம் பேர்
தோன்றுதல் கண்டும் "தீனோர்"
தொடை நடுங்காது சிங்கம்
போன்றுயர் புனித யுத்தப்
பொருளினுக் கெடுத்துக் காட்டும்
சான்றுடைச் செல்வராக
சாவின்றி வாழ்கின்றாரே.

*"பத்ர்" யுத்தத்தில் முஸ்லிம்களில் பதினான்கு பேர்" ஷஹீதாக எதிர் தரப்பில் எழுபது பேர் கொல்லப்பட்டனர். (ஷஹீதாக –புனித போரில் மரிக்க)*

*"(விசுவாசிகளே) அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் செய்து) வெட்டப்பட்டோரை இறந்து விட்டார்களென நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். அவர்கள் நிச்சயமாக உயிரோடு இருக்கிறார்கள் (அன்றி) அவர்கள் இறைவன் புறத்திலிருந்து அவர்களுக்கு ஆகாரமும் அளிக்கப்பட்டு வருகின்றது."*

(அல்குர்ஆன் – 3 – :169)

124. தீயவர் மமதை தீர்ந்தது
தூய இஸ்லாத்தின் சக்தி
தூம கேதுவாய் எழும்ப
தீயவர் மமதை யாவும்
தீர்ந்தன 'பத்ரில்' மாற்றார்
நாயகராக வந்தோர்
நாய்களைப்போல அங்கு
மாயவே மீந்திருந்தோர்
மறைந்தனர் முதுகு காட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*. . . . . அல்லது, (நபியே) நாங்கள் வெற்றி வாகை சூடும் (பெருங்) கூட்டத்தினர் (எங்களுக்கு யாதொரு பயமுமில்லை) என்றும் இவர்கள் கூறுகின்றனரா? அதி சீக்கிரத்தில் இவர்களுடைய கூட்டம் சிதறடிக்கப்பட்டு, (தோல்வியுற்று இவர்கள்)* புறங்காட்டிச் செல்வார்கள்."
(அல்குர்ஆன்–54:43–45)

125. தொடை நடுங்கி
கொடியவனுத்பாவோடு
கொலைஞனாம் அபூஜஹ்லும்
மடியவே தலைவராக
மாறிய அபூசுபியான்
படியவே செய்ய மீண்டும்
படையொடு மதீனா சென்றார்
கடிதென 'ஸவீக்' எனும் போர்
கண்டதும் ஓடி விட்டார்.

*புதிய தலைவர் அபூசுபியான் பத்ரின் படுதோல்விக்குப் பழிவாங்க மதீனாவைத் தாக்கினார். முஸ்லிம்கள் எதிர்க்கவே தன் உணவுக்காகக் கொண்டு வந்திருந்த மாவு மூடைகளைக் கை விட்டு பயந்தோடினார் .மாவுக்கு அறபியில் 'ஸவீக்' என்று பெயர். எனவே இச்சண்டை அப்பெயரைப் பெற்றது.*

126. கண்மணியின் கல்யாணம்
பெண்ணினத்தின் தலைவியென
பெருமையுறு தன் மகளார்
கண்மணியாம் பாத்திமாவைக்
கலைக் குரிசில் அலியவர்க்கு
அண்ணலராம் நபி பெருமான்
அவ்வாண்டிலே இந்த
மண்ணவர்க்கோர் மாதிரியாய்
மண முடித்து வைத்தார்கள்.

*ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு 'பத்ர்' யுத்த வெற்றிக்குப் பின்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இத்திருமணம் நடைபெற்றது.*

127. முதல் நிகழ்வுகள்
புதல்வியர் திருமணத்தின்
புகழுறு ஆண்டு தன்னில்
முதன்முதல் றமழான் நோன்பை
முதல்வனும் விதி செய்தானே
இதமுடன் ஈதுல் பித்ருப்
இன்பமாய்த் தொடங்க மேலும்
மதஅறிவூட்டும் 'குத்பா'
மலர்ந்ததும் இக்காலத்தே.
(ஈதுல் பித்ர்– நோன்புப் பெருநாள்)

128. பழிவாங்கும் மறு படலம்
இனவாத முந்த 'தீனை'
இடித்திடலாமென்ற எண்ணம்
கனவாகப் போனதனால்
கடுஞ்சினங் கொண்ட தீயோர்
அனலினைப் போல் கொதித்து
அணி திரண்டுள்ளா ரென்ற
மனம் வருந்துகின்ற சேதி
மா நபிக்கு எட்டியதே.

129. உஹதிலே உணர்ச்சித் தீபம்
உணர்ச்சியோடெழுந்த தீனோர்
"உஹதெனும்" மலைக் கணித்தாய்
மணங்கமழ் நபிகள் நாதர்
மாண்புடைத் தலைமையின் கீழ்
வணங்குதற்குரியனல்லாஹ்
வழங்கிய மறையின் நீழல்
இணங்கியே இலங்கி நின்றார்
இணையிலா தியாக சீலர்

*"(விசுவாசிகளே) நீங்கள் தைரியத்தை இழந்து விடவேண்டாம் துக்கப்படவும் வேண்டாம். (உண்மையாகவே) நீங்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசங்கொண்டவராக இருந்தால், நீங்கள் தாம் மேன்மையடைவீர்கள்"
(அல்குர்ஆன் -3:139)

130. இலட்சிய நாதம்

மறை மொழி இறையோடுந்தன்
மகிமை சேர் வீர வார்த்தை
இறைவழி நின்றோர் நெஞ்சில்
இலட்சிய நாதமாக
முறையொடு பொருதும் மார்க்கம்
முழுவதும் கூறி நீவிர்
நிறை பிறழாதீர் என்று
நீதராம் நபிகள் சொன்னார்

"நீங்கள் (உஹதில் தோல்வியுற்றுக்) காயமடைந்தால், அதைப்பற்றி அதைரியப்படாதீர்கள் (ஏனென்றால்) அந்த ஜனங்களும் இதைப்போன்றே ('பத்ரில்' தோல்வியுற்றுக்) காயமடைந்திருக்கின்றனர். இத்தகைய சோதனைக் காலம் மனிதர்களுக்கிடையில் மாறி மாறி வரும்படி நாம் தாம் செய்கின்றோம். . . . . . "
(அல்குர்ஆன்-3:140)

131. வீர யுத்தம்

கிடுகிடுவென முழங்கி
கிளம்பிடும் புயலைப் போன்று
முடுகிடு 'காபிர்' சேனை
முன்னெதிர் நின்று தீனோர்
விடுபடு அம்புகள் போல்
வீரமாய்ப் போரும் செய்தார்
திடுதிடுவென சரிந்தார்
தீயவர் பதை பதைத்து
("Kaafir"-இறை நிராகரிப்போர்)

132. திட்டம் பட்டதம்மா!

பலமிழந்தெதிர்த்து நிற்கப்
பயந்திடு பகைவர் தம் போர்க்
கலமொடு உடைமை சேர
களத்திலே விட்டகன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகவே முஸ்லிம் சேனை
விரைந்தது பொருளைச் சேர்க்க
திலகமாம் நபிகள் இட்ட
திட்டமும் பட்டதம்மா!

*"நிராகரிப்போருடைய இதயங்களில், அதி சீக்கிரத்தில் நாம் திகிலை உண்டு பண்ணி விடுவோம். . . . . ."*

(அல்குர்ஆன்:3:151)

133. கறைபடு பொருளில் கவர்ச்சி
இறைவழி செய்த போர்கள்
இகலுடன் முடிந்தபோதும்
மறை புகல் உஹதுப் போரெம்
மனங்களை வேகச் செய்யும்
முறையுடன் நபிகள் ஆணை
முறித்திட முனைந்தமைக்கு
கறைபடு பொருளில் கொண்ட
கவர்ச்சியே காரணந்தான்.

134. ஆணை மீற அவலம் நேர்ந்தது
பின்புறக் கணவாய்ப் பாதை
பிசகறக் காப்பீர் என்ற
அன்புறு நபிகள் கோமான்
அறைந்திடு ஆணை மீறி
துன்புறும் பொருட்கவர்ச்சி
தூண்டவே வீரர் போந்தார்
வன்புற பகைவர் சேனை
வந்து தாக்கிடவே நொந்தார்

*"(விசுவாசிகளே! பத்ர் யுத்தத்தில்) இதை விட இருமடங்கு கஷ்டத்தை நீங்கள் அவர்களுக்கு உண்டு பண்ணியிருந்தும் (இந்த உஹத் யுத்தத்தில்) உங்களுக்கு கஷ்டம் ஏற்பட்ட சமயத்தில் இது எவ்வாறு (யாரால்) ஏற்பட்டது என நீங்கள் கேட்(க ஆரம்பித்துவிட்)டீர்கள். (நீங்கள் உங்கள் அரண்களை விட்டு விலகியதனால்) உங்களால் தான் இது ஏற்பட்டது. நிச்சயமாக அல்லாஹ் யாவற்றின் மீதும் ஆற்றலுடையோனாக இருக்கின்றான்" என்று (நபியே) நீர் கூறுவீராக!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அல்குர்ஆன்:3:165)

"(விசுவாசிகளே) அல்லாஹ்வுடைய கட்டளைப்படி (உஹத் யுத்தத்தில்) நீங்கள் சத்துருக்களைச் சம்ஹாரம் செய்து கொண்டிருந்த சமயத்தில் நீங்கள் விரும்பிய (ஜெயத்)தை,அவன் உங்களுக்குக் காண்பித்தான் பின்னரும், (பொருளைக் கண்டு நபியின் கட்டளைக்கு) நீங்கள் மாறு செய்து, (அவர் உங்களை நிறுத்தி வைத்திருந்த கணவாயிலிருந்து நீங்கி ) அவ்விஷயத்தில் நீங்கள் உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு (தைரியத்தையும் இழந்து) தோல்வியுற இருந்த சமயத்தில், அல்லாஹ் (உங்களுக்கு உதவி புரிந்து) தன்னுடைய வாக்கை நிச்சயமாக நிறைவேற்றி வைத்தான். உங்களில் இவ்வுலகை விரும்புவோரும் உண்டு. ஆகவே உங்களைச் சோதிக்கும் பொருட்டு (அவர்களைத் துரத்திச் சென்ற) உங்களை அவர்களுக்குப் பின்னடையும் படி செய்தான். (இதன் பின்னரும்,) நிச்சயமாக அவன் உங்(களுடைய குற்றங்)களை மன்னித்து விட்டான். ஏனென்றால், அல்லாஹ் விசுவாசிகள் மீது அருள் புரிவோனாக இருக்கின்றான்."

(அல்குர்ஆன் – 3:152)

(அல்குர் ஆனின், 3,153,3:154 வசனங்களையும் காண்க)

உஹத் கணவாயின் பின் புறக் காவலிலிருந்தவரை எக்காரணத்தைக் கொண்டும், போர் முடியும் வரை நகர வேண்டாமென நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். எதிரிகள் பின் வாங்குவதைத் தவறாகப் புரிந்து காவலர் களம் புகுந்தனர். பகைவர் சேனை பின்புறம் வந்து தாக்கியதால் அவலம் நேர்ந்தது.

135. மடிந்தது மக்கள் கூட்டம்
பயந்து பின் வாங்கியோர்கள்
பலன் தரு வழியைக் கண்டு
நயந்து மீண்டெதிர்த்தார் முன்பின்
நடுவினில் குழப்பமான
பயந்தரு நிலைமையாக
பகைவர்தம்மவரென்றில்லா
மயங்கிடும் போர் தொடர்ந்து
மடிந்தது மக்கள் கூட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. பொய் வதந்தி
உத்தம நபிகள் போரில்
உயிர் துறந்தார்களென்ற
சத்தியமில்லாச் செய்தி
சணத்திலே பரந்த போது
சித்தமே கலங்கி தீனோர்
சிதறினர் எனினும் நாதர்
பத்திரமாய் இருக்கக் கண்டு
பலமுடன் மலர்ச்சி பெற்றார்

*". . . . . . . . அவர்இறந்து விட்டால் அல்லது வெட்டப்பட்டு விட்டால் நீங்கள் புறங்காட்டிச் சென்று விடுவீர்களோ? . . . . . ."*
*(அல்குர்ஆன்–3:144)*

137. நபிகள் வாழ்வு நம் வாழ்வு
அண்ணலார் மறைந்தாரென்ற
அதிர்ச்சியாம் செய்தி கேட்டு
எண்ணமெல்லாம் சிதைந்து
ஏங்கியே தவித்தார் தீனோர்
பெண்களும் சேர்ந்து கூட்டம்
பெருங்களம் புகுந்து தேடி
கண்மணி நபியைக் கண்டு
கடுந்துயர் நீங்கினார்கள்

138. திருநபி திருப்தி கண்ட தியாகசீலர்
உடல் பொருளாவி சுற்றம்
உடைமையாம் நபிக்கே என்று
திடமுடன் தியாக சீலர்
திருநபிக் கரணாய் நின்றார்
உடம் பெலாம் கணைகள் பாய்ந்தும்
உளமதில் திருப்தி கொண்டு
புடமிட்ட தங்கம் போன்றோர்
புகுந்தனர் இன்ப சொர்க்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139. மாநபியைக் காக்க மனித அரண்
முனைப்புடன் நபியை வீழ்த்த
முயன்றணி திரண்டார் தீயோர்
தனை எதிர் கொண்டு "தீனோர்"
தடுத்திட சூழ்ந்து மொய்த்து
அனைவரும் அரண்போல் காத்தார்
அஹ்மது நபியைச் சூழ்ந்து
நினைவினை நெகிழ வைக்கும்
நிகழ்வினுக்கீடுமுண்டோ?

140. துயரமே வாட்டுதம்மா!
அக்களம் பட்ட அல்லல்
அறைந்திடில் செந்நீர் சிந்தும்
மக்கமா நபியின் பற்கள்
மறைந்ததுமவர்கள் கன்னம்
பக்கமாய் பகைவர் அம்பு
பட்டதும் அறிந்து உள்ளம்
துக்கமே தோய்ந்து வாடி
துயரமே வாட்டுதம்மா!

141. வெற்றியா? தோல்வியா?
துயருறும் நிகழ்ச்சியன்றி
துட்டரின் நோக்கமேதும்
பயன் தரவில்லையென்று
படுகளம் ஷஹீதானோரை
பயங்கரமாக வெட்டி
பாதகர் சிதைத்துச் சென்றார்
நியமமாய் இதற்கு வேதம்
நீண்டதோர் விளக்கம் கூறும்
("ஷஹீத்–இறைவனுக்காகப் போர் செய்து வீர சுவர்க்கம் புகுந்தோர்)

*திருக்குர் ஆனில் இப்போர் சம்பந்தமாக 3:121, 122, 139–179ஆகிய வசனங்களில் இறைவன் விரிவாகக் கூறியுள்ளான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

142. இதயம் மென்றுமிழ்ந்த இதயமற்றவள்
போர்க்களம் உஹதில் ஹம்ஸா
பொன்னுடல் கிடந்த போது
பார்க்கவே முடியாதிந்த
பழியினைத் தீர்த்தாள் "ஹிந்தா"
யார்க்குமே செய்ய வொண்ணா
யௌவன உடல் பிழந்து
மூர்க்கமாய் மென்றுமிழ்ந்தாள்
முதல்வனாரிதயந்தன்னை.

*அபூசுபியானின் மனைவி 'ஹிந்தா' தன் தந்தையை ஹம்ஸா (றழி) அவர்கள் கொன்றதிற்காக, வஹ்ஸி, என்ற அடிமையிடம் பேரம் பேசி, அவர்களைக் கொலை செய்வித்து அவரின் மார்பைப் பிளந்து, இதயத்தை எடுத்து மென்று துப்பி பழி வாங்கினாள்.*

143. அல்லாஹ் போதுமானவன்
வெஞ்சமர் தன்னில் 'தீனோர்'
வெந்துயர் பெற்ற போதும்
தஞ்சமே அல்லாஹ்வென்னும்
தாரக மந்திரத்தை
நெஞ்சிலே கொண்டு 'தீனின்'
நெறியினில் பலமடைந்தார்
அஞ்சி பின் வாங்கி மக்கம்
அடைந்தனர்க்கமைதியில்லை.

144. அன்புக்குமுண்டோ அளவு
செகமதிலுள்ள காதல்
சேர்த்தொரு தட்டிலிட்டு
முகம்மது நபிமேல் தோழர்
முனைப்புடன் வைத்த அன்பின்
அகங்கையினளவெடுத்து
அடுத்தொரு தட்டிலிட்டால்
தகவுறு தோழரன்பின்
தட்டதே பாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகரை விஞ்ச வழி
நஞ்சினரான யூதர்
நபிகளின் செல்வாக்கைத் தம்
வஞ்சகச் செயலால் மாய்க்க
வழிகளைப் புரிந்தார் உள்ளம்
துஞ்சிய "முனாபிக்கீன்கள்"
துன்பமே செய்தார் மேலும்
விஞ்சிடும் புல்லர் தம்மை
விரட்டிட முனைந்தார் நாதர்
(முனாபிக்கீன்கள்–நய வஞ்சகர்)

146. யூதரின் தந்திரம்! நாதரின் மந்திரம்!
முந்திய உடன்படிக்கை
முறித்து முஸ்லிம்கள் மீது
தந்திரமாக யூதர்
தாக்கிட முனையுஞ் சேதி
வந்ததும் யூதர் காப்பாய்
வாழ்ந்திடும் கோட்டை தன்னை
முந்தியே சென்று சுற்றி
முற்றுகையிட்டார் நாதர்

*பனீ நலீர் கூட்டத்தைச் சேர்ந்த யூதர்கள் முனாபிக்கீன்கள் ஆதரவுடன் முஸ்லிம்களை அழிக்கத் தீட்டிய திட்டம் நபிகளாரின் முன் கூட்டியே பகைவரைத் தாக்கும் உத்தியினால் தவிடு பொடியாகியது.*

*"இவர்களில் எவர்களுடன் நீர் உடன்படிக்கை செய்த போதிலும், அவ்வுடன்படிக்கையை ஒவ்வொரு முறையிலும் முறித்தே வருகின்றனர்: அவர்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்படுவதேயில்லை."*
(அல்குர்ஆன்–8:56)

147. கெட்டொழிந்த கேடர்கள்
நீடிய தோர் முற்றுகை முன்
நின்றெதிர்க்க முடியாமல்
பேடிகளாய் யூதர்கள்
பெருமான் முன் சரணடைந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிழந்து போவதற்கும்
நாணமில்லார் சம்மதித்தார்
கேடிழைத்த கொடியவர்கள்
கெட்டொழிந்து போயினரே

*பலமான கோட்டைக்குள்ளிருந்த "பனூநலீர்" வகுப்பு யூதர்கள்,முஸ்லிம்களின் பதினைந்து மாத முற்றுகையின் பின்பு சரணடைந்து, நபிகளாரின் அனுமதியுடன் கைபருக்கும், சிரியாவுக்கும் இடம் பெயர்ந்தனர்.*

*"(நபியே! பனீநலீர் வகுப்பாராகியயூத) வேதத்தையுடையவர்களில், எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களை, அவர்களுடைய வீடுகளிலிருந்து முதன் முறையாக அவர்களை வெளியேற்றியவன் அவன் தான். . . . . . . . . அவர்கள் தங்கள் கைகளைக் கொண்டே தங்களுடைய வீடுகளை அழிக்குமாறு செய்ததுடன் விசுவாசிகளுடைய கைகளைக் கொண்டும் (அவர்களுடைய வீடுகளை அழித்தான்.. . .)"* (அல்குர்ஆன்–59 : 2)

148. முக்கூட்டு முயற்சி
"தீனவர்" எழுச்சி கண்டு
திகைத்தது பகைவர் கூட்டம்
ஈனராம் யூதரோடு
இணைந்தனர் முனாபிக்கீன்கள்
ஆனதால் நாமும் சேர்ந்து
அழிக்கலாம் "தீனை" என்று
வான மாளிகையமைத்து
வந்தனர் குறைஷியர்கள்

149. மக்கத்தவரை மடக்க மந்திராலோசனை
ஈர் பன்னீராயிரஞ் சேர்
இராணுவத்தார் கொண்ட பெரும்
போரணியோன்றெதிர்க்க வரும்
பொல்லாத செய்தி கேட்டு
சீர் பெருகும் செம்மல் நபி
சிந்தை நொந்து தங்களின் மேல்
ஆர்வமுள்ள தோழருடன்
ஆலோசனைகள் செய்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்றி, (யுத்தம், சமாதானம் முதலிய) மற்ற காரியங்களிலும், அவர்களுடன் கலந்தாலோசித்தும் வருவீராக! . . . ."*

(அல்குர்ஆன் – 3:159)

150. ஊர்காக்கும் உத்தி

பார்ஸி நாடு தந்ததொரு
பரிசெனவே விதந்துரைக்கும்
பேர் பெற்ற ஸல்மானும்
பெருந்திட்டமொன்று வைத்தார்
போர் தடுப்பு அகழிகளை
பொருத்தமான இடமமைத்து
ஊர்காக்கும் உத்தியினை
உத்தமர்கள் ஏற்றனரே.

151. அகழமைப்பில் தடை

நல்லதோர் திட்டமென்று
நபிகளார் நயந்துரைத்து
வல்ல அல்லாஹ்வை வேண்டி
வாழ்த்துரைத்தகழி வெட்டும்
சொல்லரும் வேலை தன்னை
சோர்வின்றி செய்த போதும்
கல்லொன்றெதிர்பட்டங்கே
கடமையைத் தடுத்ததன்றோ

152. பொறி பறந்தது.

கற்றகர்க்க முடியாதங்கு
கவலையுடன் களைப்புற்று
நிற்பாரை அணுகி இறை
நினைவுடனே கருவி கொண்டு
பொற்கையால் நபி அடித்தார்
பொறி பறந்து ஒளிவீச
அற்புதங்கள் தோன்றியதும்
அல்லாஹு அக்பரென்றார்
(அல்லாஹு அக்பர் – இறைவன் மகா பெரியவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153. கல்லும் கதை சொல்லும்
மூன்றடி பட்ட கல்லில்
முப்பிளவுண்டாகியங்கே
தோன்றிய ஒளியினூடாய்
தொன்மை சேர் பாரசீகம்
மேன்மை ஷாமோடு ஏமன்
மேதகு நாடுகள் தம்
கோன்மையின் திறவு கோல்கள்
கொடுப்பதாய்க் கண்டார் தூதர்

*"முதல் அடியில், உரோம மன்னன் கெய்ஸரின் ஷாம் தேச மாளிகையும், அடுத்த அடியில் மதாயின் நகரத்திலுள்ள பாரசீக மன்னன் கிஸ்ராவின் மாளிகையும் கடைசி அடியில் எமன் தேச ஸன்ஆ நகர மாளிகையும், நபிகளாருக்குக் காட்டப்பட்டன. ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வந்து அவைகள் முஸ்லிம்களால் கைப்பற்றப்படும் என நபிகளாருக்கு நன்மாராயம் கூறினார்கள்.*

154. செருக்களம் சென்ற ஜெயசீலர்
நெருக்கடியான நேரம்
நேர்த்தியாய் முன்னறிக்கை
கருத்தனால் கிடைத்த போது
காரண நபி மகிழ்ந்தார்
விருப்புடன் தோழரெல்லாம்
விறலுடன் அகழ் முடித்து
செருக்களம் சென்று 'தீனின்'
செயக் கொடி நாட்டி நின்றார்

155. கைவிட்ட கயவர்கள்
எதிரிகள் தொகையின் எண்ணில்
எட்டிலோர் பங்கு முஸ்லிம்
உதிரமே கொதிக்க ஈமான்
உறுதியோடெதிர்த்து நிற்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிர்ப்புடன் முனாபிக்கீன்கள்
விலகியே செல்லலானார்
மதிப்புறு உடன்பாட்டிற்கு
மாற்றமாய் யூதர் செய்தார்.

*'பனீ குறைலா' யூதக் கூட்டத்தினர் உடன்படிக்கையை மீறி 'பனீ நலீர்' யூதத் தலைவரின் தூண்டுதலால் முஸ்லிம்களைக் கைவிட்டேகினார். தம்மினும் பன் மடங்கு பலமுள்ள பகைவரின் படை கண்டு அஞ்சி தங்கள் வீடுகளைக் காக்க வேண்டுமென்ற பொய்ச் சாட்டுடன் முனாபிக்கீன்கள் பிரிந்து சென்றனர்.*

*"அவர்களில் ஒருகூட்டத்தினர் (மதீனா வாசிகளை நோக்கி) "யத்ரிப் வாசிகளே! (விரோதிகளை எதிர்த்து) உங்களால் நிற்க முடியாது, ஆதலால் நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள்" என்று கூறியதையும், அவர்களில் (மற்றும்) ஒரு பிரிவினரோ, "நிச்சயமாக எங்களுடைய வீடுகள் பாதுகாப்பற்ற நிலையிலிருக்கின்றன" என்று, அவை பாதுகாப்பற்ற நிலையில் இல்லாமலிருந்தும் கூறி, (யுத்த களத்திலிருந்து சென்று விட) நபியிடம் அனுமதி கோரியதையும் நினைத்துப்பாரும். இவர்கள் (யுத்த களத்திலிருந்து தப்பி) ஓடி விடுவதைத் தவிர (வேறொன்றையும் விரும்பவில்லை)"*

(அல்குர்ஆன்–33 :13)

156. ஏகனுக்காக எதையும் செய்வோம்
எத்தகை நிலை வந்தாலும்
ஏகனுக்காக தம்மைத்
தத்தமே செய்வதற்குத்
தருணமே வந்ததாலே
உத்தம நபியின் அன்பு
உளம் நிறை தோழர் 'தக்பீர்'
சத்தமே முழக்கி இஸ்லாம்
சரித்திர புருஷரானார்
(தக்பீர்–இறை மகிமைகூறும் செபம்)

157. விழி பிதுங்கியோர்
காத்திடும் அகழி தன்னை
கடந்திட முடியாதங்கு
நேத்திரம் பிதுங்க நின்ற
நெறி பிறழ் "காபிரீன்கள்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரமாக ஈரோர்
சூரர்கள் கடந்து வந்த
மாத்திரத்தவரை "தீனோர்"
மாய்த்தனர் வீரமாக.

158. சோதனையில் தோல்வி
பேரர் புரிந்திடுவோர்க்குணவு
போதுமட்டின்மையாலே
சோர்வடைந்தார்கள் மேலும்
சோதனையாகக் காற்றும்
மூர்க்கமாயடித்ததாலே
முகங் கொடுத்திடுவதற்கும்
மார்க்கமில்லாது "காபிர்"
மனந்தளர்வடைந்து போனார்.

*"உங்கள் மீது (விரோதிகளின்) படைகள் (அணியணியாக) வந்த சமயத்தில் (புயல்) காற்றையும், உங்கள் கண்ணுக்குப் புலப்படாத படைகளையும் அவர்கள் மீது நாம் ஏவினோம்.. .(அல்குர்ஆன்–33 :9)*

159. உறவைப் பிளத்தல் யுத்த யுக்தி
குறைஷியரோடிருந்த
குழுவினர் "கத்பான்" தலைவர்
மறை நபி அணுகி இஸ்லாம்
மார்க்கமே இணைந்தார் மேலும்
இறை நிராகரிப்போர்க்குள்ளே
இணங்கிய உறவை நீக்கும்
முறைகளைச் செய்து தீயோர்
முதுகெலும்புடைத்தாரன்றே.

*குறைஷியரோடு சேர்ந்து சண்டைக்கு வந்திருந்த, "கத்பான்" கூட்டத்தாரின் பிரபலமான மதிப்பு வாய்ந்த "நயீமிப்னு மஸ்வூத்" என்பவர் முஸ்லிமாகி, எதிரணியிலிருந்த "பனீகுறைலா" கூட்டத்தார், "கத்பான்" கூட்டத்தார்ஆகியோர்களுக் கிடையிலே சாதுரியமாகப் பிளவை உண்டாக்கினார். பலமுடைந்து, மனமுடைந்து எதிரிகள் பின் வாங்கினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. போர் மேகங்கள் கலைந்தன.
இருபத்திரண்டு நாட்கள்
இடையறாதிருந்த யுத்தம்
நெருக்கடி நிறைந்ததாலே
நெஞ்சமே சோர்ந்த தீயோர்
செருக்களம் நீங்கி தம்மூர்
சேர்ந்தனர் தோல்வியோடு
குரு நபி சூழவுள்ள
குறும்பரை அடக்கி ஆண்டார்

*அகழ் யுத்தம் முடிந்ததும் 'பனீ குறைலா' யூதர்க் கெதிராகப் படை நடத்திச் சென்று ஒரு மாத முற்றுகையின் பின்பு, அவர்களைச் சரணடையச் செய்து, அவர்களின் விருப்பின் பேரில் யூதர்களின் வேதக் கட்டளைப்படி,அவர்களுக்கு கடும் தண்டனைகள் அளிக்கப்பட்டன. இவ்வாறே பகைமை பாராட்டிய ஏனைய குழுவினரும் ஒடுக்கப்பட்டனர்.*

161. பிறந்தவூர் தாகம்
சொந்தவூர் நினைவினாலே
சோகமே ஓங்குமுள்ளம்
உந்தவே நபிகள் தோழர்
உத்தரம் வேண்டி நிற்க
தந்தனர் தம்மிசைவை
தருணமாய் புனித நாளும்
வந்ததே என்றுரைத்தார்
வல்லவனன்புத் தூதர்

*தங்கள் பிறப்பிடமான மக்காவை விட்டு மதீனாவுக்கு வந்து ஆறு ஆண்டாகி விட்டதால், ஊரையும், உறவினரையும், காணும் ஆசை அவர்களுக்கு ஏற்பட்டது. புனித யாத்திரைக் காலமும் அதுவாகவிருந்தது.*

162. வருகையை வழி மறித்த வம்பர்
திங்களினொளியின் மேலாம்
திரு நபி தலைமை தாங்க
மங்களமாக "தீனோர்"
மக்கமே பயணமானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களின் வரவை மக்கத்
தலைவருக்கனுப்பி வைக்க
உங்களின் வேண்டுதற்கு
உடன்படோமென்றார் தீயோர்.

*நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து இருபத்தைந்து மைல் தொலைவிலுள்ள "ஹுதைபிய்யா" என்ற இடத்தில் தங்கி, தாங்கள் "உம்றா" செய்ய வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்க, வரக் கூடாதென்ற தடைச் செய்தியை குறைஷியர் அறிவித்தனர்.*

163. உயிர் கொடுக்க உறுதி
பலமுறை தூது சென்றும்
பலனெதும் கிட்டாதந்த
தலமதில் மரமென்றின் கீழ்
தமதுயிர் தியாகம் செய்யும்
பெலமுடை உறுதியான
"பை அத்துர்றிழ்வான்" தன்னை
திலகமாம் நபிகளார்க்கு
திடமுடன் தீனோர் செய்தார்.

('பைஅத்'–'Bai-Ath'-கைகொடுத்து வாக்குறுதி அளித்தல்)

*"அந்த மரத்தினடியில் உம்மிடம் (கைகொடுத்து) வாக்குறுதி செய்த விசுவாசிகளைப் பற்றி நிச்சயமாக அல்லாஹ் திருப்தியடைந்தான். அவர்களின் இதயங்களிலிருந்து (உண்மையான தியாக நோக்கத்தை) நன்கறிந்து, (சாந்தியையும்) ஆறுதலையும் அவர்கள் மீது சொரிந்தான். விரைவான ஒரு வெற்றியையும் (கைபர் என்னும் இடத்தில்) அவர்களுக்கு (வெகுமதியாக)க் கொடுத்தான்."*

(அல்குர்ஆன்–48: 18)

*தூதுவர்கள் பரிமாற்றங்கள் நடந்தன. முஸ்லிம்கள் தரப்பில் சென்ற உதுமான் (றழி) அவர்களும் கூடச் சென்றவரும் கொல்லப்பட்டனர் என்ற தகவலொன்று கிடைத்த போதே இவ்வாக்குறுதிச் சம்பவம் நடந்தது. வரலாற்றில் இது முக்கிய நிகழ்ச்சியாகும்.*

164. உடன்பாடு உதித்தது
கடைசியில் குறைஷியர்க்காய்
கதைப்பதற்கங்கு வந்து
அடைந்திடும் சுஹைல் என்பாரும்
அபிப்பிராயங்கள் கூற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைகளும் பல வந்தாலும்
தனியனின் முன்னோக்குள்ள
கொடை நபி பகைவரோடு
கொண்டனர் உடன்படிக்கை

*குறைஷியரிடமிருந்து தூதுவராக வந்த "ஸுஹைலுப்னு அம்ர்" என்பவருடன் நபி பெருமான் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக "ஹுதைபிய்யா" உடன்படிக்கை எழுதப்பட்டது.*

165. விட்டுக் கொடுத்தல் வெற்றிக்கு வழி
சரித்திரம் பெருமையோடு
சாற்றிடும் ஹுதைபியாவில்
புரிந்திடும் உடன்படிக்கை
புல்லரின் வெற்றியாக
தெரிவதாயிருந்தாலும் ஓர்
தெளிவுடை தீர்க்கமான
தரிசனமாகி இஸ்லாம்
தழைத்திட நபி செய்தார்கள்.

*நபிபெருமானின் சமாதானக் கண்ணோட்டமும், சக வாழ்வுக் கொள்கையும், அறிவு சான்ற அரசியல் நிபுணத்துவமும், தீர்க்க தரிசனமும் இவ்வுடன்படிக்கை மூலம் தெளிவாகியது. வரலாற்றின் முக்கிய திருப்பம் இச்சம்பவமாகும்.*

166. தெளிவான வெற்றி
ஒளிவிடும் நபிகளாரின்
ஓர்மை சேர் உடன்படிக்கை
தெளிவுறு வெற்றியாக
தெரிந்து நந்நபியவர்க்கு
அளித்துளேன் என்றிறைவன்
அருளிய செய்தி கேட்டு
களித்திடும் நெஞ்சார் கூட
சுப மங்களம் ஒலித்தார்.

*(". . . . . . அப்பொழுது நீங்கள் மக்காவில் நுழையாது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உங்களை அவன் தடுத்துக் கொண்டதெல்லாம், ஹுதைபிய்யா உடன்படிக்கையின் மத்திய காலத்தில்) அல்லாஹ்தான் நாடியவர்களை (இஸ்லாம்என்னும்) தன் அருளில் புகுத்துவதற்காகவே. . . .. . . "*
(அல்குர்ஆன் – 48:25)

167. பகைகுறைய மறை வளர்ந்தது
உடன்படு நிபந்தனைகள்
உறுதியாய் நிலைத்த போது
அடங்கிடாப் பகைமை நீங்கி
அமைதியும் நிலவ மேலும்
தொடர்புகள் அதிகரித்து
தோழமை உணர்வு மேவி
திட்மொடு கூட்டமாக
திருமறை நிழலில் சேர்ந்தார்

168 தூது விடு தூதர்
சண்டை சச்சரவு நீங்கி
சகவாழ்வு வந்த போது
அண்டை நாட்டரசர்க்கெல்லாம்
அருமறை அழைப்பனுப்ப
அண்டரும் வாழ்த்துரைக்கும்
ஆண்டவன் தூதர் எண்ண
தொண்டராய் தூதராய் நல்
தோழர்கள் துணிந்து வந்தார்

169. அரசர்க்கு அரு மறை அழைப்புகள்
பலங்கொண்ட ரோம மன்னன்
பகர்ந்திடும் கெய்ஸருக்கும்
நலங் கொண்ட ஹபஸா மன்னர்
நஜ்ஜாஷி என்பவர்க்கும்
இலங்கிடும் எகிப்து மன்னர்
இயம்பிடு முகௌகிஸுக்கும்
குலம் பேசும் பார்ஸி மன்னன்
குஸ்ருவுக்கும் தூது போனார்.

*ரோம, அபிசீனிய, எகிப்து, பாரசீக நாடுகளின் மன்னர்களுக்கு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இஸ்லாத்தின் அழைப்புக் கடிதங்கள் நபிகளாரினால் தூதுவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.*

170. ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு
தூதினை மதித்தார் மூவர்
துர் மனம் படைத்தோன் குஸ்ரு
ஆதியின் தூதர் ஓலை
ஆத்திரத்தால் கிழித்த
சேதியைக் கேட்ட நாதர்
செருக்கனின் ஆட்சியும் சிற்
போதிலே நாசமாகும்
பொறுமையோடிருப்போமென்றார்.

*உரோம அரசர் கெய்ஸர் கடிதத்தை ஏற்று நபி பெருமானாரின் மகத்துவத்தை விசாரித்தறிந்து, மட்டற்ற மகிழ்ச்சியையும், மரியாதையையும் தெரிவித்துக் கொண்டார். எகிப்து மன்னர் முகௌகிஸ் தூதுவரை அன்பாக வரவேற்றுபசரித்து பதில் கடிதத்தையும், பல பரிசுப் பொருட்களையும் நபிகளாருக்கு அனுப்பினார். அபீஸினிய மன்னர் நஜ்ஜாஸீ கடிதம் கிடைத்ததும் நபிகளாரை இறைவன் தூதரென ஏற்று உடன் பதில் கடிதம் அனுப்பினார். ஆனால் பார்ஸி நாட்டு மன்னன் குஸ்ரு கடிதத்தைக் கிழித்தெறிந்தான்.*

171. வரும் விதி வழியில் தங்காது
எங்கள் கண்மணி நருலை
ஏகியே கைது செய்ய
பொங்கியே சினத்தால் குஸ்ரு
போதையால் ஆணையிட்டான்
தங்கடம் வருங்கால் யாரும்
தடுத்திட முடிவதில்லை
துங்க நந்நபியும் வந்த
தூதருக்குரைத்தார் புதினம்

*பெருமானார் அவர்களைக் கைது செய்து வருமாறு, தன் ஆட்சியின் கீழுள்ள எமன் நாட்டுத் தேசாதிபதிக்கு குஸ்ரு ஆணையிட்டான். தூதர்கள் இறைவனின் தூதரிடம் வந்தனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172. மமதை மாண்டது.

பார்ஸி நாட்டரசன் மகனால்
படுகொலையுண்டானென்னும்
பேரிறை செய்தி தன்னை
பெருமானார் கூறி மேலும்
சீர் பெறும் இஸ்லாம் உங்கள்
சிம்ம ஆசனத்திலுள்ள
தூரிலும் சேருமென்று
தூதரை வியக்கவைத்தார்

*குஸ்ரு தன் மகனால் கொல்லப்பட்டான் என்ற தகவல் இறைவனிடமிருந்து நபி பெருமானாருக்குக் கிடைத்தது. அதை நபிகளார் தூதுவர்க்கறிவித்து, பாரசீக அரசையும் விரைவில் முஸ்லிம்கள் கைப்பற்றுவரென்ற தீர்க்கதரிசன வார்த்தைகளையும் சொன்னார்கள். வந்திருந்த தூதர் வியந்தனர்.*

173. சிறை பிடிக்க வந்தோரை மறை பிடித்தது

பிடித்திட வந்தவர்கள்
பீதியால் அதிர்ச்சியுற்று
கடிதினில் தம்மூர் சென்றார்
"காத்தமுன் நபியின்" வார்த்தை
முடிவிலே உண்மை கண்டு
முடுகியே 'ஈமான்' கொண்டார்
படிப்படியாக இஸ்லாம்
பாரினில் பரந்ததம்மா.

*நாடு திரும்பிய தூதுவர் நபிகளாரின் வார்த்தைகள் முழுமையாக உண்மையெனக் கண்டு இஸ்லாத்தைத் தழுவினர் .அவரோடு எமன் பகுதியிலிருந்தோரும் இஸ்லாத்தில் இணைந்தனர்.*

174. கைபர் யூதர் 'சைபர்' ஆனார்

பலமுடன் எழுச்சியுற்று
பரந்திடும் 'தீனைக்' கண்டு
கலங்கிய யூதர் கூட்டம்
கைபரிலிருந்து தாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலவிய செய்தி கேட்டு
உடன் எதிர் கொண்டார் தூதர்
திலகமாம் நபிகளார்க்குத்
தீயவர் சரணடைந்தார்.

*முன்பு மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டோர் அங்கிருந்து இருநூறு மைல் தொலைவிலுள்ள கைபர் என்னுமிடத்தில் குடியேறியிருந்தனர். ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு கைபர் யுத்தம் நடந்தது. இருபது நாள் முற்றுகையின் பின்பு முஸ்லிம்கள் வெற்றி பெற்றனர். இச்சண்டைக்குப் பின்பு யூதரின் தலைவரொருவரின் மகள் 'ஸபிய்யா' அன்னையாரை நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்தார்கள்.*

175.
உம்றாவை நாடி உத்தமர்
தாயகம் விட்டு நீங்கி
தாண்டிய ஏழாம் ஆண்டு
நேய ஒப்பந்தஞ் செய்து
நேர்த்தியாய் ஓராண்டாக
நாயகம் 'உம்றா' செய்ய
நாடினார் 'க:பா' செல்ல
தூய ஈராயிரம் பேர்
தூதரோடிணைந்தாரன்றே.

*(உம்றா—ஹஜ் தவிர்ந்த ஏனைய நேரங்களில் க:பாவில் செய்யும் புனித கிரியை)*

176.
உடன்பாட்டில் உறுதி
புனிதமாம் உம்றாச் செய்து
புகழிறை அருளால் நாதர்
இனியராம் மைமூனாவை
இணக்கமாய் மணமுஞ் செய்தார்
முனிவொடு குறைஷியர்கள்
மூன்று நாள் கழிந்ததாலே
இனி வெளியேறு மென்றார்
இணங்கினார் நேர்மையாளர்

*அன்னை மைமூனா (றழி) அவர்கள் அப்பாஸ்(றழி) அவர்களின்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மைத்துனியாவார். உடன்படிக்கையின் படி நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று நாளின் பின்பு மதீனா திரும்பினார்கள்.*

177. தண்டமே வழி

நீதியாய் செய்து கொண்ட
நிபந்தனை மீறி மேலும்
நீதிழைத்திடுதல் கண்டு
திரு நபி மனம் பொறாது
மோதியே பணிய வைக்கும்
முடிவுடன் செயல் பட்டார்கள்
போதிய படைகள் சூழ
போந்தனர் மக்கம் நோக்கி.

*உடன்படிக்கையை மீறி அநியாயம் செய்து வரும் மக்கா வாசிகள் மீது படுயெடுப்பதை விட வேறு மார்க்கம் நபிகளாருக்கிருக்கவில்லை*

178. நல்வழியில் நாயகர்

வருவோரைத் தடுப்பதற்காய்
வந்த அபு சுபியானும்
திரு நபியோருரையாடி
தீன் வழியில் சேர்ந்ததனால்
உருவான நிலை கண்டு
ஊரிலுள்ளார் வீடொளித்தார்
பெருமானார் எதிர்ப்பின்றி
பெரு மக்க நகர் புகுந்தார்

*ஒன்றும் வழியில்லாத நிலைமையில் பயத்தினாலும், வெட்கத்தினாலும் மக்கத்து மக்கள் அனைவரும் தத்தம் வீட்டுக்குள் ஓடிப் புகுந்து தாளிட்டுக் கொண்டனர். தங்கள் தலைவரும் இஸ்லாமாகியது அவர்களை இன்னும் தலை குனிய வைத்தது.*

179. சிலைகள் குலைந்தன.

அல்லாஹ்வை வணங்குதற்காய்
அமைத்த முதல் ஆலயமாம்
வல்லானின் அருள் சுரக்கும்
வரிசையுள்ள கஃபாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாலாம் சிலைகளும் பொய்க்
கற்பனையின் வரைவுகளும்
நல்லாரின் கைகளினால்
நாசமடைந்தொழிந்தனவே

*"அன்றி, சத்தியம் வந்தது, அசத்தியம் மறைந்தது, நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும், என்று கூறுவீராக!" (அல்குர்ஆன்–17 : 81)*

*இந்த இறை வசனத்தை ஓதிக் கொண்டே, நபி பெருமானார் சிலைகளை கம்பால் தள்ளிச் சாய்த்தார்கள், வரையப்பட்டிருந்த சித்திரங்களும் அழிக்கப்பட்டன.*

180. கஃபாவில் கூவிய கருங்குயில்.
உண்மையே உதயமாச்சு
உரைத்திடும் பொய்களெல்லாம்
திண்ணமாயழியு மென்று
திரு நபி வாக்குமாகும்
கண்ணிய 'பிலால்' அவர்கள்
'கஃபத்துல்லாஹ்' விலேறி
விண்ணெலாம் முழங்க 'பாங்கு'
விளம்பினார் இனிமை சேர.

*அபீஸீனிய கறுப்பு அடிமை கஃபாவிலேறி நின்று, "அல்லாஹ் அக்பர்" என முழங்கியதைக் கேட்ட 'குறைஷிகள்' அளவிலா வருத்தமுற்றனர். முன்பு 'பிலால்'(Bilaal) அவர்களை வெறுத்து அவர்களை என்ன பாடு படுத்தினார்கள் அவர்கள்!*

(Baanku-*தொழுகைக்கழைத்தல்*)

181. குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும்
பெருமையடித்திறுமாப்புப்,
பேராசை பிடித்தவர்கள்
திரு நபிக்கும் "தீனினர்க்கும்"
தீராத தீங்கிழைத்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையற்ற கொடியவர்கள்
கசடர்கள் அனைவருமே
பெருமானார் காலடியில்
பெண்டிரைப் போல் நின்றார்கள்

*சொல்லொணாக் கொடுமைகள் செய்தோர் சொர்க்க நபி முன் தலை கவிழ்ந்து தண்டனைகளுக்குப் பய்ந்து நடு நடுங்கி நின்றனர்.*

182. கூண்டில் குற்றவாளிகள்
தனக்கு முன் அடங்கி நின்ற
தனது குல மக்களுக்கு
சினமின்றி கருணை நபி
சில மொழிகள் கூறலுற்றார்
எனதிடத்திலிருந்து நீவிர்
எதிர்பார்ப்பதென்னவென்று
வினவிடலும் எதிரிலுள்ளோர்
வினயமாய் வேண்டினார்கள்.

183. மன்னிப்பின் சிகரம்
கருணையுள்ள உடன் பிறப்பே
காருண்யரின் மகனே
கருவறுக்காதிரங்கி எமைக்
காத்திடுவீரன்புடனே
உருக்கமுறு வேண்டுதலால்
உளம் நெகிழ்ந்து கண் கலங்கி
திரு நபிகள் இறை பொறுப்பான்
திருந்திடுக என விடுத்தார்

*கொடுமை புரிந்தோரை மன்னித்த இச் சம்பவத்தைப் போல இன்னொன்றை உலக வரலாற்றிலே என்றுமே காண முடியாது.!*

184. பயந்தோடினோர் நயந்துருகினர்
முன்னர் தீங்கிழைத்தவர்கள்
முஸ்லிம்கள் வந்தவுடன்
இன்னல் வந்தெய்துமென்று
இடம் பெயர்ந்தகன்றனரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவர்களனைவரையும்
அழைத்திடுக எனப் பணித்து
மன்னவர் எம் மகிமை நபி
மன்னிப்பு வழங்கினரே.

*அபூஜஹிலின் மகன் இக்ரிமா, சிறிய தந்தை ஹம்ஸாவைக் கொன்ற வஹ்ஷி, ஹம்ஸாவின் ஈரலை மென்றுமிழ்ந்த ஹிந்தா, கருக் கொண்டிருந்த மகள் ஸெய்னபை ஈட்டியால் தாக்கிய அல்ஹுவைரித் ஹப்பார் ஆகியோர் மன்னிக்கப்பட்டோரில் சிலராவார் சகிப்புடன் மன்னித்த அல்லாஹ்வின் தூதரின் மகத்துவம் தானென்னே!*

185. வினைவிதைத்த ஹுனைனர்
பதினைந்து நாளின் பின்பு
பயகம்பர் மக்கம் விட்டு
மதீனாவுக்கேகினார்கள்
மறை பரவும் அழுக்காற்றால்
எதிர்ப்பதற்கு ஹுனைன் தலத்தார்
எழுகின்ற செய்தி வர
கொதிப்புடனே பெருமானார்
கொடும்படையோடங்கு சென்றார்

*மக்காவுக்கும் தாயிபுக்குமிடையில் உள்ளது ஹுனைன் பள்ளத்தாக்கு அங்குள்ளார் 'ஹவாஸின்' எனப்பட்டனர்.*

186. பரமன் துணையின்றேல் படை வலியால் பயனேது?
பல மிக்க படைவலியால்
பகை வெல்லலாமென்று
சுலபமாய் நினைத்தவர்க்கும்
சூசகமாய் அறிவுறுத்த
உலகாளும் இறை நினைந்து
உணர்த்தியதாயமைந்ததுவே
தலமான 'ஹுனைன்' போரில்
தாமதமாய்ப் பெற்ற வெற்றி.

*அனேக ( போர்க் ) களங்களில் (உங்கள் எண்ணிக்கை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாயிருந்தும்) நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்திருக்கின்றான் எனினும் ஹுனைன் யுத்தத்தன்று உங்களை அகமகிழச் செய்து கொண்டிருந்த, உங்களுடைய அதிகமான (ஜனத்) தொகை உங்களுக்கு யாதொரு பயனுமளிக்கவில்லை. . . . " (அல்குர்ஆன்–9 :25)

". . . . உங்கள் கண்ணுக்குத் தெரியாத படைகளையும் (உங்களுக்கு உதவியாக) இறக்கி வைத்து நிராகரிப்போரை வேதனை செய்தான். . . . . . " (அல்குர் ஆன்–9:26)

187. பாகப் பிரிவினையில் பாகுபாடா?
சண்டையின் பேறாய்ப் பெற்ற
சம்பத்தனைத்தையும் தம்
அண்டையிலுள்ளோர்க் கெல்லாம்
அளித்திடும் போது ஆங்கே
கண்டனம் போலும் 'அன்ஸார்
கதைத்திடும் நிலையறிந்து
கொண்டலுங் குடையிடும் நம்
கோமகான் கூறலுற்றார்.

பங்கீட்டில் குறைஷியருக்குக் கூடுதலாக நபி பெருமானார் கொடுத்து விட்டார்களென்று சலசலப்பு ஏற்பட்டது.

188. நபி வேண்டுமா? பொருள் வேண்டுமா?
மறைதனில் புதிதாய் வந்தோர்
மனச் சுமை உள்ளவர்கள்
குறைஷியர்க் களித்த பங்கு
கூடுதற்கேது கேளீர்
நிறைவுடன் விலங்கு சூழும்
நிரையுடன் அவர்கள் செல்வர்
மறை நபி உங்களோடு
மகிழ்ந்திருப்பதுயரிலையா?

குறைஷியர்கள் புதிதாக இஸ்லாமாகி துன்புற்றிருப்பதால், கிடைத்த பொருட்களால் அவர்களைத் தேற்றலாம் என நினைத்தே அவர்களுக்குக் கூடுதலாக அளித்ததாக நபி பெருமான் விளக்கினார்கள். அவர்கள் ஆடுகளையும், ஒட்டகங்களையும், தம்முடன ஓட்டிச் செல்ல, நீங்கள் முஹம்மதை உங்கள் வீட்டுக்குக் கொண்டு போவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிரியப்படவில்லையா?" என அன்ஸாரிகளிடம் வினவி அவர்களை உருகச் செய்தார்கள்.*

189. கற்கண்டாகியது "கல்(பு)"
உரைத்திடும் பெருமானாரின்
உத்தரம் கேட்ட அன்ஸார்
கரைந்திடும் கற்கண்டே போல்
கல்பெலாம் உருகி கண்ணீர்
விரைந்திட அழுது நெஞ்சம்
விம்மியே பணிவாய் நின்று
வரைவிலா அருள் சேர் எங்கள்
வள்ளலே போதுமென்றார்
("கல்பு"(Kalb)-மனம்)

190. வளர்த்த அன்னைக்காக.
சிறு வயதில் பால் கொடுத்து
சிறப்புடனே வளர்த்த தாயார்
சிறுமையில்லா ஹலீமாவின்
சீர் நாமம் முன்னிறுத்தி
மறுக்காது அவர் குலத்தின்
மக்களாம் கைதிகளை
பொறுத்து விடு வித்திடவே
பொன் நபி முன் பணிந்திரந்தார்.

*நபிகள் பெருமானாரை சிறுவயதில் பாலூட்டி வளர்த்த அன்னை ஹலீமா அவர்கள் 'பனூ ஸஃது' கோத்திரத்தைச் சேர்ந்தவர். அம்மாதரசியின் பெயரை முன் வைத்து கைதிகளை விடுவிக்கக் கோரினர். ஹலீமா அம்மையாரின் மகள் "ஷைமாவும்" கைதிகளிலொருவர்.*

191. ஆறாயிரம் பேர் அடைந்தனர் விடுதலை
பேறாகப் பெரும் போரால்
பெற்றவர்கள் கைதிகளாம்
ஆறாயிரம் பேரை
அருமை நபி கருத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாது யாவரையும்
மனமுவந்து விடுவித்தார்
மீறாத அவர் செய்கை
மிகைக்க வரலாறுமுண்டோ!

*அண்ணல் அவர்கள் தன் பங்கிருந்த அனைவரையும் விடுவிக்கவே அதைக் கண்டு ஏனையோரும் தம் பங்கினரை விடுதலைப் பணமின்றி விடுவித்தனர்.*

192. பேரரசின் பேராசை
விரைவாக முஸ்லிம் ஆட்சி
விரிவாகப் பரவக் கண்டு
வரைவிலா பொறாமை கொண்ட
வல்லரசான ரோமர்
கரையிலேயுள்ள 'ஷாமில்'
கனதியாய்ப் படைகுவித்து
தரை தனில் நபியின் நகரை
தகர்த்திட யாவும் செய்தார்

*மதீனாவைத் தாக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு உரோமப் பேரரசன் தன் கீழுள்ள ஷாம் தேச சிற்றரசனுக்குக் கட்டளையிட்டான்.*

193. போருக்காகப் பொருள் தாரீர்
பகைவர்கள் தாக்கு மட்டும்
பார்த்திராதவர்கள் வாழும்
குகையிலே முறியடிக்க
குருநபி எண்ணியாங்கு
தகைமையின் தரத்திற்கேற்ப
தந்திடுவீர்கள் செல்வம்
மிகைத்திடும் வாழ்வும் என்று
மின் முக நபிகள் சொன்னார்

*போருக்காகப் பொருளுதவியும், ஆள் உதவியும், தருமாறு அண்ணல் நபிகள் அன்புக் கட்டளை விடுத்தார்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

194. சொத்தளித்த சொர்க்கவாளர்
அண்ணலார் வேண்டுதற்கு
அடிபணிந்தணர் முஃமீன்கள்
எண்ணரும் படைக்கலங்கள்
ஏறு வாகனங்கள் செல்வம்
திண்ணமாய் இறைவனுக்காய்
திரு நபிக்களிக்கவந்தார்
மண்ணகம் வியர்ந்து போற்றும்
மா பெரும் தியாக சீலர்.
*(முஃமீன் –விசுவாசிகள்)*

195. குடும்பத்தார்க்குடைமை குரு நாதரே.
தத்தமக் கேற்றவாறு
தர்ம யுத்தத்தினுக்காய்
சித்தமே மகிழ்ந்து தங்கள்
சீரிய உடைமை ஈந்தார்
உத்தமரபூபக்கர் தம்
உரித்துடைத்தனைத்தும் நபிமுன்
தத்தமாய்த் தந்து தூதர்
தஞ்சமே செல்வமென்றார்

*செல்வமும், பொருளும், பெருமானாரிடம் வந்து குவிந்தன. ஹஸ்ரத் உதுமான்(றழி), ஹஸ்ரத் அப்துர்றஹ்மானிப்ன் அவ்ப் ஹஸ்ரத் உமர் (றழி) போன்றவர்கள் பலரும் தமது செல்வங்களை வாரி வழங்கினர். ஹஸ்ரத் அபூபக்கர் (றழி) அவர்கள் தமது குடும்பத்துக்காக எதுவும் வைக்காது அனைத்தையுமே அண்ணலாரின் திருச் சமுகத்தில் வைத்தார்கள் 'அல்லாஹ்வும் அவனது தூதருமே என் குடும்பத்தார்க்குப் போதும், என்றும் நவின்றார்கள்.*

196. வாகை சூடிய வள்ளல்
பெரும்படை சூழ வந்து
பெருமானார் 'தபூக்' எனும் ஊர்
இருந்திடும் செய்தி கேட்டு
இதயமே பயத்தால் வாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி பின் வாங்கிச் சென்றார்
வன் மனக் கிறிஸ்தவர்கள்
திருந்தினர் சில பகைவர்
திருநபி வாகை பூண்டார்

". . . . . (தபூக் போன்ற மற்ற யுத்த சமயங்களிலும்) நீங்கள் காண முடியாத படைகளைக் கொண்டு அவருக்கு உதவி செய்து நிராகரிப்போரின் வாக்கை. (நிறைவேற்றாது) கீழாக்கினான். . . . . ."(அல்குர்ஆன் – 9 – 40)

பெருமானார் (ஸல்) அவர்கள் நேரிற் சென்று கலந்து கொண்ட கடைசியான யுத்தம் இதுவே

197. சிலையகன்றும் செயலிலே புனிதமில்லை
புனிதமாம் 'க:.பா' தன்னில்
புகுந்த கற் சிலைகளெல்லாம்
தனியவனில்லமாக்க
தகர்த் தெறிந்திட்ட போதும்
முனிவுடை பாவமான
முன்னைய செயல்களங்கே
இனி நடப்பதைத் தடுக்க
இறை நபி நாட்டங் கொண்டார்

க:.பாவிலுள்ள சிலைகளை அகற்றினாலும், அநாகரிக அனாசாரச் சடங்குகள் அங்கு நடைபெற்று வந்தன. நிர்வாணமாகக் க:.பாவைச் சுற்றி வந்து பாவகரமான செயல்களும் நடந்தன இதைத் தடுக்கவே நபிகளார் முனைந்தார்கள்.

198. சித்தீக் தலைமையில் சீராளர்
தகையுடை அபூபக்கர் தம்
தலைமையில் ஹஜ்ஜு செய்ய
தொகை மூன்று நூற்றுவர்கள்
தொடர்ந்தனர் மக்காவிற்கு
மிகைத்தவன் இறைவன் வேத
மீக்குறு நெறி போதிக்க
பகைவருக்கேறு போன்ற
பண்புறு அலியும் சென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஹஜ்ஜுக்குத் தலைமையாக ஹஸ்ரத் அபூபக்கர் (றழி) அவர்களும், இஸ்லாமியப் பிரச்சாரத்திற்குப் பொறுப்பாக ஹஸ்ரத் அலி (றழி) அவர்களும் நியமனமானார்கள்.*

199. தடையுத்தரவு

இறைவனின் நேசரான
இபுறாகிம் நபிகள் செய்த
முறையிலே ஹஜ்ஜு செய்தல்
முடியுமே தவிர மேலும்
கறைபடு 'காபிர்' ஹஜ்ஜில்
கலந்திடல் தடையாமென்று
நிறை நபி ஆணை தன்னை
நிகழ்த்தினார் அலியார் அங்கே

*"விசுவாசிகளே நிச்சயமாக இணைவைத்து வணங்குவோர் அசுத்தமானவர்களே. ஆகவே அவர்கள் இவ் வருடத்துக்குப்பின்னர் (இனி) சிறப்புற்ற இப் பள்ளியை நெருங்க வேண்டாம். . . . . "*

*(அல்குர்ஆன் – 9:28)*

*திருக்குர்ஆனில் "பராஅத்" என்னும் ஒன்பதாம் அத்தியாயத்திலுள்ள நாற்பது ஆயத்துக்களை ஓதி அலி (றழி) அவர்கள் அறிக்கையை வெளியிட்டார்கள்.*

*('காபிர்–வழிதவறியோர்)*

200. தூது ஆண்டு.

எதிர்ப்புகள் குறைந்து இஸ்லாம்
எங்கணும் பரவ மேலும்
அதிகமாய் தூதின் கூட்டம்
அடைந்தது நபியை நாடி
கதி பெறும் வழி ஈதென்று
களிப்புடன் இஸ்லாமானார்
மதிப்புடன் தூதாண்டென்று
மறை வரலாறு கூறும்

*ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டையே வரலாற்றாசிரியர்கள், "தூது ஆண்டு" எனப் பெயர் சூட்டியுள்ளனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201. கண்டித்த கவியைக் கண்டதும் தண்டிக்குக
அண்டரும் புகழ்ந்துரைக்கும்
ஆதியின் தூதரோடு
தொண்டராய் வாழும் முஸ்லிம்
தோழரை அவதூறாக
பண்டரும் கவிகள் பாடும்
பாவலர் 'கஃபை நாதர்
கண்டதும் கொல்கவென்று
கட்டளையிட்டிருந்தார்

*இஸ்லாத்தையும், தூதரையும், தோழரையும், கண்டித்துப் பாடுவதையே நோக்கமாகக் கொண்ட புகழ் மிக்க கவிஞர் "கஃபிப்ன் ஸுஹைர்" என்பவர் ஆவர். அவருக்கே இத்தண்டனையை நபிகள் வழங்கி இருந்தார்கள்.*

202. வசை படப் பாடியவர் இசைபடப் பாடினார்
வசை கவி பாடி இஸ்லாம்
வைரியாய் வாழ்ந்த 'கஃபு
இசை பட மனந்திருந்தி
இறைவனின் தூதர் முன்னே
பிசைந்திடும் மா போலுள்ளப்
பிணைப்புடன் பொறுதி பெற்று
திசை புகழ் "பானத் சுஆது"
திருப்புகழ் பாடி நின்றார்

*இக்கவிஞர் மறை முகமாக மாநபியை அணுகி, அவர்கள் திருக்கரம் பற்றி மன்னிப்புப் பெற்று அனுமதியுடன் அறபு இலக்கியங்களில் புகழ் பெற்ற, "பானத் சுஆது" எனும் சிறப்பு மிக்க கவிதைகளைப் பாடினார். நபிகளாரின் மேலாடையை அவருக்குப் போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.*

203. மத சுதந்திரம்
ஆதியின் தூதர் விட்ட
அழைப்பினை மதித்து "நஜ்ரான்"
பாதிரிமாரோடுற்றார்
பள்ளியில் தங்கி வேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே ஜெபமும் செய்ய
ஒப்பிலா் நபிகள் கோமான்
நீதியாய் மத சுதந்திரம்
நிலை நிறுத்தியதைப் பாரீர்.

*ஏமன் தேசப் பகுதியிலுள்ள மாநிலம் நஜ்ரான், க.:பாவுக்குச் சமானமாக மதித்த கிறிஸ்தவக் கோயில் அங்கிருந்தது புராதன மதத்தைக் கைவிட விரும்பாத படியால், ஆண்டு தோறும் பாதுகாப்பு வரி தர வந்தவர்கள் ஒப்புக்கொண்டு ஊர் திரும்பினர். பிற மதத்தவருக்கு மதிப்பளித்த இஸ்லாத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.*

204. எத்தர்களின் பள்ளி எரியுண்டது
மறை முகமாக முஸ்லிம்
மத்தியில் பிளவுண்டாக்க
இறை மனை நிறுவினார்கள்
ஈனராம் 'முனாபிக்கீன்கள்'
நிறைந்திடும் தீங்கங்குண்டு
நீரதில் தொழ வேண்டாமென்
றிறைவனின் ஆணை கேட்டு
இதை எரித்தழித்தார் நாதர்

*''எவர்கள் (விசுவாசிகளுக்கு) தீங்கிழைக்கவும், நிராகரிப்பைப் பரப்பவும் விசுவாசிகளுக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணவும் முன்னர் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் யுத்தம் புரிந்தவர்களுக்குப் பதுங்குமிடமாயிருப்பதற்கும், ஒரு பள்ளியை கட்டியிருக்கின்றார்களோ அவர்கள். . . . . . . .*
*"ஆகவே (நபியே) நீர் ஒரு காலத்திலும் (அங்கு போய்) அதில் (தொழ) நிற்க வேண்டாம். . . . ." (அல்குர்ஆன்–9 :107: 108)*

205. தீமைக்கு நன்மை
உளமதில் கரவு கொண்ட
'உபை மகன் அப்துல்லாஹ்வின்'
இளகிய வேண்டுதற்கு
இரங்கியே 'கபனுக்காக'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளம் மகிழ்ந்தமது அங்கி
உதவியே அவரின் "மையித்"
அளவிலே தொழுவித்தார்கள்
அருங் கொடை அஹ்மத் நபியார்

('மையித்' -பிரேதம்) ('கபன்'-kafan-பிரேதத்துக் கணிவிக்கும் உடை)

முனாபிக்குகளான நய வஞ்சகர்களின் முக்கிய தலைவன் அப்துல்லாஹ் இப்ன் உபை. மதீனாவுக்கு பெருமானார் வந்தது முதல் ஒன்பது ஆண்டு வரை இஸ்லாத்திற்குத் தீங்கு செய்வதையே தொழிலாகக் கொண்டவன், எரியுண்ட பள்ளியைக் கட்டியவன் அப்படிப்பட்டவனுடைய வேண்டுதலையும் நிறைவேற்றினார்கள் காருண்ய நபிகளார்.

206. இருபத்து மூன்றாண்டு இறை சேவை
அரபு நாடெங்கும் இஸ்லாம்
அழகுற ஜோதி வீச
நரக வாழ்வோடிருந்தோர்
நானிலத்துயர்ந்திலங்க
பரமனின் தூது தன்னை
பத் தொடு பதின் மூன்றாண்டு
சிரமதில் ஏற்றெவர்க்கும்
சிகராமாய் நின்றார் பூமான்.

207. வள்ளல் நபிக்கு வரவேற்பு
கருணையினூற்றாய் வாழும்
'காத்தமுல் அன்பியா'வும்
திருவருள் க∴பா சென்று
திவ்விய ஹஜ்ஜு செய்ய
பெருந்தொகை மக்கள் சூழ
பெரும்பதி பயணமானார்
வருந்திருத் தூதர் தம்மை
வாழ்த்தியே வரவேற்றார்கள்

(பெரும்பதி–மக்கா, 'காத்தமுல் அன்பியா'–நபிமார்களில் இறுதியானவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

208. அருள் மலை சொரிந்த 'தீனின்' சத்து
அருள் மலை மீது நின்று
அண்ணலார் விடுத்த சேதி
பொருள் நிறை 'தீனின்' சத்தாய்
போதனையாகி தீய
மருள் மிகு மக்கள் மனதில்
மாண்டிடும் கறைகள் நீரில்
உருள் வரும் கல்லின் பாசி
உறை படாதன்ன நீக்கும்.
*(அருள் மலை– அறபாவிலுள்ள 'ஜபலே றஹ்மத்' குன்று)*

209. வெள்ளி நாளன்று வெண்ணுடை தரித்தோர்
வெள்ளி நாள் ஹஜ்ஜுத் திங்கள்
வெண்ணுடை தரித்து நின்றார்
புள்ளியால் லட்சம் மேவி
புண்ணிய கடமை செய்தார்
எள்ளினாரன்று தூாதை
ஏற்பவரெவரிருந்தார்
துள்ளியே வந்து இன்று
தூாதரைப் பணிந்து நின்றார்

210. பரிதி போல் நபிகள் வந்தார்
எத்திசை நோக்கினும் வெண்
எழிலுறு கடல் போல் சூழ்ந்து
பத்தி பொங்கிடுவோர் முன்னே
பரிதி போல் நபிகள் வந்தார்
சத்திய இஸ்லாம் காட்டும்
சமத்துவ காட்சி கண்டு
நித்தியன் தன்னைப் போற்றி
நிகழ்த்திய உரையைக் கேளீர்.

211. இதுவே என் இறுதி ஹஜ்
புனிதமாம் இன்று ஹஜ்ஜு
புகன்றிடில் அடுத்த ஆண்டில்
இனிமையாய் உங்கள் முன்னே
இருப்பதாய் நினைக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனி சிறப்புள்ளதாக
நாடுவீர் மக்கா நகரை
தனியொரு உயிரும் பொருளும்
தகர்த்திடல் வேண்டாமென்றார்

212. பாதகங்கள் புரியாதீர்!
கொலையெனும் பாவமான
கொடுஞ் செயல் தவிர்த்திடுங்கள்
நிலை குலைந்திருந்த நாளில்
நிகழ்ந்ததைப் பழிவாங்காதீர்
இலை இனி வட்டி வாழ்வில்
இறைவனும் கணக்கைக் கேட்பான்
தலை மகள் தனக்கு நீதம்
தந்திடத் தவறாதீர்கள்.
(தலைமகள்–மனைவி)

213. பெண்ணுரிமை
பெண்களுக்குரிமையீந்து
பேணியே நடத்தல் வேண்டும்
கண்களாய் எண்ணி அன்பால்
காத்திடல் கடமையாகும்
பண்பினில் தவறினாலோ
பதனமாய்த் தண்டியுங்கள்
உண்மையாய் மீறினாலோ
உறவினை விடலாமாங்கே

214. அடிமைகளை அரவணைப்பீர்
அடிமைகள் உங்கள் சொத்து
அவர்களை நலமாய்ப் பேணீர்
கடினமாய் நடத்தாதீர்கள்
கடமையாய் ஊணுடைகள்
முடிவிலாதளித்து குற்றம்
முறையுடன் மன்னியுங்கள்
விடிவிலையென்றாலவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை செய்தல் நன்றாம்

215. சமத்துவ சமூகம்
எனதுரை முழுதும் நீங்கள்
எடுத்துணர்ந்திடுவீர் நன்று
இனங்களில் வேற்றுமைகள்
இல்லையெல்லாருமொன்றே
சனங்களில் அறபியர் போல்
சகலரும் சமமாவாரே
சினமொடு அநியாயங்கள்
சிந்தையில் எண்ணாதீர்கள்.

216. சிறப்புறுமிரு பொருள்
சிறப்புறுமிரு பொருட்கள்
சீருடன் உங்களுக்கு
நிறப்பமாய் விட்டுச் செல்வேன்
நீங்கள் கை விட்டிடாதீர்
அறம்பல இறைவன் நல்கும்
அல்குர்ஆனும் சேர
திறந்தரும் எனது 'சுன்னத்'
தீர்க்கமாய்ப் பிடித்திடுங்கள்
*(சுன்னத் –நபிவழிமுறை)*

217. இதயத் தூய்மைக்கு இணையிலா மூன்று
இணையிலா மூன்றாலுங்கள்
இதயமே தூய்மையாகும்
துணை தரும் நன் மனத்தால்
துர்ச்செயல் நீங்க வேண்டும்
இணைந்தொரு "ஜமா அத்தாராய்"
இசைபட வாழ்வீர் மேலும்
அணைந்தவர் நன்மை நாடி
அனைத்தையும் செய்வீர் நன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஜமாஅத் – கூட்டத்தார்)

218. அஞ்சல் செய்வீர்
இங்கு வந்திருப்போரெல்லாம்
இயம்பிய கேட்டீர் வீட்டில்
தங்கியே இருப்பவர்க்கும்
தவறிடாதுரைப்பீர் நன்று
அங்கிருப்போர்கள் நேரில்
அறிந்தவர் விடவும் நெஞ்சில்
தங்கியே பதிவாய் நன்கு
தரித்திட இடமுமுண்டு.

219. அகிலம் வியக்கும் அறபா பிரகடனம்
இறுதியாய் ஹஜ்ஜு செய்ய
இறைவனின் பணியை நாதர்
பொறுதியாய் முடித்தமைக்கு
பொங்கிடும் சனங்கள் தம்மை
அறுதியாய் சாட்சி வைத்து
அருள் சொரி அறபா தன்னில்
உறுதியாய் உபதேசித்து
உயர்ந்தவன் தனை இரந்தார்.

*அண்ணல் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அறபா மைதானத்தில் ஆற்றிய சொற் பெருக்கு மிகவும் பிரசித்தமானது இஸ்லாத்தின் சாரமாகவே அது விளங்கியது அன்று அவர்கள் ஆற்றிய சொன்மாரிஅங்கு சூழ்ந்திருந்தவர்களுக்கு மட்டுமல்ல ஊழியூழி காலம் உலகில் தோன்றும் மக்கட்குரியதாக இருந்தது. முடிவில் சனங்களை நோக்கி, "மக்களே இறைவனின் திருக்கட்டளைகளை நான் உங்களிடம் அறிவித்தேனா, என்று இறைவன் நியாயத் தீர்ப்பு நாளில் உங்களை வினவின் நீங்கள் என்ன விடையளிப்பீர்கள்?" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்."நீங்கள் இறைவனின் திருக்கட்டளைகளை எங்களிடம் அறிவித்தீர்கள், உங்களின் தூய பணியை ஒழுங்குற நிறைவேற்றினீர்கள் என்று சான்று பகர்வோம்"*

*என ஓர் இலட்சத்து இருபத்து நான்காயிரம் தொண்டைகளும் ஒருமித்து முழங்கின. "இறைவனே இதற்கு நீயே சான்று" என நாயகம் முஹம்மத்(ஸல்) அவர்கள் மும்முறை உரக்கக் கூறினார்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இறைவனிடமிருந்து பின்வரும் அருட்செய்தியும் இறங்கியது,*
*" . . . .. நான் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை இன்றைய தினம் பரிபூரணமாக்கி வைத்து விட்டேன் உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையும், தேர்ந்(தெடுத்)து (உங்களுக்கு அருட் செய்து அங்கீகரித்துக்) கொண்டேன். . . . "*
*(அல்குர்ஆன் – 5:3)*

220. மறையொளி மலர்க
நாயகம் அவர்கள் வல்ல
நாயனின் தூதராக
நேயமாய் வந்துதித்து
நேர்த்தியாய் பணிமுடித்து
தீய வாழ்விருந்தோர் நெஞ்சில்
"தீனெனும்" ஒளியை ஏற்றி
தூய தம் வாழ்வும் வாக்கும்
துலங்கிட விரும்பினார்கள்

221. உழைப்பும் களைப்பும்
திரு நபி இறுதி ஹஜ்ஜை
திருப்தியாய் முடித்துத் தங்கள்
அருள் நகர் மக்கா விட்டு
அடைந்தனர் மதீனா தன்னை
கருத்தனின் வணக்கமே தன்
கடமையாய் செய்து வந்தார்
வருத்தமும் தொடர்ந்ததம்மா
வள்ளலும் நலமிழந்தார்

222. "தொழுகை என் கண் குளிர்ச்சி"
உடல் நலக் குறைவிருந்தும்
உயர்ந்தவன் இல்லம் சென்று
திடமுடன் வணங்குதற்குத்
திருநபி தவறவில்லை
நடந்திட முடியா வேளை
நண்ணிய அபூபக்கர்க்கு
இடமளித்திறை வணக்கம்
இயற்றவே ஒழுங்கு செய்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

223. நிறைவுறுமின்பம் வணக்கமே
நிலை நின்று பேரிறையை
நியமமாய்த் தொழுவதற்கும்
தலை நோவும் கடுஞ் சுரமும்
தகித்திடவே தாளாமல்
உலைவில்லாத் தோழரது
உடம்பினை அணைத்து அண்ணல்
நிலை பெறும் வணக்கஞ் செய்து
நிறைவுறு இன்பங்கண்டார்.

*"(நபியே ! உமக்கு) அல்லாஹ்வுடைய உதவியும், (மக்காவின்) வெற்றியும் கிடைத்து அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நுழைவதையும் நீர் கண்டால் (அதற்கு நன்றிசெலுத்தும் பொருட்டு) உமதிறைவனைப் புகழ்ந்து துதி செய்து அவனுடைய (அருளையும்) மன்னிப்பையும் கோருவீராக! நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை அங்கீகரித்து) மன்னிப்புக் கோருதலையும் அங்கீகரிப்பவனாக இருக்கின்றான்." (அல்குர் ஆன்-110:1-3) தொழுகையை ஒழுங்காக நடத்துங்கள், பெண்களிடமும், அடிமைகளிடமும் கருணையோடிருக்க வேண்டும்." (நாயகத்தின் இறுதி உபதேசம்)*

NF 34979

224 அணையா விளக்கு
நோயது அதிகமாக
நொதுமலர்க்குபதேசித்தார்
வாயது மேலாம் தோழன்
வல்லவன் என்றுரைக்க
நாயகி ஆயிஷாவின்
நறுமண மடியின் மீது
தூய தம் தலையை வைத்து
தூதரும் அமைதியானார்

225. நித்திய வாழ்வடைந்தார்
மறையவன் தூதை ஏந்தி
மாநிலம் வந்து மக்கள்
கறையினை நீக்குதற்காய்
கடும் பணி முடித்து நாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனென் தோழனென்று
இருகரமுயர்த்திக் கூறி
நிறை மனதுடனே சொர்க்கம்
நித்திய வாழ்வடைந்தார்

*கைகளை உயர்த்தி "இறைவனே மேலான தோழன்" என மும்முறை இறுதியாய் கூறி, கண்களை மூடினார்கள் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஜ்ரி பதினோராவது ஆண்டு றபீஉல் அவ்வல் மாதம் 12ம் திகதி(கி.பி.632)தமது அறுபத்து மூன்றாவது வயதில் அவர்களின் உயிர் உலகை விட்டு நீங்கிப் பரிசுத்தமான உலகத்திற்குச் சென்றது (இன்னாலில்லாஹிவ இன்னா இலைஹி ராஜி ஊன்)*

226.
இடியேறுண்ட நாகங்கள்
நம்பிட முடியாதங்கே
நாயகத் தோழர் சூழ்ந்தார்
வெம்பியே அவர்கள் பட்ட
வேதனை விளம்பலாமோ
நம் பிரான் மறைந்தாரென்று
நவின்றிடின் கொல்வேனென்று
எம்பியே குதித் தெழுந்தார்
ஏறென உமரே பாரூக்

*"நாயகம் காலமானார்களா?" என நம்ப முடியாதவர்களாய் தத்தளித்தனர். அதனாலேயே ஹஸ்ரத் உமர் (றழி)அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் காலமானார்கள் என யாராவது சொன்னால் சொன்னவரின் தலையைத் துணிப்பேன்" என ஆவேசப்பட்டார்கள்.*

227.
இறைவன் நியதி
சாந்தமே உருவாய் வந்த
சத்திய அபூபக்கர் தம்
காந்தமாய் ஈர்க்கும் சொற்கள்
கழறினர் சோதரர்க்கு
ஏந்தலும் பணிமுடித்து
ஏகினர் உலகில் தோன்றும்
மாந்தர்கள் மடிந்து போதல்
மறையவன் நியதி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஹம்மத் (நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) ஒரு தூதரேயன்றி, (இறக்காமல் இருக்கக் கூடிய ஆண்டவன்) அல்ல. அவருக்கு முன்னரும் (இவ்வாறே) தூதர் பலர் சென்றிருக்கின்றனர். . . . . . ." (அல்குர்ஆன் – 3:144)

மேற்குறித்த திரு வசனங்களைக் கூறி அபூபக்கர் சித்தீக் (றழி)அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் முடிவை விளக்கிக் கூறினார்கள்.

228. கருகிய நெஞ்சங்கள்
உருவிய வாளெடுத்த
உத்தமர் உமரவர்கள்
பெருகிய கண்ணீர் சேர
பெருமகன் வார்த்தை கேட்டு
உருகியே உளம் பதைத்து
உடன் விழுந்தரற்றினார்கள்
கருகிய நெஞ்சோடங்கு
கடலெனத் திரண்டார் மக்கள்

229. இகத்தின் சக்தி இஸ்லாம்
கருணை சேர் எங்கள் நாதர்
கண்களை மூடினாலும்
இருமையும் இனிமை சேர்க்கும்
இணையிலா வழியைக் காட்டும்
அருள் விளக்கெழுந்த ஜோதி
அணைந்திடாதென்றும் வீசும்
பெருகியே 'தீனின்' வாழ்வு
பெருஞ் சக்தியாக நீளும்

நாயகம் (ஸல்)அவர்கள் ஏற்றிய இஸ்லாமிய ஜோதி அணையாது மேலும் மேலும் சக்தியோடு பரவிக் கொண்டேயிருக்கும் அவர்களின் வாழ்வும் வாக்கும் வழி காட்டும் ஒளித் தீபமாக அனாச்சாரங்களை அகற்றிக் கொண்டேயிருக்கும். திருத் தூதருக்கும் தோழர்களுக்கும் சுப சோபனங்கள் முழங்கிக் கொண்டேயிருக்கும். திருத் தூதரின் திருப் புகழை உலகம் முடியும் வரை பாடிக் கொண்டேயிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

230. உலகின் இதயமும் அதில் பாயும் குருதியும்
உயர்வுடை க:பா இந்த
உலகினுக்கிதயமாகும்
பெயருறு 'நபவி' அங்கே
பெருகிடும் குருதியாகும்
நயம் பெற 'ஹஜ்ஜு' "உம்றா"
நாடியே செல்பவர்கள்
பயனடைந்திடுவாரங்கே
படைத்தவனருளுங்கிட்டும்

231. திண்ணமாய்த் தரிசிப்போர்க்குக்
திருவருள் கிட்டுமுண்மை
கண்ணிலே நீர் சொரிந்து
காதலால் கசிந்து நின்று
எண்ணமே தூய்மையாக
எழிலொடு சலாமும் கூறி
மண்ணிலே மறைந்துறங்கும்
மாநபி 'றவ்ழா ஷரீபை'
திண்ணமாய்த் தரிசிப்போர்க்குத்
திருவருள் கிட்டுமுண்மை.

*('றவ்ழா ஷரீப்–நபிகள் நாயகம் அடக்கமாயிருக்கும் இடம்)*
*"ஓ! மதீனாவைக் காண ஆவலுறும் மக்களே! உங்கள் உடலை விட்டு உயிர் பிரியுமுன் மதீனாவுக்குச் செல்லுங்கள். அங்கே நபிகள் நாயகம் அவர்களின் நல்லுடல் அடங்கியிருக்கும் திருவிடத்துக்குச் செல்லும் வழியைக் கண்டு, விரைந்து சென்று உங்கள் வாகனங்களாகிய ஒட்டகங்களை அங்கே நிறுத்துவீர்களாக."*
*(ஹஸ்ரத் ஸதக்கத்துல்லாஹ் அப்பா (ஒலி)அவர்கள் பாடிய 'வித்ரியா' என்னும் அறபி நூலிலுள்ள கருத்து)*

232. நித்தியன்றனை வணங்கி முத்தியைப் பெறுவீர்
இத்தரை மீதுதித்த
இறை நபிமார்களுக்கு
முத்திரையான முத்து
முஹம்மது நபியின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமும் "ஸலவாத்" ஓதி
நித்தியன்றனை வணங்கி
முத்தியைப் பெறுதலே நம்
முக்கிய கடமையாகும்.
*("ஸலவாத்"— நபிமணிமேல் புகழ்)*

233. நபி முறை பற்றியோர்க்கு நற்சிறப்புண்டு
பாரினில் நபி முறைகள்
பற்றியே பிடித்தவர்க்கு
நேரிடாதென்றும் துன்பம்
நேர்த்தியாய் வாழ்வுமுண்டாம்
ஊரினில் வீட்டில் நாட்டில்
உலகினில் நபி பொருட்டால்
சீரிறை அருள் சுரந்து
சிறப்புறுமுண்மை காண்பீர்

234. தூய நந்நபியின் வாழ்வில் துலங்குக
உலகெலாம் படைத்துக்காக்கும்
உருவமில்லிறைவன்றன்னை
நலமுடன் வணங்குதற்காய்
நற்றவப் பேறுமீந்தான்
பலமுடன் ஈமான் கொண்டு
"பல்லமல்" வழியில் நின்று
துலங்கிட எனப் பணித்தான்
தூய நந்நபியின் வாழ்வில்
*("பல்லமல்"—பல நற்கிரிகைகள்)*

235. சாதனை மூலம் நீதனை வணங்குக.
போதனை மட்டுமன்றி
போற்றிடும் தனது தூய
சாதனை மூலம் வாழ்வின்
சத்திய வழியைக் காட்டி
சோதனை வந்த போதும்
சோர்விலாதகத்தைக் காத்து
நீதனை வணங்குமாறு
நிலைபெறும் வழியுந்தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

236. ஒருவனே தேவன்
வணங்குதற்குரித்தாயுள்ள
வல்லவன் ஏகனின்றி
இணங்கிடும் வேறு தெய்வம்
இல்லையே இல்லையென்று
குணங்களில் இறை நம்பிக்கை
குறைவற நிலைக்கும் வாழ்வும்
மணங்கமழ்ந்திலங்கு மென்று
மாநபி காட்டிச் சென்றார்

237. வள்ளலார் வாக்கில் வழியும் கல்வியூற்று
வள்ளலார் மகிமை சேரும்
வான் புகழ் வாழ்வை நோக்கின்
உள்ளமே கனிந்து பாகாய்
உருகிடும் நிலையிலாவோம்
தெள்ளமுதாய் விளங்கும்
தேனினுமினிமை சேரும்
கள்ளமில்லாத வாக்கில்
காணலாம் கல்வியூற்றை.

238. கருத்திழந்த வேளை கருதுக நபிகள் சொல்லை
எண்ணிலா துன்பம் சூழும்
எச்சிலாம் வாழ்க்கைச் சேற்றில்
கண்ணிலார் போலுழன்று
கருத்திழந்திருக்கும் வேளை
அண்ணலார் சொல்லைக் கொஞ்சம்
அணுகியே பார்ப்போமாயின்
திண்ணிய இன்பத் தெம்பும்
திகழ்ந்திடும் பண்பும் சேரும்.

239. தூயவன் நினைவே துணை
நெஞ்சிலே ஈரமின்றி
நேர்மையும் சிறிதுமின்றி
மிஞ்சிடும் பாதகங்கள்
மிகைத்திருந்தோராய் மண்ணில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஞ்சிடும் மாந்தர் தம்மை
தூயவன் நினைவாலீர்த்து
அஞ்சியே தொழுது வாழ
அருள் நபி வழி வகுத்தார்.

240. நன்னயக் குர்ஆனே நாயகம் வாழ்க்கை
முன்னவன் தூதரான
முஹம்மது நபியின் வாழ்வு
என்னவாறிருந்ததென்ன
எண்ணியே கேட்ட போது
நன்னயக் குர் ஆனாக
நாயகம் வாழ்ந்தாரென்று
அன்னமாம் ஆயிஷாவின்
அருள் மொழி எமக்குப் போதும்.

241. மாநபி வாழ்வில் மானிதம் வாழும்
மானிதமொழிந்து மக்கள்
மாக்களாய் வாழ்கின்றார்கள்
ஏனிது வந்ததென்று
ஏடுகள் பல சொன்னாலும்
வானிலும் உயர்ந்த வள்ளல்
வாழ்வினை விட்டு மாயக்
கானிலே சென்று வீழும்
காரணமென்றுரைப்பீர்.

242. நபியை நாடு ! நல்வாழ்வு தேடு!
வாயினால் மறை மொழிந்து
வழக்கினிலில்லையாயின்
நாயினும் இழிவாம் தீமை
நாடியே வந்து சேரும்
மாயினும் மறுமை வாழ்வும்
மகிமையில்லாது போகும்
தாயினும் அன்பு மேவும்
தனியவன் நபியை நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

243. முத்து மா முஹம்மதுக்கு முற்றிலும் தஞ்சம்
எத்துறை சேர்ந்தவர்க்கும்
ஏற்ற நல் படிப்பினைகள்
தத்துவ ரீதியன்றி
தன் செயல் முறையால் காட்டும்
வித்துவ சத்தாய் ஜோதி
வீசிட வாழ்ந்த எங்கள்
முத்து மா முஹம்மதுக்கு
முற்றிலும் நாமே தஞ்சம்

244. குர்ஆனைக் கையில் ஏந்துக.
நானிலம் சிறக்க எங்கள்
நாயகம் தூதாய் வந்து
வானிலும் உயர்ந்த போதம்
வாழ்வினில் பேணுதற்காய்
தேனினும் சுவையின் மேலாம்
தெளிவுரை குர்ஆன் ஈந்தார்
ஏனினும் தயங்குகின்றாய்
ஏந்திடு கையில் குர்ஆன்

245. உத்தம நபியை நாடில் உலகம் போற்றும்.
பித்தராய்ப் பேயராகி
பிதற்றிடும் நாகரிக
எத்தர்கள் பின்னே சென்று
எய்திய பலன்தானென்ன
சித்தமே கலங்கி வாழ்வை
சீர்குலைத்திடுவதேனோ
உத்தம நபியை நாடில்
உலகமே உன்னைப் போற்றும்.

246. பிளவதில் வால் புகுந்த பிங்கலமாகாதே!
அளவினில் மிஞ்சி விட்டால்
அணை தகர் வெள்ளமாக
மளமளவென்றே துன்பம்
மண்டியே வந்து சேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமதில் இறைவன் அச்சம்
உடனுதித்திடாது போமின்
பிளவதில் வால் புகுந்த
பிங்கலமாவாய் திண்ணம்.

247. போற்றி
அனைத்தையும் படைத்துக்காக்கும்
அல்லாஹ்வின் நாமம் போற்றி
முனைப்புடன் உள்ளம் வாழும்
முஹம்மது நபியைப் போற்றி
மனையறம் காத்த நாதர்
மனைவியர் குலத்தார் போற்றி
நினைத்திடும் நபிகள் தோழர்
நிலைத்திடும் நாமம் போற்றி

248. போற்றி! போற்றி!
உலைவிலா நபி தொடர்ந்தோர்
உடன் தொடர்ந்தோர்கள் போற்றி
அலைகடல் ஆழம் போன்ற
அறிவுளோர் தம்மைப் போற்றி
நிலைபட வேதங்கற்ற
நிறை 'உலமாக்கள்' போற்றி
தலைவனை நிதமும் பேணி
தலை வணங்கிடுவோர் போற்றி
('உலமாக்கள்'–மத அறிஞர்கள்)

249. போற்றி! போற்றி! போற்றி!
பெருகிடும் 'இல்மைத்' தந்த
பேணுமாசான்கள் போற்றி
உருகியே எமை வளர்த்த
உயர்வுடை பெற்றார் போற்றி
அருகிருந்தெமக்கு நல்ல
ஆதரவளித்தோர் போற்றி
தெருவெலாம் முழங்க இன்பத்
தேன் மொழி தமிழே போற்றி
*(இல்ம்–கல்வி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250. மக்கத்து மலரே போற்றி!
மதீனத்து மணமே போற்றி!
மக்கத்து மலரே போற்றி
மதீனத்து மணமே போற்றி
பக்கத்து வாழும் ஆசைப்
படைப்பினும் மேலாய் போற்றி
துக்கத்து மறுமை நாளில்
துயர் அகன்றிட அல்லாஹ்வை
மிக்கவே "துஆ" இரந்து
மீட்சியைத் தருவீர் போற்றி!
("துஆ"-Dhuaa- பிரார்த்தனை)

*"எங்கள் இறைவனே! (எங்கள் சேவையை) எங்களிடமிருந்து நீர் ஏற்றுக் கொள்வாயாக நிச்சயமாக நீ, செவியுறுபவனாகவும், நன்கறிந்தவனாகவும் இருக்கிறாய்"*

*"இறைவனே, என் கல்வி ஞானத்தை(ப் பின்னும் பின்னும்) அதிகப்படுத்துவாயாக."* *(அல்குர்ஆன்–20 :114)*

*"ஸல்லல்லாஹு அலா முஹம்மத்*
*ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்"*
*ஸல்லல்லாஹு அலா முஹம்மத்*
*யாறப்பி ஸல்லிஅலை ஹிவஸல்லிம்"*

02 JUN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞரைப் பற்றி.....



கவிஞர் அவர்கள் எனது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய ஆசிரியர் ஆவார்கள். சமய, கலை, கலாசார, சமூகப்பணிகளில் பல காலமாகப் பணியாற்றி வருகின்றார்கள். பல நூல்களை ஆக்கியுள்ளார்கள். 'இட வரலாறும் பண்பாடும்' என்ற துறையில் 'புத்தளம் வரலாறும் மரபுகளும்' என்ற அவர்களின் நூலுக்கு 1994ல் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்துள்ளது. 1996ல் (இவ்வாண்டில்) அரச கரும மொழிகள் திணைக்களத்தின் விருதும் பணமுடிப்பும் கிடைத்துள்ளன. அத்துடன், சிறந்த பூரணத்துவமான நூலமைப்புக்கான சாகித்திய மண்டலப் பரிசும் இந்நூலுக்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலாக்கப் பரிசிலையும் பெற்றுள்ளார்கள்.

தேசிய மட்டத்தில் பல கவிதையாக்கப் போட்டிகளில் முதற் பரிசில்களைப் பெற்றுள்ள அவர்கள் தமது முதலாவது கவிதை நூலாக இந்த நூலை வெளியிட்டுள்ளார்கள்.

முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு 1993ல் 'இலக்கிய வேந்தர்' எனப் பொருள்படும் 'தாஜுல் அதீப்' என்னும் பட்டத்தையும் அளித்து கௌரவித்துள்ளது.

புத்தளம் மத்திய மீலாத் மன்றத்தினர் அவர்களுக்கு 'கலை விற்பன்னர்' என்ற பட்டத்தையும் வழங்கியுள்ளனர்.

அவர்களின் சேவை மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அல்ஹாஜ் எம்.எஸ்.எம். நிஸாம்**
பிரதிப் பொலிஸ் மா அதிபர்

Cover Design by : Azeez Nizardeen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955 - 95450 - 1 - 9